# முரசொலி

## அண்ணா மலர் 1970



விலை ரூ.1

# வீட்டு நலமே நாட்டு நலம்

★

இன்பமும் நலமும் இல்லத்தில் நிறையும்
மனைவியும் மக்களும் மகிழ்ச்சியில் திளைப்பர்
வலிவும் பொலிவும் குழந்தைகள் பெறுவர்
சமூக சூழ்நிலை வளர்ச்சிக்கு உதவ
செம்மைக் கல்வியால் வாழ்வு சிறக்கும்!

## குடும்ப நலத்திட்டம் விளைத்திடும் பயன் இவை!

உங்களுக்கு அருகிலுள்ள அரசினர் மருத்துவ நிலையத்திற்கோ குடும்பநல நிலையத்திற்கோ சென்று இலவசமாகக்கிடைக்கும் தகவல்களையும் சேவைகளையும் பெறுக!

அடுத்தடுத்து பிள்ளைப் பேற்றைத் தடுத்து
தாய்மாரின் நலத்தைத் தக்கபடி காத்திடுக!

வருமான வளத்துக்கேற்ப குடும்பத்தை
வரையறுத்துக் கொள்ளுங்கள்!

சீரும் செழிப்பும் நிலைத்திட மக்கள் பெருக்கத்தைக்
கட்டுப்படுத்துவோம்!

## தமிழகத்தின் சாதனை!

குடும்பநல அறுவை சிகிச்சை எண்ணிக்கை தமிழகத்தில் பெருகி வருகிறது. ஆடவரும் பெண்டிருமாக இங்கு இதுவரை 9,20,000 பேர் அறுவை சிகிச்சைசெய்து கொண்டுள்ளனர். 95,000 பேர் வரை லூப் வளையம் பொறுத்திக் கொண்டுள்ளனர்.

"குடும்ப நலத்திட்டம்
வளவாழ்வுத் திட்டமாகும்"

"அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்"

வெளியீடு:

**சுகாதாரம் - குடும்ப நலத்துறை**
**இயக்குநர் அலுவலகம், சென்னை-17.**



## அண்ணன் காலடி மலர்களுக்கு இந்த மலர் காணிக்கை!

அண்ணனே,

உனக்கு இன்று 62-வது பிறந்தநாள் அல்லவா? அதிகாலை 5 மணிக்கெல்லாம் எழுந்து, குளித்து, விரைவாக உடையுடுத்தி, புத்தம் புதிய இந்த ரோஜா மாலையினை உனக்கும், மல்லிகை மாலையினை அருமை அண்ணியாருக்கும் என்று சுமந்துகொண்டு ஓடோடி வந்துள்ளேன். எனக்கு ஒரே ஆசை காலை 6 மணிக்கு நின் கழுத்தை அலங்கரிக்கும் முதல் மாலை என் மாலையாக இருக்கவேண்டும்; உன்னை வணங்கி எழும் முதல் தம்பி நானாக இருந்திடவேண்டும்; அண்ணனே வாழ்க பல்லாண்டு என வாழ்த்தும் முதல் வாய் என்னுடைய வாயாக இருத்தல் வேண்டும்; நின் கனிந்த புன்முறுவல் பொதிந்த குளிர் பார்வை முதலில் என் மீது விழுந்திட வேண்டும் என்பதுதான்.

வழக்கம்போல் முரசொலி ஏடு பல புதுமைகள் மிளிர அண்ணா மலர் வெளியிட்டுள்ளது; அதனை நின் காலமலர்களில் படைத்திட நின் அருமைத் தம்பி மாறன் வந்து நிற்கின்றான்.

ஏற்றருள்க ஏந்தலே,
எழுந்தருள்க அண்ணனே!

-மு. கருணாநிதி



# உள்ளத்தில் நடமாடும் உருவம்

**கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன்**



பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் நினைவு மலரை மிக அழகாகவும், ... 'முரசொலி' முயற்சி எடுத்திருப்பது மிக்க மகிழ்ச்சியோடு வரவேற்கத்தக்கதாகும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்து ஒன்றரை ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. பேரறிஞர் அண்ணா அவர்கள் நம் கண்முன் நடமாடவில்லையே தவிர அவர் எப்பொழுதும் நம் உள்ளத்திலே நடமாடிக் கொண்டே இருக்கிறார். அவர் அறிவுறுத்திய அறிவுரைகள், சொல்லிக் கொடுத்த வழிகள், குறிக்கோள்கள் நம் உள்ளத்தில் ஆழப் பதிந்திருக்கின்றன.

அறிஞர் அண்ணா அவர்கள் நம்மைவிட்டு அகன்றுவிட்டார் என்ற உணர்வு ஏற்படாத வகையில் அவரைப் பற்றிய நினைவு, நமக்கெல்லாம் இடையறாது இருந்துகொண்டே இருக்கிறது.

நானும் மாண்புமிகு கலைஞர் அவர்களும் மற்ற கழக முன்னணியினரும், எண்ணற்ற கழகத் தோழர்களும் தி. மு. கழகத்தையும்—தி.மு. கழக ஆட்சியையும் நடத்திச் செல்ல முடிகிறது என்றால் அதற்கு அடிப்படைக் காரணம் பேரறிஞர் அண்ணா அவர்கள் தம்முடைய அறிவுத் திறனாலும், ஆற்றல் திறனாலும், பண்பாட்டுத் திறனாலும் வகுத்துத் தந்து சென்ற உணர்வுமே ஆகும்.

பேரறிஞர் அண்ணா இருந்தால் எப்படி கழகம் இயங்கி வருமோ எப்படி கழக ஆட்சி நடைபெறுமோ அதேபோன்று கழகமும், கழக ஆட்சியும் வெற்றி நடைபோட்டு சென்று கொண்டிருக்கின்றன. என்றென்றும் வழிகாட்டியாக இருந்து எல்லோரையும் ஊக்குவிக்கும் ஒரு பெரும் தலைவர் பேரறிஞர் அண்ணா ஆவார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிக்கொடுத்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற பண்புகளை நமக்குரியனவாக ஆக்கி—கழகத்தை முன்னிறுத்தி—நம்மையெல்லாம் கழகத்துக்குப் பின்னால் நிறுத்திவைத்து நம்முடைய பணிகளைத் தொடர்ந்து—செம்மையாக ஆற்றிச் செல்லுவோமாக.

பேரறிஞர் அண்ணா அவர்களின் புகழும்—பெருமையும்—என்றென்றும் நின்று நிலைபெறுவதாக! வாழ்க அறிஞர் அண்ணாபுகழ்! வளர்க அவர்தம் தொண்டு!



# அண்ணா வழியில் அயராது உழைப்போம்!

**கூட்டுறவுத் துறை அமைச்சர் சி.பா. ஆதித்தனார்**

மாநில சுயாட்சி மாநாட்டையொட்டி நடந்த ஊர்வலத்தில் அன்று நாம் எல்லாம் முழங்கியது — 'அண்ணா வழியில் அயராது உழைப்போம்' என்ற முழக்கமாகும்.

மாநில சுயாட்சித் தத்துவத்தைப் பற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் எத்தனையோ முறை குறிப்பிட்டிருந்தாலும், அவர் நோய்வாய்ப்பட்டிருந்த போதுதான் அதைப் பற்றி மிகவும் தெளிவாகப் பல முறை கூறினார்கள்.

எடுத்துக்காட்டாக 1968ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 27ஆம் தேதியன்று ஒரு நாளேட்டின் வெள்ளி விழாவில் பேசும்போது அண்ணா அவர்கள் கீழ்க் கண்டவாறு சொன்னார்கள்.

''தமிழ் மொழிக்கு எந்த முறையிலும் எவரேனும் ஊறு விளைவித்தால் தமிழக மக்கள் கிளர்ந்தெழுவர்! இந்த உண்மை அண்மைக் காலத்தில் உணரப்பட்டிருக்கிறது. அந்த அறப்போர் முடிந்துவிட்டதாக நான் கருதவில்லை. அந்த அறப்போரினைத் தொடர்ந்து நடத்த வேண்டிய நிலையில் மொழி ஆதிக்கக்காரர்களின் மனப்பான்மை இன்னும் இருந்து கொண்டிருக்கிறது.

''தமிழ்நாட்டுக்கு உரிய நிலை, உரிய வளர்ச்சி கிடைக்க—எல்லா அதிகாரங்களையும் இந்தியப் பேரரசில் குவித்து வைக்கப்பட்டிருக்கிற இந்திய அரசியல் முறை மாற்றப்பட வேண்டும்.

''அந்தப் பெரிய காரியம் நம்முடைய காலத்தில் ஐந்தாண்டிலோ பத்தாண்டிலோ முடியுமா அல்லது அதற்கும் தமிழர்கள் போராட வேண்டி வருமா? என்பது, டெல்லியில் எந்த அளவு ராஜ தந்திரம் இருக்கிறது என்பதைப் பொறுத்திருக்கிறது.

''கையிலிருக்கும் ஐந்து விரல்களுக்கிடையில் ஏற்றத் தாழ்வுகள் இருப்பினும் எந்த ஒரு முக்கியக் காரியத்தையும் இணைந்தே செய்கின்றன. இதைப்போலத்தான் மத்திய—மாநில உறவு இருக்க வேண்டும்.''

இவ்வாறு, அதிகாரக் குவிப்புக் குறித்து அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அவர் அமெரிக்கா சென்று திரும்பிய பின் பாலர் அரங்கில் 1—12—68 அன்று பின்கண்டவாறு பேசினார்:

''தமிழ்நாடு என்றுபெயர் வைப்பதை எதிர்ப்பவர்கள். நாம் டெல்லியிடம் இருந்து அதிக அதிகாரம் கேட்க வேண்டும் என்றதும் மூர்க்கத்தனமாக எதிர்ப்பார்கள் அப்போது நாம் மனதிற் கொள்ளவேண்டியது' பெயர் மாற்றத்தில்கூட இப்படிப் பட்ட எதிர்ப்பைச் சந்தித்துத்தானே '' வெற்றி பெற்றோம் என்றுநினைக்க வேண்டும்.''

1969ஆம் ஆண்டு. 'காஞ்சி' பொங்கல் மலரில் அண்ணா எழுதிய 'தம்பிக்கு' கட்டுரையில் எழுதியிருப்பது நமக்கெல்லாம் அண்ணா அவர்கள் 'இட்ட இறுதிக் கட்டளை (உயில்) என்று நாம் கொள்ள வேண்டும்.

''தம்பி! உன்னால் இயன்ற அளவுக்கு, தமிழர்தம் தனிச் சிறப்புக்களைக் குறித்து எடுத்துரைக்கும் பணியில் ஈடுபடக் கேட்டுக் கொள்கிறேன். நீ முயன்றால் முடியாததும் இருக்கிறதா? என்னையே முதலமைச்சராக்குவதற்குக்கூட முடிந்திருக்கிறதே உன்னால்—வேறு எது தான் செய்திட உன்னால் முடியாது? முயன்றிடு—முனைந்திடு.''

பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ் நாட்டிலுள்ள எல்லோருக்கும் கொடுத்த பணியாக—அவரது கட்டளையை ஏற்று—அவரது வழியில் உழைக்கக் கட்டமைப்பட்டிருக்கிறோம்.

தமிழக வரலாற்றின் முதல் பகுதியை எழுதிய அறிஞர் அண்ணா அவர்கள் முத்துப்பேட்டைப் பொதுக் கூட்டத்தில் கூறியதைப் போல், தமிழக வரலாற்றின் அடுத்த பகுதியைக் கலைஞர் கருணாநிதி எழுதி வருகிறார் நாம் மாநில சுயாட்சியைப் பெறப்போகும் இந்தக் கலைஞரின் ஆட்சிக் காலம் பொன்னேட்டில் பொறிக்கப்பட வேண்டிய காலம்!

அண்ணாவின் வழியில் அயராது உழைத்து—அவரது லட்சியத்தை நிறைவேற்றிட கலைஞரின் தலைமையில் பாடுபடுவோம் நாம்!





# நமது பிறப்புரிமை!

தொழிலாளர் நல அமைச்சர்
என்.வி. நடராசன்

ஆலை அரசர்கள்!
நிலப் பிரபுக்கள்!
மிட்டா மிராசுகள்!
செல்வச் சீமான்கள்!
வணிகக் கோமான்கள்!

—விரல்விட்டு எண்ணக்கூடிய இவர்களின் ஆதிக்கத்தில் அரசியல் சக்கியிருந்த கால கட்டம்— அதுவும்— அரைமணிநேரத்திற்கு மேல் அரசியலைப் பற்றிச் சிந்திக்க மாட்டார்கள். காரணம், மூளை சூடேறி விடுமென்று! ஏழை எளியவர்கள் — நடுத்தர மக்கள் — உழைப்பாளர்கள் ஆக மக்களின் எண்ணிக்கையில் நூற்றுக்கு 95 சதவிகிதமுள்ளவர்களின் வாழ்க்கைக்கான வழிவகையைக் காண்பதென்பது மேற்—கண்ட கூட்டத்தினரின் ஆசாபாசத்தைப் பொறுத்தேயிருந்தது.

மாளிகை வாசிகளாகிய இவர்களிடத்திலே சிக்கியிருந்த அரசியலை மண் குடிசையிலே வாழும் ஏழை எளிய மக்களுக்கு உரித்தானதாக்குவதற்காக மாபெரும் தலைவர்கள் தங்களின் சிந்தனையை —அறிவாற்றலை— திறமையை — தொண்டினை அர்ப்பணித்துள்ள அத்தியாயங்கள் ஏராளம் ஏராளம்!

அத்தகு அத்தியாயங்களில் நமது வழிகாட்டி— ஒப்பற்ற தலைவர் அண்ணா அவர்கள் நாட்டுக்கும்—சமுதாய ஏற்றத்திற்கும் வழங்கிய தொண்டு சிறந்து விளங்கும் அத்தியாயமாகும்.

நமது கழகப் பொதுக் குழுவில் இடம் பெற்றுள்ள நாம் அனைவரும் சாமான்யர்கள்! ஏழை — எளியவர்கள், உழைப்பாளர்கள். நமது பொதுக் குழுவில் பிரச்னைகளை ஆராயும் தன்மையும் அனைவரும் தங்கள் கருத்தை அறிவிப்பதற்கு, அளிக்கப்படும் சனநாயக முடிவும் மாற்றாரும் பாராட்டக் கூடியதாகும்.

நமது அண்ணா அவர்கள் ஜஸ்டிஸ் கட்சிக் காலத்திலிருந்து இப்படிப்பட்டகுழுக்களில் இடம் பெற்றிருந்தார்கள். அருகே நெருங்கமுடியாத நிலையினர் அரண்மனை வாசிகள் ஆகியோர் அமர்ந்து அரசோச்சிய அவைகளிலே, ஒப்பி நமது அண்ணா அவர்களையும் உடனிருக்கச் செய்தார்கள். பொப்பிலியும்— செட்டிநாட்டரசரும் — சர் உஸ்மானும் அவர்களைப் போன்ற கனவான்களும் வீற்றிருந்த குழுக்களில் அண்ணா அவர்களுக்கு இடந் தந்ததே மகத்தான சாதனை என்பது அவர்களின் கூற்று!

போடியும், போலாவரமும், வெங்கிட கிரியும், வடபாதியும், காளஹஸ்தியும், கார்வேட்டியும், சிங்கம்பட்டியும், உத்தமபாளையமும்பிறருமாக வீற்றிருந்த இடத்தில் அண்ணா அவர்கள் இடம் பெறறதானது ஜஸ்டிஸ் கட்சிக்குப் புகுத்தப்பட்ட 'புது இரத்தம்'— இளவெட்டு! இது ஜஸ்டிஸ் கட்சி 'அந்தஸ்தை' இழந்து வருகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாயிருந்தது. அப்போது அரசியலில் மிகச் சூடான பிரச்னை, திலகர் சுயராஜ்ய நிதி என்ற பேரால் திரட்டப்பட்ட ஒரு கோடி ரூபாய் காங்கிரஸ்காரர்களால் பாழாக்கப்பட்ட பயங்கரச் சம்பவம் தான்.

மறைந்த டி. ஏ. வி. நாதன் அவர்கள் 'ஜஸ்டிஸ் ஆங்கில ஏட்டில் இதனை வெளுந்து வாங்கினார்கள். திலகர் சுயராஜ்ய நிதி மோசடி பற்றி கடப்பையில் ஜஸ்டிஸ் மாநாடு! அதிலே அண்ணா அவர்கள் ஒரு மணி நேரம் அலசி அலசிப் பேசினார் சுயராஜ்ய நிதி மோசடியைப் பறறி. அண்ணாவின் ஆங்கிலப் பேச்சு ஜஸ்டிஸ் கட்சியின் பெருந் தலைவர்களின் வாயைப்பிளக்கச் செய்தது!

பின்னர் தேனீர் விருந்துக்காக மாநாடு சிறிது நேரம் கலைந்தது. இனிப் பரவாயில்லை — திலகர் நிதி மோசடி பற்றி நாடே சீறி எழும் என்று எண்ணியபடி அண்ணா பெருமிதத்துடன் இருந்தார்.

ஒரு தலைவர் —அண்ணா அவர்களின் பெரு மதிப்புக்குரியவர் அண்ணாவின் முதுகில் தட்டிக் கொடுத்தபடி தனியே அழைத்துச்சென்று ''அண்ணாதுரை இதென்ன ஏதேதோ பேசி விட்டாயே! உனது ஆங்கில நடை அழகை நான் பாராட்ட முடியும். ஆனால் நீ பேசிய புளுகுகளை எபபடி ஏற்றுக் கொள்வேன்? எதற்காக இப்படிப் பேசினாய்?'' எனறு கேட்டார்.

அண்ணா அவர்களோ— நாட்டு மக்களுக்கு ஒரு பேருண்மையை விளக்கிவிட்டோம்; காங்கிரஸ் கட்சியினர் செய்த கயமைத்தனத்தை அம்பலப்படுத்திவிட்டோம் என்ற மகிழ்ச்சியில் கம்பீரமாக நடந்து சென்றார். இந்தப் பெரியவரோ புளுகு பேசுவது அழகாகுமா என்று அண்ணாவைக் கேட்கிறார். அண்ணா அவர்களின் மனம் என்ன பாடுபட்டிருக்கும்? அண்ணா அச்சத்துடன் ஆனால் துணிவுடன் திலகர் நிதி மோசடி பற்றி அவரிடம் விளக்கினார்.

அப்படியா — உண்மையாகவா—ஒருகோடி ரூபாய் மோசடியா? என்று அவர் ஆச்சரியத்தால் தாக்குண்ட நிலையில் கேட்டார் அண்ணாவிடம்! அண்ணா திகைத்தே போனார். ஏன் தெரியுமா? இது குறித்து ஜஸ்டிஸ் பத்திரிகையில் பத்து கட்டுரைகள் வெளி வந்தன. இவ்வாறிருக்க திலகர் நிதி மோசடி உண்மையா என்று அத்தலைவர் கேட்கிறாரே, என்பதுதான் அண்ணாவைத் திகைக்க வைத்தது! அண்ணா அவர்கள் கேட்டார்கள், அத்தலைவரை — 'ஜஸ்டிஸ்' இதழில் இது குறித்து கட்டுரைகள் வெளி வந்துள்ளதே என்று! அந்த அருந்தலைவர் சொன்னார்: ''நான் ஜஸ்டிஸ் இதழைப் படிப்பதில்லை,'' என்று.

ஜஸ்டிஸ் இதழைப் படிக்காதவர் ஜஸ்டிஸ் கட்சியின் பிரமுகர்களில் ஒருவர்! மீண்டும் ஜஸ்டிஸ் கட்சியே அமைச்சரவை அமைக்கும் வாய்ப்புப் பெற்றிருந்தால் அவர் நிச்சயம் அமைச்சராகியிருப்பார். அவர் கூறுகிறார் பதறாமல், ஜஸ்டிஸ் இதழைப் படிபபதில்லை என்று!

இதை எதற்காகக் கூறுகிறேன் என்றால், ஒரு கட்சியில் அதிகாரமிக்க குழுவில் இடம் பெற்றுள்ள ஒருவர் அந்தகட்சியினஇதழைபடிப்பதில்லையென்ற அளவுக்குத்தான் அவர்களுக்கு அக்கறை இருந்தது— கட்சியைப் பற்றியும், பிரச்னைகள்பற்றியும் — மக்களின் நல் வாழ்வைப் பற்றியும்!

அவைகளையெல்லாம் அறிஞர் அண்ணா அவர்களும் நானும் அக்குழுக்களில்குறிப்பிட்ட காலம்வரை இடம் பெற்றுக் கண்டறியும்வாய்ப்புப் பெற்றிருந்தோம். அதையெல்லாம் பார்த்த எனக்கும் என்னைப் போன்றவர்களுக்கும் நமது கழகப் பொதுக் குழுவில் உறுப்பினர்கள் காட்டும் அக்கறையும் —அளித்திடும் ஆய்வுரையும் — பெற்றுள்ள துணிவும் உண்மையிலேயே உற்சாகத்தை அளிப்பதாகும் என்று கூறினால் மிகையாகாது.

ஜஸ்டிஸ் கட்சியிலிருந்த சீமான்களின் அரசியல்போக்கினைக் கண்ட அண்ணா அவர்கள் அன்றே சொன்னார்: 'நான் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்திருப்பது மிட்டா மிராசுகளுக்கு ஆலவட்டம் எடுப்பதற்காக அல்ல! மாளிகை வாசிகளிடம் சிக்கியுள்ள அரசியலை — மண் குடிசையில் வாழும் கோடிக்கணக்கான மக்களின் பொதுவுடைமையாக ஆக்குவதற்'' கென்று!

நமது அண்ணா அவர்கள் தாம் எடுத்த உறுதிக்கேற்ப; தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் அரசியல் கூடாரத்தை விட்டு மாளிகை வாசிகள் தாங்களாகவே வெளியேறும்படியான மறுமலர்ச்சியை ஜஸ்டிஸ் கட்சியில் புகுத்தினார். உண்மையாக நாட்டுப்பற்று கொண்டஇயக்கமாகஅண்ணா அவர்களின் காலத்தில் அடியெடுத்து வைத்தது ஜஸ்டிஸ் கட்சி. பின்னர் திராவிடர் கழகமாக மலர்ந்து— திராவிட முன்னேற்றக்கழகமாக தழைத்தோங்கி—மக்களாட்சியை அமைத்துள்ள மகத்தான இயக்கமாக விளங்கி வருகிறது.

அண்ணா அவர்கள்பிறந்த நாள் செப்டம்பர் 15–ம் நாள் என்பது சம்பிரதாயத்துக்காக! அவர் என்றும் பிறந்து வாழ்ந்து வருகிறார். அதாவது அவரது தத்துவங்கள் பிறந்து வளர்ந்து—வாழ்ந்து — மக்கள் அனைவரையும் வாழ வைக்கும் வலிமையும் தூய்மையும் பெற்றதாகும்.

எனவே, அண்ணா அவர்களின் அடிச்சுவட்டைப்பின்பற்றி தடம் புரளாமல்கடமைகளை நிறைவேற்றிவரும் கலைஞரின் ஆட்சிக்கு தமிழக மக்கள் மட்டுமின்றி இந்தியப் பெரு நாட்டிலுள்ள நல்லோர் அனைவரும் தங்களின் தார்மீக ஆதரவையும் ஒத்துழைப்பையும் தந்து மாநில சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்ற உரிமையை இந்திய மக்கள் அனைவரும் பெறுவதற்குப் பாடுபடுவோமாக!

சுயராஜ்யம் நமது பிறப்புரிமை என்று வெள்ளையர்கள் ஆட்சியின்போதுமுழக்கமிட்டோம். இன்று இந்திய முதலாளிவர்க்கத்திடமிருந்து மக்களை மீட்க நல்வாழ்வை நல்கிட அந்த வாழ்வு நிலையாக விளங்கிட மாநில சுயாட்சி நம் பிறப்புரிமை என்று திக்கெட்டும்—பட்டிதொட்டிகளிலெல்லாம் — நாடு நகரங்களிலெல்லாம்— ஒலி முழங்கட்டும் — விளக்கங்கள் பரவட்டும்!

நம் அருமை அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவினையொட்டி அவரது தூய்மையான கொள்கைகளுக்கு தொண்டுக்கு நாம் அளிக்கும் காணிக்கைஇதுவேயாகும்.

மாநில சுயாட்சி நமது பிறப்புரிமை!

அதற்காக அண்ணா வழியில் அயராது உழைப்பது நமது கடமை!!

* * *

## வரலாறுகள் காட்டும் பாடம்!



மத்திய அரசிடமிருக்கும் அதிகாரங்கள் எல்லாம், நியாயத்தின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

அப்படி அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும். வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும்போது, பல்வேறு அரசுகள் அதிகாரக் குவிப்பினால்தான் அழிந்திருக்கின்றன என்பது புலனாகும்.

குப்தப் பேரரசு, மொகலாயப் பேரசுகள் எல்லாம் அதிகாரக் குவியலின் காரணமாகத்தான் சரிந்து போயின. அந்த நிலை நம்முடைய மத்திய அரசுக்கும் ஏற்பட்டுவிடக் கூடாதே என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் நான் இதைச் சொல்கிறேன்.

INDO - EUROPA TRADING COMPANY PRIVATE LIMITED.

(Regd. Office: 9, Dalal Street, Fort, Bombay-1 BR)
21. Sunkurama Chetty Street, Madras—1.
PHONE: 24467

OFFICES AT:
DELHI & CALCUTTA

Please Contact us for:
FOLDMASTER–90 Paper Folding Machine for 5 Folds.
Sizes: D/Demy & D/Crown etc.
COLOURMASTER–9. Latest Model Platen Printing Machine with six rollers
Sizes: 28 x 41cms and 33 x 48 cms.
Manufactured at Madras at our Factory.

Aruna Sugars Limited

Registered Office:
"Dhun Building" 175/1 Mound Road, MADRAS—2.
Telephones: 83615 (2 Jns.) Telegrams: "ANUSHAM"

FACTORY:
PENNADAM
(Vriddhachalam Taluk, South Arcot District)

★

Telephones: 23 & 42 (Pennadam) Telegrams: "ARUNASUGAR"

Our Molasses are best for cattle feeds and Pharmaceutical Industries.

Please Note That All Enquiries For Purchase of Sugar are to be Addressed only to our Registered Office At "DHUN BUILDING" 175/1, Mound Road, Madras—2 And not to our Factory at Pennadam.



# அண்ணாவின் இளைய மருமகள் சொன்ன இதயம் தொடும் செய்திகள்!



அண்ணா என்ன எழுதினாரோ, அது நமக்கு லட்சிய தீபம்—அண்ணா என்ன கூறினாரோ அது நமது கொள்கை விளக்கு.—அண்ணா எந்த வழி நடந்தாரோ அது நமது பயணத்தின் பாதை! தி. மு. கழகம் இன்று அந்த வழியில்தான் அணுவளவும் பிசகாமல் நடைபோட்டு வருகிறது. இதனைப் போலவே அண்ணா வாழ்ந்த இல்லமும், அவர் உபயோகித்த பொருள்களும், நாம் கண்ணைப்போல் போற்றிப் பாதுகாக்க வேண்டிய நினைவுச் சின்னங்கள்.

ஒவ்வொரு ஆண்டும் 'முரசொலி' தரும் ''அண்ணா மலரில்'' அண்ணாவைப் பற்றிய சிறப்புச் செய்திகளும், அவர் புகழ் சரிதம் பாடும் எழுத்தோவியங்களும், வண்ணக் கலவையில் அந்த மன்னவனின் எழிற் கோலமும் இடம் பெற்று இதயங்களை குளிர்விப்பது உண்டு!

## கடைசிப் பொங்கல் கண்ணீர்ப் பொங்கல்

அண்ணா அவர்களை வகை வகையாய்ப் படமெடுத்து குழந்தையின் அழகை தாய் கண்டு மகிழ்வதுபோல் ஆண்டுதோறும் மகிழ்ச்சி பெற்றது முரசொலி. இரண்டு ஆண்டுகளாக அண்ணாவின் பழைய உருவங்களைத் தேடிப் பிடித்து வெளியிட்டு பெருமூச்சு விட்டுக் கொள்கிறோம். எத்தனை முறை பார்த்தாலும் இனிக்கும் திருவுருவை திரும்பத் திரும்ப வெளியிட்டு திருப்தியடைகிறோம்.

இனிப் புதிய படம் எடுக்க வழியுண்டா? கல்லறையை எடுக்கலாம்—விண்ணோக்கி வளர்ந்து நிற்கும் ஸ்தூபியைப் படம் பிடிக்கலாம்—அண்ணனே நீ கண் துயிலும் சதுக்கத்தின் பேரழகை வண்ணக்கலவில் வடிக்கலாம் ஆனால் அந்தக் கள்ளமற்ற புன் சிரிப்பை—எங்கே படம் பிடிப்பது—எங்கள் காமரா தேடுகிறது—இனிக் காலமெல்லாம் தேடினாலும் காணக் கிடைக்காது என்று தெரிந்த பின்னும் பித்துப் பிடித்த மனம் தேடி அலைகிறதண்ணா, தேடி அலைகிறது.

கொஞ்சம் இப்படித் திரும்பி உட்காருங்கள் அண்ணா, துண்டை இப்படிப் போட்டுக் கொள்ளுங்கள் அண்ணா, சட்டையில்லாமல் இப்படியே ஒரு படம், அண்ணியின் அருகில் நின்று ஒரு படம், பேரன் மலரை முத்தமிட்டபடி ஒருபடம், நடப்பதுபோல் ஒரு படம்—இப்படி ஆசை தீரும் மட்டும் எடுத்து அழகழகாய் வெளியிட்டோமே—இப்போது எங்களின் பேராசைக்குச் சரியான தண்டனையைக் காலம் தந்துவிட்டது! அதனால்தான், அண்ணா இல்லாத இரண்டாண்டுகளாக 'முரசொலி' வண்ணப் படங்களை விட்டுவிட்டு அண்ணா பற்றி நன்கறிந்தோரின் எண்ணக் குவியலை எழிலாகத் தருகிறது.

இவ்வாண்டு மலருக்கு என்ன செய்யலாம் எனச் சிந்தித்தபோது அண்ணா அவர்கள் பயன்படுத்திய பொருள்களை—பாதுகாத்து வைத்துள்ள அவரின் நினைவுச் சின்னங்களைப் படம் பிடித்து வெளியிடலாம் என எண்ணினோம். முதலில் காஞ்சிபுரம் சென்று அவர் உபயோகித்த பொருள்கள் அனைத்தையும் படம் எடுத்துவர எண்ணினோம்.

## கோடி வேட்டி கொண்டு வரச்சொன்னார்!

அண்மையில் அண்ணாவின் கடைசிப் பிள்ளை பாபுவின் திருமணம் முடிந்த மூன்றாம் நாள், நானும் புகைப்படக்காரர் கதிரவனும் காஞ்சிபுரம் சென்றோம்.

காலை பத்து மணியிருக்கும். வரகு வாசல் தெருவில் உள்ள அண்ணா அவர்களின் இல்லத்திற்குச் சென்றோம். திருமணத்திற்குப்பின் உள்ள சந்தடி லேசாகத் தொடர்ந்தது. நாங்கள் வீட்டிற்குள் நுழைந்ததும், ''யாரது?'' என்று மூக்குக் கண்ணாடியை நிமிர்த்தியபடி எங்களை அண்ணாவின் சகோதரி விசாரித்தார்.

''முரசொலி''யிலிருந்து வர்றேங்க. நேற்று டிரங்கால் செய்தேன். கௌதமன் வரச்சொல்லிச்சு, அண்ணா மலருக்காக சில படங்கள் எடுக்க வேணும்!'' என்றேன் நான்.

எங்களை ஒருமுறை நிமிர்ந்து நோக்கி விட்டு 'செல்வம் வரலியா?' என்றார்கள். ''அவர் வேலூர் போயிருக்கிறார்!'' என்று நான் பதிலிறுத்ததும், ''நீ முன்னே இங்கே வந்திருக்கேயில்லே தம்பி?'' என்று மூன்று ஆண்டுகளுக்கு முந்தைய நிகழ்ச்சியை நினைவூட்டிய பின்னர்—''கௌதமன் பெரிய பட்டணத்துக்குப் போயிடுச்சு. ராணியும் காத்தால தான் போகுது—இன்னிக்கோட மேல்சபை முடியுதாம்ல்ல...'' என்று நிறுத்தினார்.

அண்ணியும், இளங்கோவனும் இல்லாததால் திட்டமிட்டு வந்தபடி உதவிக்கு யாரும் இல்லையே என்று எண்ணிக் கொண்டிருந்த நேரத்தில்.. ''நீங்க படம் எடுத்துக்குங்க, எதெது தேவையின்னு சொல்லுங்க. கொண்டு வந்து தர்றேன்,'' என்று கலகலப்புடன் கூறி எங்களது கவலையைப் போக்கினார், அண்ணாவின் இளைய மருமகள் விஜயா.

''அண்ணா உபயோகித்த பொருள்கள் என்னவெல்லாம் உண்டோ, அத்தனையையும் எடுத்து வையுங்கள், படம் எடுத்துக் கொள்ளுகிறோம்,'' என்றேன்.

''கல்யாண வேலை இன்னும் முடியலீங்க, எல்லாம் அப்படி அப்படியே கெடக்கு. மாமா படுத்திருந்த ஈசிச்சேரை பக்கத்து வீட்டு மாடியிலே போட்டு பூட்டியிருக்கோம். சாவியை மாமி கொண்டு போயிருக்காங்கன்னு நினைக்கிறேன்,'' என்று கூறிக் கொண்டே அண்ணா கடைசியாக உபயோகித்த வேட்டி சட்டைகள், கைக்குட்டைகள், விளக்கு, டைரி, இப்படி எல்லாவற்றையும் வரிசையாகக் கொண்டுவந்து வைத்தார். இடையில் பல விருந்தினர்கள்—அவர்களுக்கும் முகம் கோணாத வரவேற்பு — கலகலப்பான உரையாடல், எங்களுக்கும் தேவையான உதவிகள்!

இங்கேதான் குளிப்பார், இந்த இடத்தில்தான் உட்காருவார். அங்குதான் எழுதுவார்—என்று மெத்த ஆர்வத்தோடு விளக்கி வீட்டுப் பணிகளு[க்கு] இடையிலேயும் உதவினார்.

## கலைஞரிடம் கடன்வாங்கி அன்பளிப்புத் தந்தார்!

எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் எடுத்து முடிக்கவும், குறிப்புகள் தந்தும் கூட இருந்து உதவினார் கார் டிரைவர் பாண்டியன். அண்ணா அவர்களின் ஒவ்வொரு அசைவுகளையும் படம் எடுப்பதுபோல அவர்கள் கையாண்ட ஒவ்வொரு பொருளையும் ஒன்று விடாமல் எடுத்து முடித்தோம்—இரண்டு மணி நேரத்தில்!

''எல்லாம் முடிச்சுட்டீங்களா? மாமா இந்த இடத்திலேதான் உட்கார்ந்து எல்லாரையும் கூட்டிவைச்சு கடைசியா பேசினாங்க, இதை இப்போ நெனைச்சாலும் பகீர்ன்னு இருக்குதுங்க!'' என்று அவர் அமர்ந்து பேசிய திண்ணையைக் காட்டினார் விஜயா. அதை ஒரு படம் எடுத்துக் கொண்டு 'உங்களையும் ஒரு படம் எடுக்கவேண்டும்,' என்றேன்.

''ஐயைய்யோ என்னை எதுக்குங்க? வேண்டாம்...'' என்று கண்டிப்புடன கூறினார்.

அவரைச் சமாதானம் செய்து—பிறகு எடுத்துக் கொள்ளலாம் என்று புகைப்படக்காரரிடம் கூறிவிட்டு அண்ணா அவர்களைப் பற்றி அவருக்குத் தெரிந்த முக்கியச் செய்திகளையெல்லாம் நினைவுபடுத்திக் கூறும்படி கேட்டேன்.

மாடி அறையில் அமர்ந்து —அண்ணா இருந்தபோது நடைபெற்ற—மனதை உருக்கும் நிகழ்ச்சிகளையெல்லாம் கண்ணீர் வடித்தபடி கூறினார். விஜயா. நாம் அண்ணா அவர்களைப் பற்றி எவ்வளவோ அறிந்து வைத்திருந்தாலும், விஜயா அவர்கள் தன் மாமாவைப் பற்றிக் கூறிய செய்திகள் நமக்குப் புதியவை. அண்ணா அவர்களிடம் அதிக ஈடுபாடும், மிகப் பெரிய மரியாதையும், அவருடைய மேதைத் தன்மையில் பக்தியும் வைத்துள்ள விஜயா விழிகளை வெள்ளமாக்கிக் கொண்டு கூறிய செய்திகள் ஏராளம்—அவைகளை இங்கு தொகுத்துத் தருகிறோம்!

ஃ ஃ ஃ ஃ ஃ

''மாமா மறைவதற்கு முன்பு பொங்கலுக்கு காஞ்சிபுரம் வந்தார்கள். அவுங்க உடல்நிலை ரொம்ப மோசமாக இருந்திச்சு. என்னதான்

## எழுத்துக்குச் சன்மானம் ஆயிரத்து ஒண்ணு!

பெரிய வேதனையாக இருந்தாலும் எல்லாரும் வருத்தப்படுவோமின்னு அவுங்க அதை வெளிக்காட்டிக்க மாட்டாங்க. மாமா சர்க்கரைப் பொங்கல் அதிகமாச் சாப்பிடமாட்டாங்க. எல்லாக் காய்கறிகளும் போட்டுச் சமைத்த சுண்டக் குழம்புன்னா அவுங்களுக்கு அவ்வளவு பிரியம்!

கடைசியா அவுங்க பொங்கலுக்கு வந்திருந்தப்போ சாதத்தை நல்லாக் கடைஞ்சு தண்ணிக் கஞ்சியா கொடுத்தோம். அதைச் சாப்பிடுவதற்கே அவுங்க ரொம்பக் கஷ்டப்பட்டாங்க. ஒரு இட்லி சாப்பிடறதுக்கு அரைமணி நேரம் பிடிக்கும்—அப்போ மாமா ஒருதடவை சொன்னாங்க: 'நீங்க எல்லாம் எம்மேல ரொம்பப் பிரியமா எனக்குப் பிடிச்சதை செய்து கொடுக்கிறீங்க. ஆனா எனக்கு சாப்பிட முடியாத நிலை வந்திடுச்சேன்னு...' வருத்தப்பட்டாங்க.

பொங்கலுக்கு அவுங்க விரும்பி புது வேட்டி புதுச் சட்டை போட மாட்டாங்க. நாங்க எல்லோரும் கோடி கட்டி சந்தோஷமா இருக்கிறதைப் பார்த்து அவுங்க மகிழ்ச்சி அடைவாங்க. அந்த வருஷம் அவுங்களே கோடி வேட்டி, கோடிச் சட்டை கேட்டு வாங்கிப் போட்டுக்கிட்டாங்க. அவுங்க வேட்டி கேட்டபோது எட்டுமுழ கைத்தறி வேட்டிதான் இருந்துச்சு. மாமாவுக்கு ஆப்பரேஷன் செய்து இடுப்புப் பகுதியில் லேசான புண் இருந்ததினாலே—கைத்தறிக் கோடி வேட்டியின் சொர சொரப்பு அழுத்துமேன்னு சொல்லி மில்வேட்டி வாங்கி வரும்படி டிரைவரை அனுப்பியபோது, மாமா அதற்குச் சம்மதிக்கவில்லை! பொங்கலுக்கு கைத்தறி வேட்டிதாம்மா கட்டணும்—ஒரு கைத்தறி வேட்டி கட்டினா நாம ஒரு நெசவாளிக்கு சாப்பாடு போடுறதா அர்த்தம். இல்லேன்னா ஒருத்தரை பட்டினி போட்டமாதிரி. சும்மா கைத்தறி வேட்டியையே கொடுன்னு பிடிவாதமா வாங்கிக் கட்டிக்கிட்டாரு. எளிமையா வாழணும், முடிஞ்சவரை ஏழைகளுக்கு உதவணும் என்று எங்களுக்கு அவுங்க பலமுறை சுட்டிக் காட்டியிருக்காங்க.

## அமைச்சர் பொறுப்பும் 15 நாள் தவணையும்!

எந்த வருஷமும் பொங்கலுக்கு அவுங்க காஞ்சிபுரம் வந்தாங்கன்னா எங்க எல்லாத்துக்கும் சந்தனம் வெத்திலைப்பாக்கு அவுங்க கையால தருவாங்க. நாங்க நமஸ்காரம் பண்ணி வாங்கிக்குவோம். அது என்னமோ தெரியலை இந்த வருஷம் பாருங்க...நாங்க கொடுத்தோம் அவுங்க வாங்கிட்டாங்க.

ஒவ்வொரு வருஷமும் பொங்கலுக்கு எங்க எல்லாத்துக்கும் அன்பளிப்புத் தருவாங்க. இந்த வருஷமும் அதுமாதிரி கொடுக்கிறப்போ சொன்னாங்க... "சென்னையிலிருந்து புறப்படறபோது எங்கிட்டே பணமில்லை. உங்களுக்கெல்லாம் தரணுமேன்னு கருணாநிதிகிட்டே ஆயிரம் ரூபாய் கடன் வாங்கிட்டு வந்திருக்கேன்னு சொன்னாங்க.

அவுங்க சென்னையிலிருக்கிறப்போ 'காஞ்சி' மலருக்கு கட்டுரை கதைகள் கேட்டு டிரங்கால் செய்தேன். காஞ்சிபுரம் வந்து எழுதித் தரேன்னு சொன்னாங்க. இங்கே வந்ததும் கேட்டேன். "நான் எழுதிக் கொடுத்தா எனக்கு என்ன தருவே''ன்னு கேட்டாங்க. ஆயிரம் ரூபாய் தர்றேன்னு சொன்னேன்.

"ஹோம் ரூலுக்கு எழுதிக் கொடுத்தேன். கௌதமன் ஆயிரம் ரூபாய் கொடுத்தான். அதுக்கு மேலே நீ தந்தாத்தான் மலருக்கு எழுதுவேன்னு'' வேடிக்கையாச் சொன்னாங்க. நான் ஆயிரத்து ஒண்ணு தருவதாகச் சொல்லி மூன்று கட்டுரைகள் அவர்களை உட்காரவைத்து எழுதி வாங்கினேன். அப்போது அவர்களுக்கு தோள்வலி இருந்திருக்கிறது. அதை அவர் எங்களிடம் சொல்லவே இல்லை. வேதனையை மறைத்துக் கொண்டு எழுதியிருக்கிறார்கள்....கலைஞர் அவர்கள் கூறியிருப்பதுபோல் அந்தக் கட்டுரைகள் அரசியலுக்கு மட்டும் உயிலாக இல்லை. எங்களுக்கே உயிலாகவும், உயிராகவும் அமைந்துவிட்டது.

நான் சொன்னபடி மாமா அவர்கள் சென்னை புறப்படும்போது அவர்களிடம் ஆயிரத்து ஒண்ணு கொடுத்தேன். சிரித்தபடியே வாங்கிக் கொண்ட அவர்கள் அதை அருகே இருந்த மாமியிடம் கொடுத்து,

"இது எனக்கு விஜயா தரும் எழுத்துச் சன்மானம் வைத்துக் கொள்'' என்றார்கள்.

சென்னை சென்று அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதும் மாமியிடமிருந்த பணத்தை வாங்கி கலைஞர் அவர்களிடம் கொடுத்தார்களாம்—கலைஞர் வாங்க மறுத்தபோது வைத்துக் கொள் என்று வற்புறுத்திக் கொடுத்திருக்கிறார்கள்'' என்றார் திருமதி விஜயா.

"நீங்கள் அண்ணா அவர்களிடம் கடைசியாக எப்போது பேசினீர்கள்? அப்போது அண்ணா என்ன சொன்னார் என்பதைக் கூறமுடியுமா?''

## தோள் வலியைப் பற்றி.... ஒரே ஒரு முறை!

"மாமா 1969–ல் பொங்கலுக்காக காஞ்சிபுரம் வந்தபோதுதான் நான் பார்த்துப் பேசினேன். அதுதான் இறுதியானது. அதற்குப் பிறகு அவர்களைப் பார்த்தேனே தவிர பேசவில்லை. காஞ்சியில் பொங்கல் முடிந்து அவர்கள் சென்னை புறப்பட்டுக் கொண்டிருந்தபோது "என் மகள் கண்மணி அவர் மடியில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தாள். பேத்தி கண்மணி மீது மாமாவுக்கு அதிகப் பிரியம்—கண்மணி துடுக்காகப் பேசுவாள்—அவள் கேட்டாள் "தாத்தா இந்த வீடு சிறுசா இருக்கு. உன்னைத் தேடிக்கிட்டு நெறையப் பேர் வாராங்க, பெரிசாக் கட்டிக் கொடு தாத்தா'' என்றாள்.

## காஞ்சி நகர் முழுதும் கடைசியாகக் கண்டு வந்தார்!

"கட்டித் தர்றேம்மா-பெரிய வீடா கட்டித் தர்றேன். நான் மெட்ராசுக்குப் போயிட்டு பத்து நாள்லே திரும்பி வந்திடுவேன். அப்புறம் நீ கேட்டதுமாதிரி கட்டித் தர்றேன்''—என்றார்.

"பத்து நாள் கழிச்சு வேண்டாம். இன்னிக்கே கட்டித் தரணும்'' என்று அடம் பிடித்தாள் கண்மணி. நான் அவளைச் சமாதானப்படுத்தி எடுத்துக்கொண்டு "உங்களுக்குத்தான் உடல்நிலை சரியில்லையே இங்கேயே தங்கி ஓய்வு எடுத்துக் கொண்டால் என்ன?'' என்று கேட்டேன். அதற்கு அவர்கள் சொன்னார்கள் "என் உடல்நிலை எவ்வளவு பாதித்திருக்கிறது என்பது எனக்குத் தெரிகிறதம்மா. அதற்காக பொறுப்புகளை அப்படியே விட்டுவிட முடியுமா? நான் இப்போது சென்னைக்கு ஒரு முடிவில்தான் போகிறேன். என்னிடம் உள்ள பொறுப்புகளை அமைச்சரவையில் உள்ள அனைவரிடமும் பகிர்ந்து கொடுத்துவிட்டு 15 நாளில் வந்து இங்கேயே ஓய்வெடுக்கப் போகிறேன் என்று கூறினார். அவர் காரில் அமர்ந்து சென்னை புறப்படும்போது வழியனுப்பிய என்னிடம்? கடைசியாகக் கூறிய வார்த்தையும் இதுதான். "கவலைப் படாதம்மா நான் சொன்னபடி 15 நாளில் வந்துவிடுகிறேன். நீ எப்ப சென்னைக்கு வர்றே?' என்று கேட்டுப்போனவர் திரும்ப வரவில்லையே என்று கண்ணீரை அருவியாகக் கொட்டினார் விஜயா.

"காஞ்சிபுரத்திற்கு அண்ணா வந்திருந்தபோது, அவரே பழைய நண்பர்களைத் தேடிச் சென்று பார்த்ததாகக் கூறுகிறார்களே?''

"ஆமாம்! சாமிநாத முதலியார்னு அண்ணாவுக்கு ரொம்ப வேண்டியவர். அவர் நோய்வாய்ப் பட்டிருந்தார். அவரைப் பார்த்துவரப் புறப்பட்ட மாமா அவர்கள் அவருக்கிருந்த தோள் வலியோடு காஞ்சிபுரத்தையே ஒரு சுற்றுச் சுற்றியிருக்கிறார்!

பெண்கள் கல்லூரி, கலெக்டர் ஆபீஸ், முக்கிய மார்க்கெட், தூர்ந்துள்ள குளங்கள், பழுதடைந்துள்ள கோயில்கள், ஆஸ்பத்திரி மாமல்லன் சொசைட்டி ஆகியவற்றையெல்லாம் பார்த்துவிட்டு வந்து—அவர் சென்னை திரும்பும்வரையிலும் காஞ்சிபுரத்திற்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்று அடிக்கடி கூறிக் கொண்டிருந்தார். இன்னொரு கல்லூரி கட்டவேண்டும் கோயில்களில் உள்ள கலைச்செல்வங்கள் பழுதடைந்து வருகின்றன. அவைகளைப் பாதுகாக்க வேண்டும் என்று சொன்னார்.

அவர் தோள் வலியாலும், வயிற்று வலியாலும் வேதனைப்படும் போதெல்லாம் அதை எங்களுக்கெல்லாம் தெரியும்படி காட்டிக்கொள்ளவே மாட்டார்.

கைவலி வேதனையோடு சொம்புத் தண்ணீரைத் தூக்கமுடியாமல் அவரே தூக்கி ஊற்றிக்கொண்டு குளிப்பாரே தவிர, யாரையும் உதவிக்கு அழைக்கமாட்டார். தெரிந்தால் நாங்கள் கவலைப்படுவோம் என்று! ஒருநாள் குளிக்கும்போது கையைத் தூக்க முடியாமல் அவர் பட்ட வேதனையை நான் கண்டபோது, "கொடுங்கள் நான் ஊற்றுகிறேன் நான் தேய்த்து விடுகிறேன்'' என்றபோது சாமான்யமாக அவர் அதற்குச் சம்மதிக்கவில்லை. "நான் குளிச்சுட்டு வர்றேன். நீ சிரமப்பட வேண்டாம் போம்மா,'' என்றார். "என்னை உங்க சின்ன மகள்னு

## மாமா கைவீசி நடந்து பார்த்து மாதக் கணக்காச்சே!

எல்லார் மத்தியிலேயும் சொல்றீங்களே, அது சும்மாதானா உங்க மகள் உங்களுக்கு உதவி செய்யக் கூடாதா'' என்று கேட்டபிறகு சிரித்துக் கொண்டே சொம்பை என் கையில் கொடுத்து, "இந்தா உன் இஷ்டம் போல ஊத்து'' என்றார். அதுவும் என் மனம் புண்படக்கூடாது என்பதற்காகத்தான். இவ்வளவு பெரிய மனசை என்னைப் பெற்ற தாயிடத்தில்கூட நான் கண்டதில்லீங்க. இனிமேல் காணப்போவதும் இல்லீங்க! நான் கல்யாணமாகி வந்த ஏழு வருஷத்திலே தெய்வத்தை நான் அவர் வடிவிலேயே பார்த்துட்டேன்'' என்று கூறி என்னையும் அழவைத்து அவரும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்.

ஃ ஃ ஃ ஃ ஃ

எனக்குத் தெரிஞ்சவரையிலே அவருக்கு நோய் இருப்பது பற்றி ஒரே ஒரு தடவைதான் சொல்லியிருக்கிறார். வீட்டின் பின்புறத்தில் அமர்ந்திருக்கும்போது ஒருநாள் தோளை அமுக்கி அமுக்கிப் பிடித்துக் கொண்டிருந்தார். நாங்கள் அவரிடம் "தோள் வலிக்கிறதா?'' என்று கேட்டோம். அதற்கு அவர் சொன்னார் "இந்த மாதிரி வலி வேறு ஒருவருக்கு இருந்தா ஊரையே கூட்டியிருப்பாங்க!'' என்றார். அதற்குப் பிறகு அவர் எதையும் காட்டிக் கொண்டதே இல்லை.

மாமா அவர்கள் அமெரிக்கா போவதற்கு முன்பு கையை அசைக்க முடியாமல் இடுப்போடு ஒட்டி வைத்தபடி நடப்பார். நாங்கள் பார்த்து விட்டால் எங்களுக்காக ஒன்றும் இல்லாததுபோல கையை லேசாக அசைத்துக்கொள்வார்.

அவர் சின்னக் குழந்தை மாதிரிங்க. எதையும் பெரிசுபடுத்தமாட்டார்! வீட்டில் யாரிடத்திலும் பேதம் காட்டமாட்டார் எல்லோரையும் ஒரே மாதிரிப் பாவித்து அன்பு செலுத்துவார். அவருக்குக் கோபம் வந்து நான் பார்த்ததேயில்லை''..என்ற விஜயா தன் ஏழு வருஷ அனுபவத்தில் ஒரேஒரு முறை,—வீட்டுப் பணியாள ஒருவரை அண்ணா கடுமையாகக் கடிந்து கொண்டதாகக் கூறினார். அதுவும் கட்சிப் பற்றில் அண்ணா சிறு விஷயத்தில்கூட கண்ணும் கருத்துமாக இருந்தார் என்பதற்கு ஒரு சம்பவத்தைச் சுட்டிக் காட்டினார் விஜயா.

ஒருநாள் வீட்டில் வேலை பார்க்கும் பையன் கிழிந்துபோன மிதியடியைத் தைப்பதற்காக அதை ஒரு பழைய 'முரசொலி' பேப்பரில் சுற்றி எடுத்திருக்கிறான். இதைக் கவனித்துவிட்ட அண்ணா அவர்கள் அவனை அழைத்து கட்சிப் பத்திரிகையை இப்படிப் பயன்படுத்துவது தவறு என்று கண்டித்து அந்த 'முரசொலி'யை வாங்கி ஒழுங்காக மடித்து வைத்தாராம். எதிலும் அண்ணா தன்னை முழுமையாக ஈடு

## சிறுவனின் செயலும் அண்ணாவின் வேதனையும்!

படுத்திக் கொண்டார் என்பதற்கு திருமதி விஜயா இதை உதாரணமாகக் காட்டினார்.

குரங்கென்றால் அண்ணாவுக்கு இப்போதும் பயம்தானாம். கடைசியாகப் பொங்கலுக்கு காஞ்சி சென்றிருந்தபோது குளிப்பதற்கு வீட்டின் பின்புறத்திற்குச் சென்ற அண்ணா மருமகளை அழைத்துக் கேட்டாராம். "ஏம்மா, கிணற்றுப் பகுதிக்கு முன்னெல்லாம் குரங்கு வருமே இப்பவும் வருகிறதா" என்று! "எப்போதாவது வரும்" என்று விஜயா பதில் கூறியதும், 'இப்போ வருமா' என அண்ணா அழுத்தமாகக் கேட்க 'வந்தாலும் வரலாம்' என விஜயா பதிலளித்ததும் — "அப்படியானால் நான் குளிக்கும்வரை பாபுவை இங்கு அனுப்பிவை" என்று கூறினாராம். அண்ணாவின் குழந்தை மனத்திற்கு இந்தநிகழ்ச்சியை ஆதாரமாகச் சொன்னார் விஜயா.

"தில்லானா மோகனாம்பாள்" படத்தில் வரும் 'நலம்தானா' என்ற பாடல் அண்ணா அவர்களுக்கு மிகவும் பிடித்த பாடலாம். பேத்தி கண்மணியை அடிக்கடி பாடச் சொல்லி அதை ரசிப்பாராம்.

ஒருநாள் கண்மணியோடு அவர் பேசிக் கொண்டிருந்தபோது "தாத்தா உனக்கு உதவியா வேலை செய்யறதுக்கு ஒரு பொண்ணு பார்த்து வச்சிருக்கேன் அது இப்போ கல்லூரியிலே படிச்சுக்கிட்டிருக்கு. நீ அமெரிக்கா போய் வந்ததும் கல்யாணம் பண்ணிக்கலாம் சரிதானா?" என்று மழலையில் கூறியதும் — "எனக்குக் கல்யாணமா? ஒங்க பாட்டி சண்டைக்கு வரமாட்டாளா" என்று அண்ணா திருப்பிக் கேட்க — "பாட்டியை நான் ஒரு கை பார்த்துக்கறேன். நீ தைரியமா கல்யாணம் பண்ணிக்கோ தாத்தா" என்றதும் அண்ணா கலகலவெனச் சிரித்து — "எனக்குக் கல்யாணம் பண்றது இருக்கட்டும் கண்மணி. — உன்னுடைய கல்யாணத்துக்கு நிறையசீர்வரிசை கொடுத்து ஜாம் ஜாம்னு செய்து வைக்கிறேன்" என்று கூறினார் என்று ஏக்கப் பெருமூச்சுவிட்ட விஜயா, ஒரு நாள் காரில் போய்க் கொண்டிருந்த போது நடைபெற்ற சம்பவத்தைக் கூறி சோக உணர்வைக் கொஞ்சம் மாற்றினார்.

"ஒருநாள் மாமாவும், மாமியும், நானும், கண்மணியும் காரில் போய்க் கொண்டிருந்தபோது கல்லூரிவிட்டு பெண்கள் போய்க் கொண்டிருந்தார்கள். அப்போது கண்மணியைப் பார்த்து மாமா கேட்டார் — "ஏம்மா எனக்கு கல்லூரியிலே படிக்கிற பெண்ணைப் பார்த்து வச்சிருக்கேன்னு சொன்னியே! இதிலே யாரு அந்தப் பொண்ணு?" என்று கேட்டார்.

## குரங்கென்றால் அண்ணா குழந்தை போல் பயப்படுவார்!

கண்மணி அந்தப் பெண்களைப் பார்த்துவிட்டு "ஐயய்யே இதெல்லாம் ஒரே கோரமா இருக்கு. உனக்கு அழகான பெண்ணைப் பார்த்து வச்சிருக்கேன். நீ கவலைப் படாதே தாத்தா" என்று கூறினாள். இதை காஞ்சிபுரம் வரும்போதெல்லாம் மாமா சொல்லிச் சொல்லி சிரிப்பார்.

மாமா அமெரிக்கா சென்றபோது அங்கிருந்து எங்களுக்கு எழுதிய கடிதம் இன்றைக்கு நாங்கள் உலகைப் புரிந்து கொள்வதற்கு மிகவும் உதவியாக இருக்கிறது. "நான் தமிழ் நாட்டில் இல்லாததை ஒரு பயிற்சியாக எடுத்துக் கொண்டு நீங்கள் நடந்துகொள்ளவேண்டு"மென்று எழுதியிருந்தார். அவர் இல்லாத இந்த நேரத்தில் அவர் 'எழுதிய கடிதத்தை அடிப்படையாக வைத்துத்தான் இன்று வாழ்க்கையையே அமைத்துக் கொண்டிருக்கிறோம்," என்றும் பெருமிதத்தோடு கூறினார் விஜயா.

வீட்டில் நாங்கள் அனைவரும் சைவம் — மாமா வந்துவிட்டால் அவருக்காக இறைச்சியும், மீனும் வாங்கி சமையல் செய்வோம். சாப்பிடும் பொழுது கூறுவார். "எனக்காக நீங்க எல்லாரும் கஷ்டப்பட வேண்டியதிருக்கு, சைவர்களான நீங்க மாமிசத்தை சமையல் செய்றீங்க. பரிமாறுறீங்க, பார்த்துக்கிட்டிருக்கீங்க — இனிமே நானும் சைவமாகப் போறேன்"னு அடிக்கடி கூறுவார். அதற்கு மாமி கூறுவார்கள் மாறப் போறேன் — மாறப் போறேன்னு சொல்றீங்களே தவிர மாறக் காணோமே என்பார்கள்" — "இரு இரு விரைவில் வீர சைவமாகி விடுகிறேன்" என்று மாமா கூறுவார்.

## கல்லூரி மாணவியும் கண்மணி பேத்தியும்

அவருக்கு மிகவும் பிடித்தது — மணத்தக்காளிக் கூட்டு, காரம் இல்லாத கறி, உருளைக் கிழங்கு வடை. ஆனால், பல மாதங்களாக அவரால் இவைகளைச் சாப்பிடவே முடியவில்லை. கடைசியாக அவர் விருப்பமில்லாமல் சாப்பிட்டு வந்தது வோட்ஸ் கஞ்சி.

ஒரு சமயம் அவர் காஞ்சிபுரம் வந்திருந்தபோது குடிப்பதற்குத் தண்ணீர் கேட்டார். ஐஸ்வாட்டர் கொடுத்தோம். "ஏது ஐஸ் தண்ணீர்"? என்றார். "புதிதாக பிரிஜிடர் (குளிர்சாதனப் பெட்டி) வாங்கியிருக்கிறோம். அதில் வைத்தது" என்று கண்மணியின் அப்பா கூறினார்கள். "இந்த ஆடம்பரப் பொருள்கள் எல்லாம் நமக்கு எதற்கு?" என்றார். "நமக்காக வாங்கவில்லைமாமா நமது வீட்டிற்கு அதிகாரிகள் வருகிறார்கள், பெரியவர்கள் வருகிறார்கள். சில நேரங்களில் அவர்கள் ஐஸ்வாட்டர் கேட்கும்போது 'இல்லை' என்று கூறவேண்டியதிருக்கிறது. அதனால்தான் வாங்கினோம்" என்றேன். அதற்கு அவர் கூறிய அறிவுரையை என் வாழ்நாளில் மறக்க முடியாத தத்துவமாக எடுத்துக் கொண்டிருக்கிறேன். "வீட்டிற்கு வருகின்றவர்களுக்கு நம் வீட்டில் என்ன இருக்கிறதோ, அதை பாரபட்சமின்றிக் கொடுப்பதே பண்பான உபச்சாரம்.

## மறக்க முடியாத அமெரிக்கக் கடிதம்!

அவர்கள் வீட்டில் உள்ள வசதிகளையெல்லாம் நம் வீட்டில் செய்து வைத்து நாம் வழங்கமுடியாது. இதெல்லாம் ஆடம்பரப் பொருள்கள் என்பது என்னுடைய அபிப்ராயம். நம்மைப் போன்றவர்களின் எளிமையான வாழ்க்கைக்கு இது தேவையற்றது," என்றார்.

"இதை முழுப் பணம் கொடுத்து வாங்கவில்லை. மாதத் தவணையில் வாங்கியிருக்கிறோம்" என்று கண்மணியின் அப்பா நிலைமையைக் கூறியதும்தான் மாமா ஓரளவு திருப்தி பெற்றார்.

அவர் கூறிய இந்த அறிவுரையை எங்கள் எதிர்கால குடும்ப வாழ்க்கைக்கு பயனுள்ள பயிற்சியாக பாடமாக — எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று கூறினார் திருமதி விஜயா.

ஃ ஃ ஃ ஃ ஃ

காஞ்சிபுரத்தில் எத்தனை வகையான ஆலயங்கள் இருந்தாலும் வரகுவாசல் தெருவில் உள்ள அண்ணா வாழ்ந்த இல்லம்தான் அறிவாலயமாக, அன்பாலயமாக, அறநெறி ஆலயமாகக் காட்சியளிக்கிறது.

ஆலயங்களில் பழம்பெரும் பெருமை கூறும் கலைச் செல்வங்களைப் பாதுகாத்து வைத்திருப்பதுபோல் அண்ணா அவர்களின் அழியா நினைவுச் சின்னங்களாக, அவர் கைபட்ட பொருள்கள் கண்ணே போல் காத்து வைக்கப்பட வேண்டும். என்பதற்கு அடியெடுத்துத் தரும் வகையில் அண்ணா அவர்கள் உபயோகித்த பொருள்களை நாங்கள் படம் எடுத்தோம். பயனுள்ள தகவல்களைச் சேகரித்தோம்!

ஆலயத்திற்குச் சென்ற பக்தன் பிரசாதம் பெறுவதுபோல் — அண்ணா அவர்களின் தோள்மீது புரண்டு ராஜாங்கம் நடத்திய சால்வை ஒன்றை — அவர் நினைவாக திருமதி விஜயா அவர்களிடம் நான் பெற்றுக் கொண்டு திரும்பினேன்.

- தினகரன்

## சாகாச் சரித்திரம்!

கண்ணியம், கடமை கட்டுப் பாடெனும்
கழகம் கண்டவனை
எண்ணிய செயல்களின் நிறைவில் புகழ்மலை
ஏறிக் கொண்டவனை
தென்னகம் தன்னகத் தெய்வமென் றேதொழும்
தீதறு மேலவனை
மண்ணகம் அடைந்தநல் மாட்சிமை நாளினை
வாழ்த்துதும்; வாழ்த்துதுமே!

வங்கக் கடலும், கடற்கரை மணலும்
வாய்விட் டரற்றிடவும்
தங்கத் தமிழும்; சங்கக் கலையும்
தனிமையில் புலம்பிடவும்
பொங்கும் காவிரிப் புனல்விழித் தமிழர்
போய்விழுந் தழுதிடவும்
சிங்கத் தமிழன் கல்லறை யானதை
தேசம் மறந்திடுமோ?

தம்பியர் பேச்சினில்; தன்னுயிர் மூச்சினைத்
தழுவிக் கலந்தவனை
நம்பிய தமிழ்க்குலம் நாலரைக் கோடியின்
நாயகக் கொழுந்தவனை
வம்பரின் பேச்சினை வளைத்துத் தமிழரின்
மாநிலம் காத்தவனை
என்பும் தமிழ்க்கென ஈந்தவன் திறத்தினை
இருநிலம் மறந்திடுமோ?

[வேறு]

துயிலைத் துறந்து; துயிலைக் கலைத்தவன்
துயிலில் ஆழ்ந்துவிட்டான் — மீளாத்
துயிலில் ஆழ்ந்துவிட்டான்!

வெயிலில் நமக்குக் குடையைப் பிடித்தவன்
விடையைக் கொடுத்துவிட்டான் — இறுதி
விடையைக் கொடுத்துவிட்டான்!

அயலார் தமையும் அருகினில் அழைத்தவன்
அழைப்பை ஏற்றுவிட்டான் — சாவின்
அழைப்பை ஏற்றுவிட்டான்!

புயலில் விளக்காய் எரிந்தவன் நோயெனும்
புயலில் தோற்றுவிட்டான் — காலப்
புயலில் தோற்றுவிட்டான்!

(வேறு)

வாழ்வின் அசைவுகள் யாவும் உன்னத
வரலா றமைத்தவனை
சாவின் மடியிலும் சாகாச் சரித்திரச்
சான்றுகள் படைத்தவனை
காவிய வாழ்வைக் கனவாய்க் கண்டுநற்
காவிய மானவனை
ஓவியத் தமிழால் பாடுநர் யாவரும்
ஒன்றாய்ப் பாடுவமே!

**சிங்கப்பூர் ஐ. உலகநாதன்**



# சூளுரைத்துச் செயல்படுவோம் வாரீர்!

மா. முத்துச்சாமி, பி.ஏ., பி.டி.,

செப்டம்பர் 15—ம் நாள்.

ஒவ்வொரு தமிழனின் வாழ்விலும் ஒப்பற்ற திருநாளாக மலர்ந்து அவன் வாழ்வின் முன்னேற்றத்திலும அவன் மறுமலர்ச்சியிலும் பெரும் பங்கு வகிக்கும் நாள்!

ஆம் — அது ஈராயிரம் ஆண்டுகளாக அன்னைத் தமிழ் தவமிருந்து, தமிழ்க் குலம் தழைக்க, தமிழர் வாழ்வு சிறக்க, அவன் நாகரிகம் உலகெங்கும் உணர்த்தப்பட, தன் தலைமகனும் பேரறிஞர் அண்ணாவை இந்தத் தரணிக்கு ஈன்ற நன்னாள்!

நம் உள்ளங்களிலே மலர்ந்து நம் உணர்வுகளிலே கலந்து, நம் பணிகளிலே தவழ்ந்து நம்மை எல்லாம் நடக்கச் செய்து, அதைக் கண்டு மகிழ்ச்சி ஒன்றினை மட்டும் பெற்று மடலவிழ்ந்த வாழைபோல் இம் மன்பதையில் வாழ்ந்த மாபெரும் சரித்திர நாயகனின் பிறந்த நாள் செப்டம்பர் பதினைந்தாம் நாள்!

இன்னாள் நமக்கெல்லாம் ஓர் பொன்னாள். என்பதைக் கவிஞர் 'எழில் முதல்வன்' மிக அழகாகக் காண்பிக்கின்றார்.

உடல் தடித்த எருமையைப்
போல் தமிழரெல்லாம்
உணர்ச்சியின்றி உறங்கிக்
கொண்டிருந்த போது

கடல் குடித்த அகத்தியன்
போல் வடிவம்கொண்ட
காஞ்சியண்ணா பேருருவாய்
நிமிர்ந்து நின்று —

அடதமிழா! உன் பெருமை
அறிதிலாயோ!
அரிமாவே எழுந்திரடா,
என்று கூறி;

கடையனுக்குக் கடைத்தேற்
றம் கண்டார், சூழும்
கருக்கிருட்டை கிழித்தெ
ழும்பும்கதிரோன் ஆனார்

மூன்றாண்டுகளுக்கு முன்னர் என்று நினைக்கிறேன். எனதருமை நண்பர்கள் அத்தியண்ணன், முத்து ஆகியோர் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளுக்காக என்னை இராசிபுரம் வட்டத்திற்கு அழைத்து ஓரிரு நிகழ்ச்சிகள் என்றுசொல்லி— அவர்கள் ஆர்வத்தின் காரணமாக நாற்பதுக்கு மேற்பட்ட நிகழ்ச்சிகளில் ஒரே நாளில் அவ்வட்டத்தின்மூலை முடுக்குகளிலெல்லாம் கலந்து கொள்ளச் செய்த போது சோர்வு ஏதும் இன்றி அத்தனை நிகழ்ச்சிகளிலும் நான் கலந்து [illegible]ண்டு அண்ணனின் புகழ் பரப்பும் அந்தத் தூய தொண்டினைச் செய்து வந்தேன். காரணம் அன்று அவர் நம்மிடையே வாழ்ந்து நமக்காக உழைத்து நம்மை எல்லாம் அவர் அன்புத் தம்பி என்ற நிலையில் அரவணைத்துச் சென்றதால்!

இன்றும் நண்பர்கள் அழைக்கின்றார்கள். அண்ணனின் பிறந்த நாள் விழா என்று. ஆர்வத்தோடு சரி என்று நாம் ஒப்புக்கொள்ளும் வேளையில் இனந்தெரியாத சோகமும் நம் உள்ளங்களில் எழுகிறது; அவர் நம்மிடையே இல்லை என்ற காரணத்தால்.

கோட்டைக்குள் வந்து கோலோச்ச முடியுமாஎன்ற மாற்றுக் கட்சியினரின்கேள்வியை ஏற்று மூன்றரை ஆண்டுகளுக்கு முன்னர், சாமானியராகிய எங்களை எல்லாம் கோட்டையை நோக்கி அழைத்துச் சென்று கொலுவிருந்த நாயகனைப் பாராட்டும் விழா ஒன்றில் நான் கூறினேன், வள்ளுவருக்குப் பின் இன்று இருபதாம் நூற்றாண்டின் வள்ளுவர் நம்மிடையே வாழ்கிறார் என்று.

காரணம், அறிஞர் அண்ணா ஆட்சிப்பொறுப்பை ஏற்றவுடன் வள்ளுவன் வழி நின்று ஆட்சி நடத்துவேன் என்று இவ்வையகத்திற்கு எடுத்துரைத்தார். அப்பொழுது சில ஏடுகள்வள்ளுவருக்கு இணையாக அண்ணனை ஒப்பிடலாமா? என்ற கண்டனக் கணைகளையும்என் மீது தொடுத்தன.

நல்ல அரசுக்கு இலக்கணமாக வள்ளுவர் ஆறு துறைகளைக் குறிப்பிட்டு, அவைகளில் அது சிறந்து விளங்க வேண்டும் என்று கூறுகின்றார். அவை குடி, படை, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆகிய ஆறுமாகும்.

தமிழ் நாட்டுக் குடிமக்கள் அண்ணன்பால் நம்பிக்கை வைத்து ஆட்சியைக் கொடுத்தார்கள். அண்ணன் நம்மை விட்டுப் பிரிந்து மீளாத் துயிலில் ஆழ்ந்தபோது நாலு கோடி மக்களும் கண்ணீர் வடித்தார்கள். அவர் உயிருடன் உலவியபோது மக்கட்காகவே திட்டங்கள் நிறைவேற்றி அவர்கட்காகவே உயர் வாழ்ந்து அவர்கள் மூச்சிலெல்லாம் கலந்து பிரிந்தார்.

''இப்படை தோற்கின் எப்படை வெல்லும்'' எனும் வியத்தகு அளவிற்கு அவர் இடுகின்ற கட்டளைகளை இன்முகத்துடன் ஏற்று நிறைவேற்றும் தம்பிமார் படையை வைத்திருந்தார்கள்.

ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடனே நாட்டின பொருள் வளத்தைப் பெருக்கும் முயற்சிகளிலும் தொழில் வளத்தைப பெருக்கும் முயசிகளிலும் அதிக அக்கறை காட்டினார்கள்.

எதிர் காலத்தை உருவாக்கும் திறமை கொண்ட அமைச்சர்களைக் கொண்டு ஆட்சி புரிந்தார்கள்.

அண்டை மாநிலங்களோடும், மத்திய அரசோடும் நட்புடன் பழகித் தமிழகத்தின் உரிமைகளைப் பெற்றுத் தந்தார்கள்.

தோழமைக் கட்சிகளுடன் அன்புடன் பழகித் தம ஆட்சிக்கு அரண் அமைத்துக் கொண்டார்கள். இத்தகைய சிறப்பியல்புகளைக் கொண்ட அண்ணனை நான் வள்ளுவருக்கு ஒப்பிட்டுக் காட்டியதில் என்ன தவறு இருக்க முடியும்? வள்ளுவர் தமிழுக்காக வாழ்ந்து மறைந்த துறவி. அண்ணாவோ தமிழுக்காகவும், தமிழ்ச் சமுதாயத்திற்காகவும் வாழ்ந்து வையத்தில் உள்ள மக்கள் உள்ளங்களில் உறையும் பிறவி.

அண்ணன் இல்லை என்றாலும் அவர் விளைத்திட்ட இலக்கியங்கள் நம் இதயச் சுவர்களிலே அலை மோதிக் கொண்டிருக்கின்றன. அவர் விட்டுச் சென்ற இலட்சியங்களை நிறைவேற்றும் பொறுப்பு அவருக்குப் பின் நம் தானைத் தலைவரும் தமிழக முதல்வருமான அண்ணன் கலைஞர் அவர்கள் தோள் மீது சுமத்தப் பட்டிருக்கிறது. அண்ணனின் சுட்டு விரல் நீட்டிய பக்கம் சுடர் முகம் தூக்கிப் புறப்பட்டிருக்கும் கலைஞர் அவர்களும், பொதுச் செயலாளர் நாவலர் அவர்களும் அந்த இலட்சியங்களை நாட்டு மக்களின் நல்லாதரவு என்ற வலிவினால் ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேற்றி வருவதைக் காண்கிறோம்.

இவ்வாண்டு அண்ணன் பிறந்த நாள் நமக்கெல்லாம ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த நாள். ஏனெனில் அவர் நம்மை எல்லாம் விட்டுப் பிரிவதற்கு முன்பு எழுதிய கடைசிக் கட்டுரையில மாநில சுயாட்சி பற்றி வலியுறுத்தி எழுதி அதை அடைவதே நாட்டுக்கும் தமிழர்கட்கும் நல்லது என்பதைக் குறிப்பிட்டுக்காட்டி இருந்தார்கள்.

அவர் இலட்சியங்கள் யாவற்றையும் தொகுத்துத் திருச்சி மாநாட்டில் நம் கழகத் தலைவர் ஐம்பெரும் முழக்கங்களாக வெளியிட்டிருந்தார்கள்.

அண்ணா வழியில் அயராது
உழைப்போம்!

ஆதிக்கமற்ற சமுதாயம்
அமைத்தே தீருவோம்!

இந்தித் திணிப்பை என்றும்
எதிர்ப்போம்!

வன்முறை தவிர்த்து வறு
மையை வெல்லுவோம்

மாநில சுயாட்சி—
மத்தியில் கூட்டாட்சி!

இவ்வாண்டு அண்ணா பிறந்த நாளுக்கு முன்னதாகவும் பின்னதாகவும் அவர் இலட்சியக் கனவுகள் இரண்டினை நாம் நிறைவேற்றும் பூரிப்பில் பங்கு கொள்ளலாம். ஒன்று செப்டம்பர் 12, 13 நாட்களில் சென்னையில் மாநில சுயாட்சி மாநாடு கூட்டப்பட்டு அண்டை மாநிலங்களும் இத்திட்டத்தை ஏற்றுப் போராடும் பணியில் நாம் நம்மை ஈடுபடுத்திக் கொண்டோம்.

இரண்டு, அண்ணாவின் நீண்ட நாள் கனவும் தமிழக மக்களின் கோரிக்கையுமான சேலம் இரும்பாலைத் திட்டத் துவக்க விழா நான் பிறந்த மண்ணில் செப்டம்பர் 16—ம் நாள் நடக்க இருப்பதும் ஆகும்.

ஆக, அண்ணாவின் இலட்சியங்களை நமது நீண்ட நெடும் பாதையாக்கிக் கொண்டு அண்ணன் கலைஞர் தலைமையில் நீடு நடைபோடத் துவங்கி விட்டோம். இடையிடையே தடையெதுவும் வந்தாலும் தகர்த்தெறிந்து அண்ணா வழியில் அயராது உழைத்து அவர்தம் இலட்சியத்தை எய்துவதே நமது குறிக்கோள் என்று இந்நன்னாளில் சூளுரைத்துச் செயல்படுவோம் வாரீர்!

அண்ணாவின் புகழ் வாழ்க!
அவர்தம் பணி தொடர்க!!

## அண்ணாவின் அறிவுரை!

''மாணவர்கள் வைரங்களாக இருக்க வேண்டும்; வைரத்திற்குஅதிக மதிப்பு இருப்பதற்குக் காரணம் பூமியின் வெகு ஆழத்தில் அது இருப்பதேயாகும்.

''நிலத்தின் கீழே தோண்டினால் கிளிஞ்சல்கள் இருக்கும். சுண்ணாம்பு கிடைக்கும் — நிலக்கரி கிடைக்கும்— அதற்கும் கீழே தோண்டினால் பெட்ரோலியம் கிடைக்கும் — அதற்கும் கீழே அழுத்தி வைக்கப் பட்டிருக்கும் வைரத்துக்குத்தான் மிகவும் மதிப்பு அதிகம். அதைப் போலவேமாணவப் பருவத்தை அழுத்தி வைத்து வைரமாகத் திகழுங்கள்!

''நீங்கள் பெறுகின்ற கல்வி உங்களுக்காக மட்டுமல்ல — சமுதாயத்திற்காக கல்வி பெறுகின்றீர்கள் என்பதை உணர்ந்து செயல்படுங்கள்!''

# அண்ணா இருக்கின்றார்!

## கவிஞர் ஆனந்தம்

அருள்சுரக்கும் அண்ணா,நின் முகத்தைப் பார்த்தோர்,
அந்தோநீ எங்கேயோ சென்ற தாகப்
பொருள்தெரியா தெண்ணியுள்ளா ர், புரியா மாந்தர்!
புன்னகையால் எதிரிகளை வெல்லும் உன்றன்
மருள்விரட்டும் கண்ணொளியைக் கண்டோர், நீயோ
மௌனமாகக் கண்மூடி விட்ட தாக
இருள்நிறைக்கும் கருத்துக்கள் பரப்பு கின்றார்!
என்செய்வோம், எள்ளிநகை யாட லன்றி?

எங்கேனும் குறையிருப்ப தாகக் கூறி
ஏழையர்கள் கோரிக்கை எழுப்பி வந்தால்—
அங்கேநின் கருணையுள்ளம் முன்னே தோன்றி
ஆள்கின்ற வழித்தோன்றல் கலைஞர் மூலம்
பொங்கிவரக் காண்கின்றோம்! புனித நெஞ்சம்
பொல்லாங்கு தவிர்த்திடவே முனைதல் கண்டோம்!
இங்கெல்லாம் நீஇருத்தல் உணர்கின் றோமே;
ஏன்நம்மை எதிர்ப்பவர்கள் உணர்வ தில்லை?

வார்த்தைகளால் வழக்குரைத்தும், எழுதித் தந்தும்,
மனம்விட்டுக் கலந்துபேசி முடிவு செய்தும்,
தீர்த்திடுதல் சிறந்ததான மார்க்க மென்று
சிக்கலினை விடுவிக்க வழிகாண் பித்தாய்!
ஆர்த்தெழுதல்—வேலைநிறுத் தம்போல் தீய
அறமில்லா நெறிசெல்லல்—ஒதுக்கச் சொன்னாய்!
கூர்த்தறிவு பெற்றவர்கள் கொள்வர்; மற்றோர்
குற்றத்தைச் சுமத்திடவே முயல்வர் அன்றோ?

எவ்வாறோ துப்பாக்கி பயன்ப டுத்தி
இரண்டொருவர் உயிர்பிரிய நேர்ந்து விட்டால்—
ஒவ்வாத செயலென்றே உன்போல் கூறி
உருகுகின்ற தம்பியுள்ளம் சிலகால் கண்டோம்;
செவ்வானச் சுடர்க்கதிரே; நினையே கண்டோம்!
சிந்தைகளி கூர்கின்றோம்; நீவாழ் கின்றாய்!
அவ்வாறே நினைக்கின்றோம்; அறியா மக்கள்
அண்ணாநீ சதுக்கத்தில் என்கின் றார்கள்!

தன்னாட்சி பெற்றிடுக தமிழ்நா டென்று
தாக்கீது பிறப்பித்தாய! தம்பி மார்கள்
உன்னாணை சிரமேற்றுக், கொள்கை மேவ,
உலகத்து மன்றத்தில் வைத்து விட்டார்!
என்னாகும்? இனிதாக நிறைவே றும்நாள்
இனியதிகத் தொலைவில்லை; நம்பு கின்றோம்!
பொன்னான புத்துலகு படைத்துத் தந்தே
புலனணுவிற் புகுந்திருக்கும் உயிரே; வாழ்க!





சாவடியில் முதல் வோட்டுப் போடும் அண்ணா — சரித்திர மண்டபத்தில் முதல்வர் பதவியை ஏற்கும் காட்சி.

# அண்ணாவைக் கண்டேன்

## வித்துவான் தமிழ்ப்பித்தன்

தங்கத்தூள் தரைபோலக் காட்சி தந்து
தமிழ்நாட்டார் அனைவரையும் நாளும் கண்டு
பொங்கிவரும் மகிழ்வோடு துள்ளித் துள்ளி
புனல் அலைகள் பலவற்றை உயர்த்திக் காட்டும்
வங்கக்கடல் கரையினிலே நமது அண்ணன்
மௌனத்துயில் புரிகின்றார் எனச்சொல் கின்றார்
அங்கமெல்லாம் துடிக்குதம்மா! அறிவின் மன்னர்
அமைதியுற்றார் எனச்சொன்னால் உலகா ஏற்கும்?

செங்கதிர்போல் பணிசெய்து அகிலம் எல்லாம்
சென்றுவந்த சொல்மன்னர்;தாகம் தீர்க்கும்
பங்குதனை ஏற்றிருக்கும் நீரைப்போலப்
பாய்ந்தோடி மக்களுக்கே உதவும் தொண்டன்
கங்குல்பகல் என்றெண்ணாக் கடமைத் தங்கம்
கனவெல்லாம் நனவாக்கி வைத்த வேந்தன்
பங்கயத்தின் மென்மைமனம் கொண்ட அண்ணன்
மறைந்திட்டார் எனச்சொல்லல் நியாயம் தானா?

தென்காற்று ஓய்ந்துவிடல் உண்டா? செம்மைத்
தேன்சாற்றின் சுவைமறைதல் உண்டா? நீல
விண்காட்டில் உலவுகின்ற நிலவுப் பூங்கா
வேரறுந்து போயொழிதல் கேட்ட துண்டா?
மென்மை நிறை சந்தனத்தில் நறு மணந்தான்
விளையாட மறுப்பதுவும் உண்டா: கூர்மைக்
கண்ணான தமிழ்மீது பாசம் கொண்ட
கருணைமகன் மறைவாரோ! இல்லை! இல்லை!

மணிக்கரங்கள் அன்போடு நீட்டி வந்தே
மழலைச்சொல் அமுதத்தால் இன்பஞ் சேர்க்கும்
கவிக்குழந்தை முகச்சிரிப்பில் அண்ணன் என்னும்
காவியத்துப் பெருந்தலைவன் அகத்தைக் கண்டேன்.
பனிமலையில் மோதுகின்ற வெண்மே கத்தில்
பாசமிகும் அண்ணாவின் உள்ளம் மின்னும்!
அணிஅணியாய்த் திரண்டிருக்கும் த[illegible] ழ் [illegible]ல் எல்லாம்
அறிவுமன்னன் திருச்சொல்லின் வி[illegible] ஆகும்.

கல்விதரும் நிலையங்கள் நூல கங்கள்
கவின்மிகுந்து இயற்கைஎனும் பெயரைக் கொண்ட
செல்வியவள் பூஞ்சிரிப்பில், சிந்தைக் கின்பம்
சேர்க்கின்ற பாவாணர் பாடல் தம்மில்
செல்வர்களைக் கண்டஞ்சாத் தூயோர் வா ழ்வில்
செந்தமிழ்த் தோழர்களின் வடிவில்; என்றும்
புல்லடிமை ஒழிக்கின்ற புரட்சி யாளர்
பொன்மனத்தில் அண்ணாவைக் கண்டேன்;கண்டேன்!

வயல்வெளியில் பணிசெய்யும் உழவர் தொண்டில்
வரலாற்றை உணர்ந்தோர்கள், பேச்சில்;மூச்சில்;
புயல்கிளப்பும் ஒலிமுழக்கில்;வானப் பெண்ணாள்
வாய்திறந்து கொட்டுகின்ற மழையின் நீரில்;
கயல்துள்ளும் முகக்குளத்துப் பெண்ணார் நெஞ்சம்
கனிவாக்கும் தாய்மையெனும் உணர்வில் எல்லாம்
கு[illegible]ல்போலும் இசைபாடும் அண்ணன் என்னும்
கோமகனை—குணக்குன்றைக் கண்டேன்! கண்டேன்!!

### தலையிடத் தேவையில்லை!

அரசியல் சட்டத்தை அலசி ஆராய்ந்து விமர்சித்துத் திருத்துவதற்குச் சட்டத்தின் மூலம் வாய்ப்பளிக்க வேண்டுமென்று முன்னாள் மத்திய நிதியமைச்சர் டி.டி. கிருஷ்ணமாச்சாரியாரே சொல்லியிருக்கிறார்.

திருத்தப்பட வேண்டுமென்று சொல்வதற்குக் காரணமே, அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான்.

### நன்றி!

இம்மலரில் வெளியாகியுள்ள அண்ணா அவர்களின் சில புகைப்படங்களையும் — மலரின் முகப்பை அலங்கரிக்கும் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தையும் அனுப்பி வைத்துதவிய அருமைத் தோழர்கட்கு எம் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஆ—ர்.

# 1000 கணக்கான மைல்களுக்கு அப்பால் அண்ணாவை நோக்குகிறேன்



டாக்டர் உதயமூர்த்தி மௌண்ட் கல்லூரி, அமெரிக்கா.

அண்ணா பிறந்த நேரத்தில் தமிழ் வரலாறு பொற்காலத்தில் இருக்கவில்லை. ஆனால் அவர் மறைந்த போது ஒரு பொற காலத்தை விட்டுச் சென்றார். அவர் பிறந்த போது பார்ப்பன ரல்லாதாராக இருப்பது ஒரு சமூகச் சுமையாக இருந்தது. ஆனால் அவர் சமத்துவம் மறறும் முன்னேற்றத்துக்கான சகாப்தம் ஒன்றை விட்டு விட்டுச் சென்றார்.

அவர் தோன்றிய போது தமிழர்கள் தங்களுடைய வரலாற்றின் மேன்மையை—பழமையை உணர்ந்தவர்களாக இல்லை.

அவர் மறைந்த போது தமிழர்கள் தங்கள் வரலாற்றை உணர்ந்தனர். சிறப்பாக அந்தச் சரித்திரத்தைப் பற்றிப் பெருமை கொண்டனர்.

அப்போது அவர் லட்சக்கணக்கான மக்களுக்குச் சொன்னதெல்லாம் பத்திரிகைகளில் வெளி வரவில்லை. கோயில்களில் நடந்து வந்த கதாகாலட்சேபங்களுக்கு செய்தித்தாள்களில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வந்தது.

ஆனால் அவர் மறைந்த போது அதே மவுண்ட்ரோடு பத்திரிகைகள் அண்ணாவைப் புகழ்ந்து விசேட மலர்கள் வெளியிட்டன.

இந்த செயற்கரிய மாறுதலை எப்படி அண்ணா கொண்டு வந்தார்?

இந்த நூற்றாண்டில் — இந்தத் தலைமுறையில் மகத்தான இலக்கிய நாயகரான அண்ணா தமிழர் உள்ளங்களைக் கவர்ந்தார். ஒரு பெரும் சீர்திருத்த வாதியான அண்ணா பெரியாருடன் சேர்ந்து மக்களின் எண்ணத்திலும் போக்கிலும் மாறுதல் எற்படுத்தினார்.

ஒரு பெருந்தலைவருக்குரிய இலக்கணத்தோடு கூடிய அவர் அறிவாளிகளின்கனவுகளுக்கு உருவமாகத்திகழ்ந்தார். தலைவர் என்பவர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாகத் திகழ்ந்தார்.

இந்தச் சாதனையை வெறுப்பினாலோ, வலிமையைக் காட்டியோ அவர் செய்யவில்லை. ஆனால்நீதியை உணர்த்துவதன் மூலம்இந்த சாதனையை அவர் புரிந்தார். தனது எதிரிகளும் தம்முடைய லட்சியங்களை ஏற்குமாறு அவர் செய்தார். சமத்துவத்தையும் — பழைய வரலாற்றுப் பெருமையினையும் உணர்த்தியே இந்தச் சாதனையைப் புரிந்தார்.

எழுத்தாளர் — சமூக சீர்திருத்தவாதி — அரசியல்தலைவர் என்ற மூன்று கண்ணோட்டத்தில் அண்ணாவை நாம் இங்கே காணுவோம்!

அண்ணா ஆற்றல் மிக்க எழுத்தாளர் — ஒரு சிறந்த பத்திரிகையாளர் — தமிழ் இலக்கியத்தில் அவரதுஎழுத்துக்கள் ஒரு திருப்புமுனையை உருவாக்கின. அவர் தனது எழுத்துக்களில் சமூகக் குறைபாடுகளை — சாதிக் கேடுகளை வெளிக் கொணர்ந்தார். தற்காலத்து மக்களின் உள்ளத்தில் அது கனலை எழுப்பி அவர்களை ஆட்கொண்டது. அண்ணா எழுத்துக்களில் நகைச்சுவை, கேலி, கனல் மூலக் கருத்துக்கள், புது வழிகாட்டும் தன்மை ஆகியவற்றைக்காணலாம். அவரது எழுத்துபோதை யூட்டக்கூடியது. நாம் சாக்ரடீசைக் கண்டதில்லை. அண்ணாவிடம் நாம் சாக்ரடீசையே கண்டோம்.

அண்ணா காங்கிரசில் சேர்ந்திருந்தால் நேருவையும் ராஜாஜியையும்போன்று அகில இந்தியத் தலைவராகி உலகப் புகழ் பெற்றிருப்பார்.

ஆனால் அவ்வளவாக புகழ் பெறறுராத கோரிக்கைகளை எடுத்துக் கொண்டு அவற்றுக்காக வாழ்நாள் முழுதும் போராடினார் தனது மக்களின் அறியாமையைக் கண்டு அவர் மனம் நொந்தார். சாதிமுறை தமிழர்களின் முன்னேற்றத்தையும் ஆக்க உணர்வையும் எப்படிநசித்து விட்டது என்று அவர் உணர்ந்தார்.

முன்னர் பெற்றிருந்தது போன்ற புகழை மீண்டும் தமிழர்கள் பெற மாட்டார்களா என்று அவர் எண்ணினார்.

எனவே, அண்ணா எதிர் நீச்சல் போட்டார். ஆற்றின் போக்கையே மாற்றினார்.

தன்னுடைய அரசியல் ஆற்றலால் அவர் வல்லமையின் உச்சிக்கு உயர்ந்தார். இதனால் மற்றவர்கள் அவரை உணர்ந்து கொள்ள வாய்ப்புக்கிடைத்தது. அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்காது இருந்திருந்தால் — அண்ணாவை வெறும் வாய்ப் பேச்சுக்காரர் என்று அரசியல் ஓநாய்கள் கூறியிருக்கும்.

எந்த ஒரு பெரிய மனிதரின் புகழையும் அவர் அதிகாரத்துக்கு வந்தால் தான் உணருகிறார்கள்.

அது இந்த உலகத்தின் சாபக்கேடு. ஆனால் நல் வாய்ப்பாக அண்ணா தனது கொள்கைகளின் வாயிலாகவே பதவிக்கு வந்தார்.

தீர்க்க தரிசனம்,— நெகிழ்ச்சி, புத்தி சாதுரியம், நம்பிக்கை, தொண்டர்களின்விசுவாசம், துணிவு, முடிவெடுக்கும் ஆற்றல் இவைதான் ஒரு தலைவருக்குத்தேவை எனில் இவற்றில் அண்ணா எதைப் பெற்றிருந்தார்?

காற்று எந்தப் பக்கம் அடிக்கிறது என்று பார்த்து அந்தப் பக்கம் செல்வர் ஒருவகைத் தலைவர்கள்.

காற்று அடிக்கும் திசையை உணர்ந்து — தனது திறத்தினால் அந்தத் திசையை மாற்றித் தனது கனவுகளுக்கேற்ப நாட்டை மாறறுவது மற்றொரு வகைத் தலைவரின் பணி.

முன்னது பதவி தேடும் மற்றத் தலைவர்களுக்குப் பொருந்தும். பின்னது அண்ணாவுக்குப் பொருந்தக் கூடியது.

நாளை வரும் தமிழர்களின் மேன்மையைப் பற்றி அண்ணா கனவு கண்டார். கடந்த பொற் காலத்தை உணர்ந்து — அதனை இன்று அடைய அவர் முயற்சித்தார். கல்வியிலும் விஞ்ஞானத்திலும் தமிழகம் எப்படி விளங்க வேண்டும் என்பது பற்றியெல்லாம் அவர் அமெரிக்கா வந்த போது ஆவலோடு கேட்டறிந்தார். மனதில் அவைகளை விதைகளைப் போல் அவர் ஊன்றிக் கொண்டார். ஆனால் அந்தக் கனவுகளை நிறைவேற்ற காலம்தான் இல்லாது போய் விட்டது.

அண்ணாவின் அறிவாற்றலைப் பற்றிக் கூறுவது மல்லிகை மணக்கும்—தேன் தித்திக்கும் என்று கூறுவதைப் போன்றது.

தொண்டர்களின் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் அவர் நிகரற்ற முறையில் பெற்றிருந்தார். மிகச்சாமானியமானவர்கள் அவரைப் புரிந்து கொண்டு அவர் வழியில் லட்சியத்துக்காக தியாகம் செய்ய தயாராக இருந்தனர். திரை மறைவு ஒப்பந்தங்களுக்கெல்லாம்அப்பாற் பட்டவர் அவர். தன்னலமற்றவர் அவர். தனிப்பட்ட வாழ்விலும், பொது வாழ்விலும் தொண்டர்களின் வருத்தமும்மகிழ்ச்சியும் பற்றித்தான் அவருடைய கவலையெல்லாம். தன்னைப் பின்பற்றுகிறவர்களை அவர் புரிந்து கொண்டார். இத்தகைய சிறப்பான ஆற்றலால் வாழ்விலும் தாழ்விலும் தன் அருகில் நிற்கும் தம்பிமார்களை அவர் பெற்றிருந்தார்.

அண்ணாவின் நெகிழ்ந்து கொடுக்கும் தன்மை புகழ் பெற்றது. தனது இயக்கத்தை அவர் குடும்பத்தைப் போல் நடத்திச் சென்றார். மக்களின் குறைபாடுகளை அவர் நன்கு தெரிந்து

## சாவியைக் கீழே போடு!

எதற்கெடுத்தாலும் டெல்லியைக் கேட்கிறார்களே என்று சொல்கிறார்கள். டெல்லியைக் கேட்காமல் வேறு யாரைக் கேட்பது? தன் வீட்டுக் கதவைத் தட்டுவானே தவிர எதிர்வீட்டுக் கதவையா தட்டுவான்?

மாமியார், பீரோவைப் பூட்டி, சாவியை முந்தானையில் முடிந்து இருக்கும்போது, விருந்தாளிக்குக் காபி கொடுக்க வெள்ளித் தம்ளரை எப்படி எடுக்க முடியும்? சாவிக்கு, மருமகள் மாமியாரைக் கேட்காமல் எதிர்விட்டு அலமேலுவையா கேட்பாள்? பெட்டிச் சாவியைக் கீழே போட்டுவிட்டு தேவையானதை எடுத்துக் கொள்ளட்டும்.

ஃ—ஃஃஃ—ஃ

## டில்லியின் அதிகாரம்!

வெளிப்படையாக டில்லிப் பேரரசின் செயல் நமக்கு அறிவுறுத்துவது இதுதான்:

எந்த ஒரு காங்கிரசல்லாத அரசாங்கமும் நெடுங்காலம் இயங்குவதை டில்லி அரசு பார்த்துக் கொண்டிருக்கச் சகிக்காது. மேற்கு வங்கத்திலும் அரியானாவிலும் நடந்த அரசைப் பற்றி மக்களுக்கு எந்தவிதமான அதிருப்தியும் இல்லை. ஆனால் சிலருக்கு அதுபிடிக்கவில்லை. ஆகவே அரசுகள் கலைக்கப்பட்டன. இன்றுள்ள அரசியல் எந்த மாநில மக்கள் அரசையும் கலைக்கும் அதிகாரத்தை டில்லிக்குத் தந்துள்ளது.



# அண்ணாவின் பெருந்தன்மை

**அ. சங்கரய்யா**

கம்ப ராமாயண எதிர்ப்புக் கிளர்ச்சிகள் தமிழகமெங்கும் பரவி இராமாயணத்தை எரித்து எதிர்ப்புத் தெரிவிக்கும் கிளர்ச்சிகளும் நடைபெற்றது.

பல தமிழறிஞர்கள் இராமாயணத்தை எரிப்பது நல்லதல்ல. துணிவிருந்தால் விவாதத்திற்கு வரவேண்டும்என்று அறைகூவல் விட்டனர்.

அப்படி அறைகூவல் விட்டவர்களில் மதுரை சோமசுந்தர பாரதியாரும் ஒருவர்.

இந்த அறைகூவலைக் கேட்ட அறிஞர் அண்ணா அவர்கள் அந்த அறைகூவலை ஏற்றார். ஏற்றது மட்டுமல்ல. சேலத்தில் அந்த விவாதத்தை நடத்துவதென்றும் தெரிவித்து தேதியும் குறிப்பிட்டார்.

அந்த விவாதக் கூட்டத்திற்கு சேலம் கல்லூரி முதல்வராக இருந்த ராமசாமிக்கவுண்டர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தந்தை பெரியார் அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன் சேலம் வந்து, தாதம்பட்டி என்னும் கிராமத்தில் தங்கி அண்ணாவுக்கு தந்தி ஒன்றுகொடுத்தார் ''என்னை தாதம்பட்டியில் சந்தியுங்கள்'' என்பது அந்தத் தந்தியின் வாசகமாகும்.

விவாதத்திற்கு முதல்நாள் காலை, காலம் சென்ற அண்ணன் எஸ். வி. லிங்கம், ஏ. சித்தையன் ஆகியோருடன் வந்து சேர்ந்தார் அண்ணா. அண்ணாவையும்பிறரையும் கண்ட ஐயாஅவர்கள் ''வாங்க, வாங்க வாங்க'' என்று அன்போடும் புன்னகையோடும் வரவேற்றார்.

''உங்களை ஏன் முன்னதாக வரச் சொன்னேன் தெரியுமா?'' என்றார் பெரியார்.

அண்ணாசிரித்துக்கொண்டே ''நான் விவாதத்தில் தோற்று விடுவேன் என்று பயந்து வரச்சொல்லியிருக்கிறீர்கள்'' என்றார்.

''ஆமாம், பாரதியார் சிறந்த ஆராய்ச்சியாளர் அதுவும் பகுத்தறிவு கருத்து கொண்டவர். வேறு விதமாகப் பேசி உங்களைத் தோற்கடித்து விடுவாரோ என்றுதான் பயந்தேன்'' என்றார் பெரியார்.

அதற்கு அண்ணா அவர்கள், அவருக்கேஉரியஇயற்கையான அமைதியான முறையில், ''ஐயா! நான் சோமசுந்தர பாரதியாருடன் சண்டைக்குப் போகவில்லை. விவாதத்திற்குத்தான் போகிறேன். அவர் கருத்தை அவர் சொல்லட்டும், என் கருத்தை நான் சொல்கிறேன்.

மக்கள் இரண்டு கருத்துக்களையும் கேட்டுத்தீர்ப்புக் கூறட்டும். இன்னொன்றும் உங்களிடம் சொல்கிறேன். அவரிடம் விவாதத்தில் தோற்றாலும் பெருமையாகக் கொள்வேன். ஏனெனில் அவர் சிறந்த தமிழறிஞர், அது மட்டுமல்ல, மக்களுக்குத் தமிழ உணர்ச்சியைப் பரப்பியவர். ஆகவே நீங்கள் ஒன்றும் பயப்பட வேண்டாம்'' என்று கூறினார் அண்ணா.

அண்ணா அவர்கள் கூறிய அந்த பெருந்தன்மையான மொழிகளைக் கேட்டு ஆனந்தக் கண்ணீர் வடித்து, கட்டி அணைத்து மகிழ்ச்சி தெரிவித்த பெரியார், விவாதத்திற்கு வேண்டிய சில ஆதாரங்களையும் கொடுத்தார்.

விவாதம் தொடங்யது சேலம் கல்லூரி முதல்வர் காலஞ் சென்ற இராமசாமி கவுண்டர் தலைமை வகித்துப் பேசும் போது, ''இன்று விவாதத்தில் இரண்டு அறிஞர்கள் கலந்து கொள்கிறார்கள். ஒருவர் தமிழறிஞர் சோமசுந்தர பாரதியார். மற்றவர் அரசியல் அறிஞர் அண்ணாதுரை!

பாரதியார் தமிழின் மேன்மைக்கும், தமிழரின் உயர்வுக்கும் வீரத்தோடு பாடுபட்டவர், அவர், நாவலர்' செந்நாப் புலவர், எதையும் தைரியமாகக் கூறும் ஆற்றல் படைத்தவர். அவரது, சொல் மழையைக் கேட்கப் போகிறோம்.

திரு அண்ணாதுரையைப் பற்றி நான் எதுவும் கூற விரும்பவில்லை. அவரைப் பற்றி அறியாதார் அறியாதாரே! அவர் தரும் அரும் பெரும் கருத்துக்களைக் கேட்கப் போகிறீர்கள்'' என்று கூறி முதலில் அண்ணாஅவர்களைப் பேச அழைத்தார்.

அறிஞர் அண்ணா அவர்கள் கூடியிருந்த பல்லாயிரக் கணக்கானவர்களின் கை-யொலிகளுக்கிடையே பேச ஆரம்பித்தார்.

''அரசியலுக்குப்பெரியார் என் தலைவர். தமிழ் இயக்கத்திற்கு நாவலர் சோமசுந்தர பாரதியார்என் தலைவர். அந்தத் தலைவரிடம் என் திறமையையோ, ஆற்றலையோ, காட்டுவதற்காக இந்த விவாதத்தில்நான்கலந்து கொள்ளவில்லை. அவரிடம்என் கருத்துக்களைக் கூறி அவர் கூறும் கருத்துக்களைக்கேட்டு விபரம் தெரிந்து கொள்ளவே விவாதத்தில் கலந்து கொள்கிறேன்'' என்று கூறி பேச்சை ஆரம்பித்தார்.

உடனே சோமசுந்தர பாரதியார் எழுந்து, ''நான் அவருக்குத் தலைவரில்லை. அவருக்குப் பெரியார் தான் தலைவர்'' என்று இடைமறித்துக் கூறினார்.

உடனே அண்ணா அவர்கள், ''நீங்கள் ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் தமிழியக்கத்துக்கு நீங்கள்தான் என்தலைவர்'' என்று அழுத்தமாகக் கூறினார்.

உடனே கூடி இருந்த மக்கள் கையொலி எழுப்பி அண்ணா அவர்களின் பெருந்தன்மையைப் பாராட்டினார்கள்!

---

கொண்டிருந்ததால் அவர் குடும்பத்தின் அண்ணனாகத் தன்னைக் கருதிக் கொண்டிருந்தாரே தவிர, தந்தையாக, சர்வாதிகாரியாகக் கருதிக் கொள்ளவில்லை. இதனால் அவருடன் எல்லோரும் பழக முடிந்தது.

அவர் பார்ப்பனீயத்தை வெறுத்தார். பார்ப்பனர்களின் திறமையைப்பாராட்டினார். வடவரின் ஆதிக்கத்தை அவர் எதிர்த்தார். ஆனால் சாஸ்திரி, இந்திரா போன்றவர்களின் மேன்மையை உணர அவர் மறக்கவில்லை.

ராஜதந்திரம் என்ற சொல்லே அண்ணா என்ற வடிவில் அமைந்திருந்தது. சீனப் படையெடுப்பின் போது மத்திய அரசு பிரிவினைப் பிரசாரத்துக்குதடை விதித்தது. ஆனால் தி.மு.க. பிரிவினையை அடிப்படையாகக் கொண்டது. எனவே கழகத்தின் வாழ்வைப் பற்றியே பிரச்னை எழுந்தது. இந்நிலையில் எது சரியான முடிவு என்ற கேள்வி எழுந்தது!

அண்ணா பெருந்தன்மையுடன் நடந்து கொண்டார். தேச பக்தியை முன் நிறுத்தி அயல் நாட்டுப் படையெடுப்பைக் காரணம் காட்டினார்.

அருட்கொடை போன்ற புகழை அண்ணா பெற்றிருந்தார். லட்சக் கணக்கான மக்கள் அவரிடம் மயங்கி நின்றனர். நேருவைப் போன்ற செல்வாக்கை அண்ணா பெற்றிருந்தாலும், நேருவிடமிருந்த முன் கோபம் அண்ணாவிடம் இல்லை.

அடுத்து என்ன நடக்கப் போகிறது என்பதை நேருவால் உணர முடியவில்லை. ஆந்திரம், மராட்டியம் இரண்டும் தனி மாநிலங்களாகின. நேரு சினவை நம்பினார். பிறகு காட்டிக் கொடுக்கப்பட்டார்.

ஆனால் அண்ணா, வருமுன் உணரும் தன்மையைப் படைத்தவர். மற்றவர்களை எடை போடும் தகுதி மிக்கவர்.

ஆசாத், ராஜாஜி, ராஜேந்திர பிரசாத் ஆகியோரின் யோசனைகளை நேரு கேட்டார்.

ஆனால் அண்ணா இளைஞர்களுடனேயே வளர்ந்தார். இளைஞர்களுக்கு ஒரு புதுப் பாதையையும், பார்வையையும் அவர் காட்டினார்.

அண்ணா — மூலக் கருத்துக்களை உதிர்க்கும் சிந்தனையாளர். சமூகத்தில் அவர் ஒரு புரட்சியை உருவாக்கினார். அற்புதமான இரண்டாவது அணி ஒன்று அவரைப் பின்பற்றி — அவரது செய்தியைப் பரப்பியது.

நாம் இங்கே அவரைப் பற்றித் தீர்ப்புக் கூறப்போவதில்லை. 'நீதி தேவன்' கூட அண்ணாவின் பேச்சை செவி மடுக்கக் காத்திருப்பான் என்றால் நாம் எம்மாத்திரம்?

அவரது எண்ணங்கள் — அவரது தோழர்களின் ஆற்றல் — இவற்றைக்கொண்டு அண்ணா எவ்வளவோ செய்திருப்பார். ஆனால் தமிழ்நாடு கொடுத்து வைக்கவில்லை.

ஒரு வரலாற்றுப் பின்னணியில் அண்ணாவைப் பார்த்தால்...!

ஒரு குள்ளமானஉருவம்— ஆழமான துருவித் தேடும் கண்கள் — நன்மை என்கின்ற தன்மையையேசதைப் பற்றாகக் கொண்டு அண்ணா விளங்குவார்.

தமிழ் பேசும் மக்களிடையே ஒரு புது வாழ்வை ஒளிவீசச் செய்த சமுதாய சீர்திருத்தவாதியாக அவர் விளங்குவார். இலக்கியச் சக்கரவர்த்தியாக — சரித்திரத்தின் மாபெரும் புருஷராக விளங்கி தமிழருக்கு புதிய பொருளை விளக்கி புதிய வழியைக் காட்டியவர் அண்ணா.

அண்ணாவின் சொற்கள் இலக்கியத்தில் என்றும் வாழும்.

தமிழர்களின் பயணத்துக்கான சமூக மாறுதலை அவர் வடித்து வைத்துள்ளார். —''என்றும் அவர் வரலாற்றில் வாழ்ந்து வருவார்''—



அரசு புகைப்படக்காரர் லட்சுமிபதி அண்ணா [illegible] எடுத்தபடம்

WITH THE BEST COMPLEMENTS
OF
TRICHY DISTILLERIES & CHEMICALS LTD.,
55,-A/1 Peters Road,
MADRAS—6.

Manufacturers of Industrial Alcohol and Carbon Dioxide

Factory at:
SENTHANNIPURAM, TIRUCHIRAPALLI DT.

Telegram: "FINE SUGAR" MADRAS. —— Telephone: 85273

Telegram : KOTHARI
Telex : 258 TR
With the compliments of :

Telephone : 24 & 44 Lalgudi

# Kothari sugars and chemicals limited,

KATTUR RAILWAY STATION
Lalgudi P. O., Tiruchirapalli District, TAMILNADU.
Manufacturers of WHITE CRYSTAL SUGAR

The Kothari Group :

KOTHARI & SONS

Blue Mountain Estates & Industries Limited (Kothari Superphosphate Factory)
Waterfall Estates Limited (Kothari Coffee Curing Works)
Balmadies Plantations Limited, Investment Trust of India Limited, Kothari Textiles Limited
Adoni Spinning and Weaving Co., Ltd., The Madras Safe Deposit Co., Ltd.

HEAD OFFICE :

## "KOTHARI BUILDINGS,"

20, Nungambakkam High Road, MADRAS—34.

Telegram : "KOTHARI"
Telex : 325 MS

Telephone : 82036 (8 Lines)
Trunk 811421 (3 Lines)

mdp/—

# நெஞ்சைத் தொடுகின்ற நினைவுச் சின்னங்கள்



காஞ்சிபுரம் வரதவாசல் தெருவில் உள்ள அண்ணாவின் இல்லம்

அண்ணா பயன்படுத்திய பொருள்களும் அவர்நினைவூட்டும் பல சின்னங்களும் இங்கே இடம் பெறுகின்றன



அண்ணா காஞ்சிக்கு வந்தால் எழுதவும், ஓய்வு கொள்ளவும் பயன்படுத்திய சின்னஞ்சிறு வீடு



அண்ணா 'தம்பிக்கு' எழுதி இலக்கியம் படைத்த - காஞ்சியில் உள்ள 'திராவிட நாடு' அலுவலகம்



வீட்டின் பின்புறத்தில் அண்ணா மான்வளர்த்து மகிழ்ந்த இடம்





அண்ணா அமைதியுடன் அமர்ந்து படிப்பதற்கு அமைந்திருந்த சின்னஞ்சிறு அறை



காஞ்சி சென்றால் அண்ணா கண்ணயராது எழுதுவதற்குள்ள அறை. இங்குதான் 'ஓர் இரவு' நாடகம் ஒரே இரவில் உருவாயிற்றாம்!

அ—



அண்ணா பயன்படுத்திய
அறிவாலயம் நூலகம்





‘ஈதென்ன? ஓட்டை
உடைசல் பெட்டி’ என்று கேட்காதீர்கள்;
அண்ணா கடைசிவரை டில்லிக்கு
எடுத்துச் சென்ற டிரங்குப் பெட்டி



அண்ணன் தோள்மீதும் மார்மீதும்
புரண்ட சால்வைகள்



முதலமைச்சர் ஆனபின்பும் அண்ணா
காஞ்சிக்கு வந்தால் கண்ணயரும்
கட்டில் இது!




அண்ணா உபயோகித்த
ஆங்கில அகராதி



ஓங்குபுகழ் அண்ணா
பயன்படுத்திய
ஒளி விளக்கு



அண்ணா தானே இறைத்துக்
குளித்த கிணறு இது



அண்ணா
கடைசியாகத் தோட்டத்தில் அமர்ந்து
இல்லத்தார் அனைவரிடமும்
மனம்விட்டுப் பேசிய இடம்



காஞ்சியில் – அந்நாளில் அண்ணா
அமர்ந்து பலருடன் அரசியல்
பிரச்சினைகள் பற்றி விவாதித்த இடம்



காலத்தோடு காலமாகிவிட்ட
அண்ணாவின் காலணிகள்



அண்ணா உபயோகித்த மூக்குப்
பொடி டப்பா – மூக்குக் கண்ணாடி –
அவர் பயன்படுத்திய டைரி –
பேனா ஆகியவை





அண்ணா
கடைசியாகப் பொங்கலன்று
உபயோகித்த ஆடைகள்



சென்னையில் உள்ள
அண்ணாவின் இல்லம்

அமுதோன்



சென்னையில் உள்ள அண்ணனின் நூல் நிலையம்

சென்னையில் அண்ணா ஓய்வுடன் அமரும் சாய்வு நாற்காலி





எப்போதும் தரையில் அமர்ந்தே எழுதும் அண்ணன் நோய்வாய்ப் பட்ட பிறகு எழுது வதற்குப் போடப்பட்ட மேசை – நாற்காலி! அவை இருக்கின்றன! அண்ணன் இல்லையே!



சென்னையில் அண்ணன் தொடர்புக்குப் பயன்படுத்திய தொலைபேசி – இன்று அவர் தொடர்பற்று இருக்கிறது!



அண்ணா அன்புடன் கலந்துரையாடிய வரவேற்பு அறை

அண்ணா அதிகாரிகளைச் சந்தித்து உரையாடிய அமைதி அறை





# அண்ணாவின் நிர்வாகத் திறன்

நல். முருகேசன்

"அண்ணாதுரையின் ஆட்சிநல்ல முறையில் ஆரம்பித்துள்ளதெனமகிழ்கிறோம். அவர்கள் ஆட்சிப் பீடத்தில் ஏறியவுடன் கூறிய சொற்கள், நிதானமானதும், கண்ணியமானதுமாக இருந்தன. நிர்வாகத்தில் மிக்க அக்கரை கொள்வார் என புலனாகிறது. தங்களை அழைத்து ஆலோசகராக வைத்துள்ள ஒன்றேஅதைக் காட்டுவது போல் இருக்கிறது,'' என டில்லி நிர்வாக வட்டாரத்தில் சில அதிகாரிகள் என்னிடம் கூறினார்கள். அண்ணாவின் அரசியல் விவேகத்தையோ, பொருளாதாரத் தத்துவத்தின் அறிவையோ எவரும் சந்தேகித்ததில்லை.

தோல்வியுற்ற எதிர்க்கட்சிப் பிரமுகர்களில் சிலர் அண்ணாவுக்கும் அவர் நண்பர்கட்கும் அரசியல் வாதம்தான செய்யத் தெரியும், மேடையின் மேல் அவருக்கு அடுக்கு மொழிகளில் பேசத்தான் தெரியும். நிர்வாக அனுபவம் அவர்கட்கு ஏது, என ஏளனம் செய்தார்கள். பதவி ஏற்ற சில மாதங்கட்குள்ளேயே அண்ணா தம் நிர்வாகத் திறனை அமைதியாக செயல்படுத்தி, எதிர்க்கட்சியினர் கூறியதைப் பொய்யாக்கியது மட்டுமல்லாமல், பலபேர் மதிப்பையும் பெற்றார். பொது மக்களும் மகிழ்ச்சி அடைந்தார்கள். அண்ணா கோலியது இன்றும் வளர்ந்து வருகிறது எனலாம்.

இருபது ஆண்டுகள் ஒரே கட்சி ஆட்சியில் இருந்த அதிகாரிகள தனக்கு உபகாரமாக இருப்பார்களா, இல்லையா என்ற ஐயப்பாடு அண்ணாவுக்கு இல்லை.

ஆனால், முதல் முதலில் அவர்களை சந்தித்துப்பேசிய போது தனது முழு நம்பிக்கையை அறிவித்து தனது கட்சியின் கொளகைகளும் பொதுநல நோக்கங்களும் சிறிது வேறுபட்டிருக்குமாகையால் அதிகாரிகள்கொஞ்சம் உணர்ந்து ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

உண்மையிலேயே அண்ணா பதவி ஏற்கையில் பொதுத் தேர்தல் சம்பந்தமாக முன் ஆண்டிருந்த கட்சி பல பிரச்னைகளை சரிவரக் கவனிக்காமல் விட நேர்ந்தது. அண்ணா உடமையாக எடுத்துக் கொண்ட பிரச்னைகள் உணவு, பொருளாதாரநிலை சமூக நல வளர்ச்சித் திட்டங்கள். தேர்தலுக்கு முன் மக்கள் ரேசன் கடைகளில் போதுமான அரிசி கிடைக்காமலும், நல்ல அரிசி கிடைக்காமலும் மிகவும் அவதிப் பட்டார்கள். இதை மறந்து, எதிர்க் கட்சியார் தி. மு. க. கட்சி தேர்தல் பிரச்சாரத்தில் ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடப் போவதாக கூறிற்றே. இப்போது அந்தக் கட்சி அரசு என்ன செய்யப் போகிறது என மூலைக்கு மூலை கூட்டம் போட்டு கேள்வி கேட்டார்கள்.

நான் ஆலோசகராக அமைக்கப் பட்டதற்கு முன் அண்ணாவுக்கு எழுதிய பாராட்டுக் கடிதத்தில்இந்த அரிசிப் பிரச்னையை முதலாக எடுத்து தீர்த்தால், அவரை ஏழைமக்கள்போற்றுவார்கள் எனக் கூறினேன சட்டப்படி ரேசன் இருக்கும் எல்லா இடங்களிலும் 100 ரூபாய்க்கு குறைநத வருமானமுள்ள எல்லா குடும்ப கார்டு பெற்றவர்களுக்கும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி அண்ணாவின்அரசு தந்தது. நான அண்ணாவுடன் நெருங்கிப் பழகியவன் அல்லன. இருப்பினும் என்பால் நல்ல மதிப்பு வைத்துள்ளதாக அறிந்தேன். தம்மைக்காண என்னை அழைத்தபோது, எழுந்து நின்று—அமரும்படிக் கூறி தாமும அமர்ந்தது என் மனதைக் கவர்ந்தது.

சில பிரச்னைகளைப் பற்றி பேசினோம். கூறுவதைக்கவனமாகக கேட்டு, தன் கருத்தை வெளிப்படையாக சொல்லவில்லை. இது அடக்கத்துக்கு அறிகுறி.

அண்ணா பதவி ஏற்ற போது மாநிலத்தின் பொருளாதார நிலை மிகக் கேவலமாக இருந்தது. உணவு நிலையும் அதுபோலவே. அரசாங்க கிடங்குகளில் ஸ்டாக்கு மிகக் குறைவாக இருந்தது. மத்திய அரசுக்குக் கொடுக்க வேண்டிய கடன தவணைகளும், வட்டி வகையறுக்களும் மிகப் பளுவாக இருநதன. இந்தத தவணைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று தமிழக அரசு செய்த விண்ணப்பத்திற்கு மத்திய நிதி மந்திரி இயலாமையை தெரிவித்தார்.

இது கட்சி வேறுபாட்டினால் இல்லாமல் போனாலும், அனுசரணையான பங்கை வெளிப்படுத்தவில்லை வரி வகைகளை பட்ஜெட்டுக்கு முன் அதிகப்படுத்துவது ஆகாத காரியம். ஆகுமென்றாலும் வரிஉயர்த்தினால் எதிர்க் கட்சியாளர் தி. மு. க. அரசு இதுதான் மக்களுக்கு செய்யும்நன்மை என தூற்றுவார்கள்.

எனவே, இந்த இக்கட்டில் செலவைக் குறைப்பது அவசியமாயிற்று. காவல் துறையிலும், நீதித் துறையிலும் வேண்டாத சிலஇடங்கள் உடனே விடப்பட்டன. இதுமாதிரியே பல துறைகளிலும் ஏற்ற அளவு செய்திருத்தல் கூடும். ஆனால் உடனே எதிர்க்கட்சியினரும் பத்திரிகைகளும் தி. மு. க. ஆட்சியில் பலர் வேலை இழப்பார்கள் எனப் பிரச்சாரத்தைக் கிளப்பினார்கள். சிறு சிறு சிக்கனங்கள் மிகுந்த சேமிப்பைத்தராது. எவ்வாறாயினும், அரிசி விலை குறைப்பு கட்சியின் பேரைக் காப்பாற்றிக் கொள்ளவும், மக்கள் நன்மைக்காகவும் செய்தே தீர வேண்டியதாயிற்று. அண்ணா சென்னையிலும் கோயமுத்தூரிலும் மட்டில் ரூபாய்க்கு ஒருபடி அரிசி போட உத்தரவிட்டது அவரது பொருளாதார ஜாக்கிரதையைக்காட்டிற்று. இந்த இரண்டு நகரங்கள்தான் பெரியதொழில் நகரங்கள். இங்கு விலைவாசி குறைக்கப்பட்டால் மாநிலம் முழுவதிலும் குறையும் என்பது உண்மையே. இநத இரணடு நகர்ங்களின் படி அரிசி திட்டம் அமுலுச்கே சுமார் 8 கோடி ரூபாய் ஆயிற்று. இந்தத் திட்டம் மாநிலம் பூராவும் விரிவாக்கப்படவில்லை. என்ற குறைபாட்டை சட்ட சபையிலும் வெளியிலும் பலர் பறை கூவினர். ஆனால் சிக்கலில் அடிப் படாமல் இந்த அமுலைத் தொடர்ந்து நடத்தியதால் இன்று ரேசனையே ஓரளவுக்கு நீக்க முடிந்தது எனலாம். இந்த ஒரு செயலிலேயே அண்ணாவின்தெளிவான அறிவும் உறுதியும் நன்கு விளங்கிற்று.

பண நெருக்கடி தொடர்ந்து இருந்து கொண்டே வநதது. ஒரு படி அரிசித் திட்டத்தால வரக்கூடிய நட்டத்துக்காவது ஈடுசெய்ய வேண்டுமெனக் கேட்டால் மத்திய அரசு தமிழக அரசு தம்மைக் கேட்டு இநதத் திட்டம் வகுக்கவில்லை எனவே, தங்களை உதவி கேட்கக் கூடாது என கூறிற்று. மதுவிலக்கு பல காங்கிரஸ் மாநிலங்களில் விடப்பட்டாலும், தமிழ்நாடு விடாது நிறைவேற்று வருவதால், அதறகுப் பண உதவி கேட்டால், மதுவிலக்கு ஏற்கனவே உள்ள திட்டம். அதற்குப் பணம் தர இயலாதென மறுக்கப்பட்டது. ஐந்தாண்டுத் திட்டத்தில் இல்லாத செலவுகளுக்கு மத்திய அரசு அதிகப் பணம் தர வேண்டும் என்று கேட்ட போதும் அது நிராகரிக்கப் பட்டது. இதற்கிடையே, போக்குவரத்தை அதிக அளவு அரசுடைமையாக ஆக்க வேண்டியது கட்சிக் கொள்கைகளில் கண்டிருந்தமையால், அதையும் கவனிக்க வேண்டியிருந்தது.

இதை ஆராய்ந்து குறிப்புகள் தரும்படி அண்ணா என்னை விரும்பினார். அதைப் பற்றிய எல்லா வெளிநாட்டு நூல்களையும் இந்திய மாநிலங்களின் அறிக்கைகளையும், போக்குவரத்து வரவு செலவு கணக்குகளையும் படித்தேன். போக்குவரத்து', பொருளாதாரத் துறையில் ஒரு கஷ்டமான தொகுதி. இங்கிலாந்தில் அரசு அந்தத் துறை நிபுணர்களைக் கொண்டு ஆலோசிப்பது சகஜம். இதில் பணச் சிக்கல்கள் மட்டுமல்ல, சட்ட ரீதியான சிக்கல்களும் பலப்பல. செங்கணக்காக ஏதோ சில பகுதிகளை அரசுரிமையாக்கி சமாளிக்கலாம். ஆனால் அதையும் நிர்வாகத்தில் நட்டமில்லாமல் நடத்துவது மிகக் கடினம்.



அண்ணா பொருளாதாரத்தில் எம். ஏ. பட்டம் பெற்றவராகையால் இதை ஆலோசித்தே முடிவு செய்ய வேண்டுமென நினைத்து, அதற்கு முன் சமூக வளர்ச்சித் திட்டத்தை ஆராய்ந்தார்.

இந்தத் திட்டத்தைப் பற்றி கணக்கற்ற புகார்கள் தினமும் பத்திரிகைகளில் வந்து கொண்டிருந்தன. இவைகளைப் பற்றி முன் இருந்த காங்கிரஸ் அரசு தீவிரமாக ஆராயவில்லை. அண்ணா இதை



ஆராயுமாறு விளம்பரம் செய்தவுடன் இதுபஞ்சாயத்யத்துக்களில் காங்கிரஸ் ஆதிக்கத்தை ஒழிக்க ஒரு சூழ்ச்சி என்று எதிர்க் கட்சிக்காரர்கள் தப்பாக முடிவு கட்டினார்கள்.

அதிலும் அந்தப்பரிசிலனை நிர்வாகத்தில் ஊழல்களுக்கு இடம் கொடுக்காதவன் என்ற நம்பிக்கையுள்ள என்னிடம் விடப்பட்டதால், சில அதிகாரிகள் அஞ்சினார்கள்.

அண்ணா கூறியபடி மத்திய பிரதேசத்தில் இந்த திட்டம் எப்படிச் செயல்படுகிறதென விரைவில் அங்கு சென்று பார்த்து முடித்தேன். குறுகியகாலத்தில் (ஆறே வாரங்களில்) ஒரு அறிக்கையை எழுதி அண்ணாவிடம் தந்தேன்.

இந்த ஆய்வை மேற்கொள்ளச் சொன்னபோது அண்ணா தன் கருத்துக்களையோ, நோக்கத்தையோ உத்தேசத்தையோ ஒரு சிறிதும் என்னிடம் வெளிப்படுத்தவில்லை. இது நல்ல முறை. இல்லையேல் முதலமைச்சர் கருத்திற்கு ஒத்ததாக அறிக்கை தயார் செய்யப் படலாம். அண்ணா என் அறிக்கையை முழுதும் படித்துப் பார்த்து அதன் நகல்களை எதிர்க் கட்சித் தலைவர்களுக்குத் தந்து அவர்களுடன் மூன்று முறை பேசினார்.

முதலில் அறிக்கை எந்த விதமாக இருக்குமோஎன்று பயந்தவர்கள் கூட சிற்சில கருத்து வேறுபாடுகள் தவிர்த்து முடிவில் ஏக தேசமாக ஏற்றுக் கொள்ளத் தக்கதாக இருந்ததைக் கண்டார்கள். முதல் கூட்டத்தில் அறிக்கையை என்னையே விளக்கிப் பேசுமாறு வேண்டினார். அவ்வாறே செய்தேன். கூட்டத்தின் முடிவில் நான் செய்த விளக்கம் ஏற்கத்தக்கதாக இருந்ததாவென அண்ணாவைக் கேட்டேன். அண்ணா புன்னகை செய்து தெளிவாக இருந்ததெனக் கூறினார்.

பின் இந்த அறிக்கையை மாவட்ட கலெக்டர்கள் மாநாட்டிலும் விவாதிக்க ஏற்பாடு செய்தார். அண்ணாவின் கொள்கை எதையும் ஆராயாது திணிக்கக் கூடாது என்பதேயாகும். பொதுவாக எல்லோருடைய சம்மதமும் (கான்சென்சஸ்) பெறுவது நல்லதென்பது அவரது விருப்பம். உண்மையே ஆராயாமல் விளையும் வாதும் வேதனையும் பயனற்றவை. இது நிர்வாக அடிப்படையில் நல்லதோர் முறையாகும். இந்த ஆராய்வின் விளைவாக இந்தத் துறையில் காணப்பட்ட குறைகள் குறைந்தன. புகார்களும் மறைந்தன.

அண்ணாவின் முதல் பட்ஜெட்டு பேச்சு மிகவும் திறம்பட இருந்தது. பல நாட்கள் அவர்கள் இரவெல்லாம் தாமாகவேபார்த்துத் திருத்தி ஆக்கப்பட்ட பேச்சாகையினால் அதுஅவர் நுண்ணிய அறிவை விளக்கிற்று.

மாநில பட்ஜெட்டைவிட மத்திய பட்ஜெட் மிகவும் பரந்தது. பலதிறப்பட்டது. அண்ணாவின் ராஜ்ய சபை அனுபவம் பலவிதங்களில் அவருக்கு உதவியாக இருந்தது.

# அண்ணா ஒரு தீபம்

காஞ்சி என்னும் ஊரில்—தமிழ்
காவிய அழகுத் தேரில்
தோன்றிய அறிஞர் அண்ணா—பல
தொல்லை கடந்தவர் அண்ணா!

பேச்சில் இருக்கும் சுவைகள்—அதை
பேணிக் காக்கும் செயல்கள்
மூச்சில் இருக்கும் தமிழே—அவர்
சிரிக்கும் குங்குமச் சிமிழே!

எதுகை மோனை ஓடும்—அவர்
எழுத்தில் நயங்கள் கூடும்.
மதுவை ஏந்தும் பூக்கள்—அவர்
மணித்தமிழ் எல்லாம் பாக்கள்!

ஆங்கில அறிவும் நிறையும்—அவர்
ஆற்றல் அதிலும் தெரியும்
தோன்றிடா தவர்க்குக் கோபம்—ஏழைத்
தோழர்க்கு அவரொரு தீபம்!

கழகம் கண்ட முதல்வர்—அவர்
கலைத்தாய் தமக்கும் புதல்வர்
உலகம் போற்றும் மேதை—அவர்
ஊரையில் தருவார் போதை

தலைவர் என்றே இருந்தார்—ஆனால்
தம்பிகள் என்றே அழைத்தார்
மலைபோல் வான்போல் உயர்ந்தார்—ஆனால்
மமதை இன்றியே வாழ்ந்தார்!

அமெரிக்க நாட்டில் அழைப்பு—அவர்
அறிவிற்கெங்கும் மதிப்பு
சமரசம் பேசும் புத்தர்—அவர்
தத்துவம் புகலும் சித்தர்

மறைந்தார் என்பது பொய்மை—எல்லோர்
மனதில் இருப்பது உண்மை
இருந்தார் என்பது நேற்று—என்றும்
இருப்பார் அவரோ காற்று!

**ப. நா. இராசேந்திரன்**

இந்தப் பேச்சில் மாநி
லங்களுக்கு அதிக வரு
வாய் தருவதற்கு அரசியல்
சட்டத்தைத் திருத்தி

அமைக்க வேண்டுமென்றும்,
இடையே நிதிக் கமிஷன்
இதைப் பரிசிலனை செய்து
பரிவுரைகள் கூற வேண்டு

மெனவும் வற்புறுத்தினார்.

அதே சமயத்தில் மாநிலத்துக்கு முக்கியமான சேலம் எஃகு ஆலை, தூத்துக்குடி முகத்துவார திட்டம் இவைகளை மத்திய அரசு கால தாமதமில்லாமல் அங்கீகாரம் செய்ய வேண்டுமென்றும் வற்புறுத்தினார். தொழில் துறை வளராது, பொருளாதாரமும், வேலை வாய்ப்புகளும் விரிவடையாது என்பது அவர் கொள்கையாகும்.

தொழில்களை அரசுடைமையாக்கும் தத்துவத்தில் தனது கொள்கை "விஞ்ஞான சோசலிசம்" என்று ஒருமுறை கூறிக் கொண்டார். அதாவது, சோசலிசம் என்பது எல்லாவற்றையும் அரசுடைமையாக்குவது மட்டுமல்ல, அதனால் உற்பத்தி பெருக்க வேண்டும், தொழில் திறனும், புது உற்பத்தி சக்திகளும் உண்டாக்க வேண்டுவதுமாகும். ஒரு சமயம் "இந்தியாவின் ஐந்தாண்டுத்திட்டங்கள்" என்ற ஹான்சன் என்ற பொருளாதார நிபுணரால் எழுதப்பட்டபெரிய நூலை (விலை ரூ. 100) அண்ணாவிடம் அவர் சுற்றுப் பிரயாணம் போகும்போது ரயிலில் தந்தேன். அந்த நூலை ரயிலிலேயே இரவு வெகு நேரம் படித்துக் கொண்டிருந்தார். புத்தகங்கள் என்றால் அவருக்கு உயிர்.

அவர் பிறந்த நாளன்று திருவாசகத்துக்கு யாழ்ப்பாண உரையுடன் ஒரு அழகாகக் கட்டப்பட்ட நூலைப் பரிசு தந்தேன். பலபேர் மலர் மாலை வைத்துக் கொண்டு காத்திருந்த அந்த நேரத்திலும் சுமார் 10 நிமிடங்கள் அந்த நூலை வாசித்துக் கொண்டிருந்தார்.

நிலத்தின் விளைவு உழைப்பினால்தான் பெருகும் என்பது திருவள்ளுவர் கொள்கை எனினும் பல ஏக்கர்கள் கரம்பு நிலத்தை தனிப்பட்ட குடியானவன் தன் ஏர் கொண்டு திருத்த முடியாததாகையால், ஒரு நிலப் பட்டாவும் (லாண்டு ஆர்மி) ஏற்படுத்தி டிராக்டர் கொண்டு முதல்உழவு போட்டு, பின் குடியானவர்கட்குத் தர வேண்டுமென ஒரு யோசனை செய்தார். அதன் விளைவாக சற்று வேறுவிதமான "சீரணியை" அண்ணா ஏற்படுத்தினார். இந்தியா பூராவும் அரசு சார்புபெற்ற சீரணி இது ஒன்றே.

பத்திரிகையாளராக இருந்தமையால் அண்ணா விளம்பரம், செய்தி இவைகளின் முக்கியத்துவத்தை நன்றாக அறிந்தவர். எது எவ்வாறாயினும் புது அமைச்சர் சபையின் நிர்வாக நடவடிக்கைகளை மட்டுமா[illegible] முறையாகப் பதிவு [illegible] அட்டவணை செய்தா[illegible]

அதன் விளைவாக செய்தித் துறையில் ஒருவரை இந்த வேலையைக் கவனிக்கும்படியாக ஏற்பாடு செய்யப்பட்டது.

நான் ஆலோசகராக இருந்தபோது நம் நாட்டு வெளி நாட்டுப் பத்திரிகைகளில் வரும் நிர்வாகச் செய்திகளையும், தி.மு.க. அரசைப் பற்றி வரும் குறிப்புகளையும் திரட்டி அண்ணாவுக்குத் தந்தேன். அந்த நாளில் மத்திய சர்க்கார் கட்சியைச் சாராத அசல் (கூட்டணியல்லாத) மாற்றுக் கட்சி ஒரு மாநிலத்தில் செயல் படுவதைக் குறித்து வெளி நாட்டுப் பத்திரிகைகள் கூட அதிசயத்துடன் எழுதி வந்தன.

இந்த அடி நாட்களில் இதுபோல் நிர்வாகத்தில் புதுப்புது ஈடுபாடுகள் ஆரம்பிக்கப் பட்டன. ஆனால் அண்ணாவுக்கு அவகாசமே இருப்பதில்லை. சில தினங்களில் நான்கு நாள் சவரம் பண்ணாமல் வளர்ந்த தாடியுடன் அலுவலகத்துக்கும் கூட்டங்கட்கும் அவர் போக நேரிடும். நோய் வாய்பட்ட பிறகும் அதே மாதிரி உழைப்புத்தான். அமெரிக்காவுக்கு அறுவைச் சிகிச்சைக்கு போவதற்கு முன் நான் அவரை ஜெனரல் ஆஸ்பத்திரியில்பார்த்த போது, தேனாம்பேட்டை தோட்டத்திலிருந்து பூக்கொத்துக்களைக் கொண்டு போய் தந்தேன்.

புன்முறுவலோடு வாங்கிக் கொண்டார். அம்முறுவல் மறைந்து கனவாயிற்று.

கடமை — கண்ணியம் — கட்டுப்பாடு என்ற மந்திரத்தை தானே அனுஷ்டித்து அண்ணா பிறருக்கும் வழி காட்டினார். இம்மூன்றுடன் இயல்பாகவே அவரிடம் கருணையும் கூடி இருந்தது. அவர் புகழ் என்றும் வாடாது. அவர் நினைவு நம்மைப் புனிதமாக்கும்!

## காரணம் என்ன?

அறிஞர் அண்ணா அவர்கள் நீதிக் கட்சியோடு தொடர்பு கொண்டிருந்த காலம் அது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 'ஆற்றோரம்' என்ற தலைப்பில் தமிழில் சொற்பெருக்காற்றிவிட்டு 'உலகம்—புதியதும், பழையதும்' என்ற தலைப்பில் ஆங்கிலத்திலும் உரையாற்றினார்.

நிகழ்ச்சி முடிந்தபின்—மாணவர்கள் தங்கள் ஐயப்பாடுகள் பற்றி அவரோடு பேசினர்.

"உங்கள் சொற்பொழிவில் சமதர்மம் காணப்படுகிறது. ஆனால் நீங்கள் ஏன் பதவி வேட்டையாடும் பிற்போக்குத் தன்மையுள்ள நீதிக் கட்சியிலே இருக்கிறீர்கள்?" என்றார் ஒருவர்.

"அந்தக் கட்சியில் நான் ஏன் இருக்கிறேன் என்றால் அந்தப் பணக்காரக் கட்சியைச் சனநாயக—சமதர்மக்கட்சியாக மாற்ற வேண்டும் என்பதற்காகத்தான்!" என்றார், அண்ணா.

கேட்டவர்கள் வியந்து தெளிந்து அண்ணாவைப் பாராட்டினார்கள்.





# ஒருமைப்பாட்டிற்கு உண்மையான வழி

சிலம்புச் செல்வர் ம.பொ.சி

அண்ணா அவர்கள் மறைந்து ஒன்றரை ஆண்டுகள் ஆகின்றன. அவர் தொடங்கி வைத்த தி.மு.க அரசு அவர் வைத்திருந்ததை விட அதிக அளவில் வலிவோடும், பொலிவோடும் வளர்ந்துள்ளதைக் காணுகின்றோம். ஆனால் இந்த அரசுக்கு பிறப்பிலேயே ஒரு குறையுண்டு. அது தாய்ப்பாலால் வளர முடியாததாகும்.

'உரிமை' என்பதையே நான் தாய்ப் பாலாகக் கருதுகிறேன். குழந்தையானது தாய்ப் பால் இன்றியும் வளர முடியும். ஆனால் அது வலுவான குழந்தையாக இருக்க முடியாது. அது அந்தக் குழந்தைக்கு நேர்ந்துவிட்ட ஒருவிபத்து என்றும் சொல்லலாம்.

ஒரு நாடு முழுவதற்கும் சுதந்திரம் எவ்வளவு இன்றியமையாத தேவையோ, அது போல அந்த நாட்டின் உறுப்பாக விளங்கும் மாநிலத்திற்கும் சுயாட்சி அவசியமாகத் தேவைப்படுகிறது.

சுதந்திரம் என்பதற்கும், சுயாட்சி என்பதற்கும் பொருளில் வேற்றுமை உண்டு. இன்னொரு நாட்டின் அல்லது இன்னொரு சமுதாயத்தின், அல்லது இன்னொரு அரசின் பிடிப்பின்றி தனித்து முற்றிலும் தனித்து இயங்குவதற்குப் பெயர்சுதந்திரம். இதிலிருந்து மாறுபட்டு,பலநாடுகள், பல பிரதேசங்கள், தொடர்பிலேயே இணைந்து அந்த நிலையிலும் தன்னாட்சி நிலையில் இயங்குவது சுயாட்சி.

அண்ணா அவர்கள் இதனைத்தெளிவாக உணர்ந்து தான் இந்தியாவில் மாநிலங்களுக்கு சுயாட்சி இன்றியமையாது தேவைப்படுகிறது என்பதனை இடைவராது வலியுறுத்தி வந்தார். தம் வாழ்க்கையின் இறுதியில் தம்பிக்கு எழுதிய மடலிலும் இதனை வலியுறுத்தியுள்ளார்.

மாநிலங்களுக்குச் சுயாட்சி வழங்கிவிட்டால் இந்திய ஒருமைப்பாடுஅழிந்து போய் விடும் என்கின்றனர் சிலர். இவர்கள் உண்மையிலேயே இந்திய தேசிய ஒருமைப்பாட்டில் பற்றுடையவர்களாக இருந்து அதுஅழிந்து விடுமே என்று அஞ்சுவார்களானால் அந்த அச்சத்தைப் போக்க நம்மால் முடியும். ஆனால் அவர்களுடைய தேசிய ஒருமைப்பாட்டுணர்வு உண்மையானதன்று. அவர்கள் வெளிப்படுத்தும் அச்சமும் கூக்குரலும் வெறும் பாசாங்கு. அதனால்தான் அவர்களைத் திருப்திப் படுத்துவது நம்மால் இயலாத ஒன்றாக இருக்கிறது. ஆனால் பொது மக்களிடம் தேசிய ஒருமைப்பாட்டில் நமக்குள்ள அழுத்தமான பற்றுதலை, எடுத்துக் கூறியாக வேண்டும்.

இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் பிரிந்து செல்லக் காரணம் என்ன?

தொடக்கத்தில் காயிதே அஜம் ஜின்னா அவர்கள் 14 உரிமைகளைக் கோரினார். அதனை ஜின்னாவின் 14 பாயிண்டுகள் என்று அந்நாளில் சொல்வதுண்டு. அவருடைய 14 கோரிக்கைகளிலே முஸ்லிம்கள் மிகுதியாக வாழும் பஞ்சாப், சிந்து, எல்லைப்புறம் ஆகிய மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்க வேண்டும் என்பதாகும். அந்நாளில் அந்தக் கோரிக்கையை அப்படியே ஏற்றுக் கொண்டிருக்கலாம். ஏற்றிருந்தால் நாட்டுப் பிரிவினை தவிர்க்கப் பட்டிருக்கும்! அதனை ஏற்பதற்கு மாறாக — ''14 பாயிண்ட் ஜின்னா'' என்று அவரைக் கேலி செய்தனர் காங்கிரஸ் தலைவர்கள். இதன் விளைவாக 1944–ல் நாட்டுப் பிரிவினை கோரும் அளவுக்கு மன மாற்றம்அடைந்தார் ஜனாப் ஜின்னா. அவர் பிரிவினை கோரி அதிலே உறுதி காட்டத் தொடங்கிய பின்னர் — ஜனாப் ஜின்னாவின் பழைய கோரிக்கையான மாநில சுயாட்சியை ஏற்க முன் வந்தனர். ஆனால் ஜனாப் ஜின்னாவும், முஸ்லிம்லீகும் காங்கிரஸ் தலைவர்களிடம் நம்பிக்கை இழந்து விட்டதால் அவர்களுடைய கருத்தை ஏற்க முன்வரவில்லை. நாட்டுப் பிரிவினையிலே உறுதி காட்டி வந்தனர்.

இந்தச் சரித்திரநிகழ்ச்சியான பாகிஸ்தான் பிரிவினைக்கு முஸ்லிம் லீக் மட்டுமின்றி காங்கிரஸ் கட்சியும் காரணம் என்பதனை அறிந்து கொள்ள வேண்டும்!

பின்னர் 1946–ல் பிரிட்டிஷ் அமைச்சரவை தூதுக் குழுவினர் இந்தியா வந்த போது, இந்தியாவைமூன்று மண்டலங்களாகப் பிரித்து அதிலே ஒரு மண்டலத்தை முஸ்லிம் மாநிலங்கள் அடங்கிய முஸ்லிம்கள் மிகுதியாக வாழும் மாநிலங்களாகச் செய்து மாநில சுயாட்சி அடிப்படையில் இந்திய தேசிய ஒருமைப்பாட்டை உறுதிப் படுத்தி இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கும் திட்டத்தினை அறிவித்தனர். சற்றுத் தயக்கத்திற்குப் பிறகு முஸ்லீம் லீக் பிரிட்டிஷ் திட்டத்தை மனமார ஏற்றுக்கொண்டு மத்திய இடைக்கால அமைச்சரவையில் கலந்து கொண்டது.

இந்திய அரசியல் நிர்ணய மன்றத்திலும் இடம் பெற்றது. பிரிவினைப் பிரச்சாரத்தையும் அடியோடு கைவிட்டது முஸ்லிம் லீக். ஆனால் காங்கிரஸ் தலைவர்கள் மன நிறைவு பெறவில்லை. குறிப்பாக இந்து தேசியவாதியான சர்தார்



வல்லபாய் பட்டேலுக்கு மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்கியது பிடிக்கவில்லை. குறைந்த அளவே அதிகாரங்கள் உடைய மத்திய ஆட்சியைக் கொண்டு மன நிறைவு பெற அவரால் இயலவில்லை. ஆகவேஇடைக்கால அமைச்சரவையில் தமக்கிருந்த செல்வாக்கைப் பயன் படுத்தி காங்கிரசிலேயும் சர்தார் பட்டேல் பெரும் தலைவராக விளங்கியதால் முஸ்லிம் லீக் விட்டு விட்ட நாட்டுப் பிரிவினைக்கு உயிரூட்ட முன் வந்தார்.

ஆம்! அப்போது இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த லார்டு மவுண்ட் பேட்டனும், சர்தார் பட்டேலும் பிரிவினை உணர்ச்சிக்குத் தூபமிட்டனர். அதிகாரங்கள் அற்ற மத்திய அரசு இருப்பதை விட பாகிஸ்தானைப் பிரித்து விட்டு எல்லா அதிகாரங்களும் கொண்ட ஏகாதிபத்தியமாக இந்திய அரசு இருப்பதே இந்துக்களுக்கு நன்மையாகும் என்பதனை சர்தார் பட்டேல் உணரும்படி செய்தார் மவுண்ட் பேட்டன்.

இயற்கையிலேயே இந்து தேசியவாதியான சர்தார் பட்டேல், லார்டு மவுண்ட் பேட்டன் வலையில் விழுந்தார். அதன் விளைவுதான் பாகிஸ்தான் பிரிவினை. ''இந்தியாவின் விடுதலை வெற்றி'' என்னும் தமது நூலில் இதுபற்றிய ரகசியங்களை எல்லாம் அம்பலப் படுத்தியுள்ளார் மௌலானா அபுல் கலாம் ஆசாத்.

காஷ்மீர் பிரச்னை இந்தியாவுக்கு ஒரு தலைவலியாக அமைந்ததற்குக் காரணம் அதற்கு முதலில் வழங்கப் பட்ட சுயாட்சிஉரிமையைப் பின்னர் பறித்து விட்டதே காரணம்.

முதன் முதலாக இந்தியாவுடன் காஷ்மீர் இணைந்த போது இன்று நாம் கோருகின்றதை விடவும் அதிக அளவில் அந்த மாநிலத்திற்கு சுயாட்சி வழங்கியது இந்திய அரசு.

ஆனால் இந்தியாவின் அந்த ஒரு மாநிலத்தில்மட்டும் முழு அளவில் சுயாட்சியை அமுல் நடத்திக் கொண்டு மற்ற மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்காமல் அவற்றின் மீது ஆதிக்கம் செலுத்திக் கொண்டு செல்வது மத்திய அரசால் இயலாததாக இருந்தது. காங்கிரசிலே செல்வாக்குப் பெற்றிருந்த இந்து தேசியவாதிகள் காஷ்மீர்சுயாட்சி பெற்றதை விரும்பவில்லை. அதனை முன்மாதிரியாகக் கொண்டு மற்ற மாநிலங்கள் சுயாட்சி பெற்றுவிடக் கூடும் என்று அச்சம் கொண்டனர். அதனால் காஷ்மீருக்கு அரை மனதுடன் வழங்கப்பட்டசுயாட்சி பறிக்கப்பட்டது. மற்ற மாநிலங்கள் நிலைக்கு காஷ்மீரையும் கொண்டு வந்துவிட்டது மத்திய அரசு. அங்கிருந்துதான் காஷ்மீர் பிரச்னை விஷத்தன்மைபெற்றது. இவ்வளவையும் நான் கூறக் காரணம் — தேசிய ஐக்கியத்தை விரும்புவதாகச் சொல்லிக் கொள்ளும் தேசியவாதிகள் என்போரே அந்த ஐக்கியத்தைக் குறைக்கும் வகையில் செயல்பட்டு வந்தனர் என்பதைப் புலப்படுத்தத்தான்.

இன்றுள்ள இந்திய ஒருமைப்பாடு இயற்கையானதன்று. மாநிலங்களில் வாழும் மொழி வழிப்பட்ட தேசிய இனங்களின் விருப்பத்தின் பேரில் அமைந்ததன்று.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் ஏகாதிபத்தியத்தின் நலத்திற்காக உருவாக்கப் பட்ட ஒருமைப்பாட்டை நாடு சுதந்திரம் பெற்ற பிறகும் நீட்டித்துக் கொள்வதென்பது இயலாததாகும் இந்த உண்மையை தேசிய ஒருமைப்பாடு பற்றிக் கூப்பாடு போடுபவர்கள் உணர வேண்டும்.

அண்ணா அவர்கள்தி.மு. கழகத்தின் மீது தனக்கிருந்த எல்லையற்ற செல்வாக்கினைப் பயன்படுத்தி 'திராவிட நாடு' தனி நாட்டுக் கோரிக்கையைஇந்தக் கழகம் கைவிடும்படிச் செய்தார். பிரிவினையைக் கைவிட்ட அவர் மாநில சுயாட்சிக் கொள்கையை தி. மு. கழகத்தை ஏற்கும்படிச் செய்தார். ஆம்! அவரின் எதிரே இரண்டே வழிகள்தான் தோன்றின; ஒன்று நாட்டுப் பிரிவினை — இன்னொன்று மத்தியில் உள்ள அதிகாரங்கள் பிரிவினை. நாட்டுப் பிரிவினை வழியில் செல்வது தேவையில்லை என்பதனை உணர்ந்த போது மத்தியில் உள்ள அதிகாரங்களைப் பிரிவினை செய்யும் வழியில் தி.மு.க.வை நடத்திச் செல்ல முன் வந்தார். எந்தக் காரணத்தைக் கொண்டும் இப்போதுள்ள ஏகாதிபத்திய ரீதியிலான மத்திய அரசை ஏற்க அண்ணா மறுத்து விட்டார்.

இப்போது நிலைமைதெளிவாக இருக்கிறது. பாகிஸ்தானை இழந்துவிட்ட எஞ்சிய இந்தியாவின் ஒருமைப்பாடு காப்பாற்றப்பட வேண்டுமானால் அனைத்து மாநிலங்களுக்கும் சுயாட்சி வழங்கியாக வேண்டும். சுயாட்சி ஒன்றுதான் பிரிவினையைத் தவிர்ப்பதற்கான மாற்றுத் திட்டம்.

இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்கு உண்மையாகவே காங்கிரஸ்காரர்கள் என்று சொல்லிக் கொள்வோர், விரும்புவார்களானால் மாநில சுயாட்சிக்கு எதிராக உள்ள தங்கள் போக்கை அவர்கள் திருத்திக் கொள்ள வேண்டும். அண்ணாவின் பிறந்த நாளில் இது நான் அவர்களுக்கு விடும்வேண்டுகோளாகும்.




கட்டிட திட்டங்களுக்கு நிரந்தரமான
உருவ அமைப்பு அளிக்க

சங்கர்
சிமெண்ட்

சங்கர் தரமான சிமெண்ட்.

SANKAR IC CEMENT

இருபது வருடங்களுக்கு மேலாக
சேகரிக்கப்பட்ட அனுபவ அறிவு ஒவ்வொரு
சிமெண்ட் பையிலும் அடைக்கப்படுகிறது.
தரம், திடம், நிரந்தரம், இவையனைத்தையும்
ஒருங்கே அளிப்பது சங்கர் சிமெண்ட் ஆகும்.

ISI தரம் பெற்றது.

தி இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்
சென்னை-2.
தொழிற்சாலைகள்: சங்கர் நகர்—சங்கரி

இலவச தொழில் நுணுக்க ஆலோசனைக்கு
சிமெண்ட் சர்வீஸ் பீரோ
"தி கிரோவ்", சென்னை-18.

# பிறந்த நாள் பெருமை

**சா. கஜேந்திரன்**

சர்வம் அண்ணா மயமாக இருந்த தமிழகத்தின் பொற்காலத்தில் அப்பெருந்தகை தமது சொல்வளப் பெட்டகத்திலிருந்து — சொல்லோவியக் களஞ்சியத்திருந்து வாரி வழங்கிய மாற்றுரும் மதிக்கும் கருத்துரைகள், பொன் மொழிகள், விளக்கங்கள் ஆயபிற எத்தனை எத்தனையோ? அவற்றுள் ஒன்றிரண்டை மட்டும் எடுத்தியம்பி அண்ணனுக்கு அவனி அஞ்சலி செலுத்தும் அவர் பிறந்த நாளில் அவரை நினைவு கூர்கிறேன்.

1967—68ம் ஆண்டுக்குரிய முறையான வரவு—செலவுத் திட்டத்தைத் தயாரித்து ஜூன் திங்களில் சட்டப் பேரவையின் முன் வைப்பதற்கு முன்னால் அண்ணா முதலமைச்சராகப் பதவியேற்ற சில நாட்களுக்கெல்லாம் 1967—68ம் ஆண்டுக்குரிய இடைக்கால வரவு—செலவுத்திட்டத்தை பேரவையின் முன்வைத்த போழ்து மாநிலங்களின் சொற்ப நிதி வசதிகளைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசியதாவது:

''திட்டத்தின் கட்டுக்கோப்பிற்குள், உண்மை நிலையை அடிப்படையாகக் கொண்டு, மாநிலங்களுக்கு அதிகமாக நிதி வசதிகளை வழங்குவதன் மூலமாகவே மாநில அரசாங்கங்கள் ரிசர்வ் பாங்கியிலிருந்து அதிகப் பற்று வாங்கும் சிக்கலுக்குத் தீர்வு காண முடியும். இச்சிக்கல்குறித்து விறுவிறுப்பான பொது விவாதமும் சொல்லாடலும் நிகழ்ந்திருக்கின்றன. மாநிலங்கள் தங்கள் நிதிநிலைகளை மிக்க விழிப்போடு நிர்வகிப்பது தேவை, என்பதை நாம் குறைத்துச் சொல்லவில்லை. மற்றும், மாநிலங்கள் வளர்ச்சித் திட்டங்களுக்கு வேண்டிய நிதிவசதிகளைத் திரட்டிக் காப்பதற்குத் தங்களால் இயன்ற எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்பதையும்நாம் குறைத்துச் சொல்லவில்லை. கண்ணும் கருத்தும் கலந்த நிதி நிர்வாகத்தை வளர்க்கும் தங்களுடைய எல்லா முயற்சிகளிலும் மத்திய அரசாங்கத்துடன் நாங்கள் முற்றிலும் ஒத்துழைப்போம். என்றாலும், நிதி விவகாரங்களில் மிக மேம்பட்ட ஒழுங்கைக் கடைப்பிடிக்கிற ஒரு மாநிலம் ஒப்புதல் பெற்ற திட்டங்களை நிறைவேற்றுவதில் இடருற்றால், மத்திய அரசாங்கமும், திட்டக் கமிஷனும் அதன் இடர்ப்பாடுகளை, குறிப்பாக இந்த இடர்ப்பாடுகள் தற்காலிகமானவை என்று தெரியும் போது, அவற்றைச் சமாளிக்கும் வகையில் உதவி செய்ய முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதிகப்பற்று வாங்கும் இப்பிரச்சனையை அத்தகைய உதவி மனப்பாங்கோடும், அரசியல் மூதறிவோடும் அணுகாமல் வெறும் வாங்கல் அல்லது கொடுக்கல் பிரச்சினையாகவோ கருதினால், மாநிலங்களின் வளர்ச்சி வேலைகள் பெரிதும் இடருறும்.''

தமிழ் நாடு சட்டசபையின் நிதிநிலை (1967—68) கூட்டத் தொடர் பல அம்சங்களிலும் புதியதொரு வரலாறு படைத்ததாயமைந்திருந்தது என்றால் மிகையாகாது. அதன் ஆரம்பமும் முடிவும் அதுவரை சட்டசபையில் நிகழ்ந்திராத இரு நிகழ்ச்சிகளைக் கொண்டதாக அமைந்திருந்தன.



சட்டசபை வரலாற்றில் முதன் முறையாக 1967ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17–ம் நாளன்று 'அகர முதலஎழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு' என்ற கடவுள் வணக்கத்துடன் கூட்டம் தொடங்கியது. அது போலவே முதன் முறையாக 'தமிழ் நாடு' வாழ்க' என்ற வாழ்த்தொலி மும்முறை முழங்கக் கூட்டம் ஜூலை 18-ம் நாளன்று முடிவுற்றது. எதிர்க் கட்சியினராலும் குறைகாண முடியாத புதிய நிதி நிலை அறிக்கையைத் தாக்கல் செய்வதற்கு முதல் நாள் அதன் புதிய அம்சம் என்ன என்ற கேள்விக்குப் பதி அளித்த முதல்வர் அண்ணா 'இந்த நிதிநிலை அறிக்கையை நான் தாக்கல் செய்கிறேன் என்பதே புதுமையானது தானே என்றுகூறினார். ஜூலை 24-ம் நாள் 'மித்திரன்' நாளேட்டில் வெளியாகியிருந்த விமர்சனத்தில் கீழ் வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது கவனிக்கத்தக்கது.

பட்ஜெட்டைத் தாக்கல் செய்ததில் மட்டுமல்ல பதிலிறுப்பது போன்ற பல பலவற்றிலும் முன்னணியில் நின்றவர் முதலமைச்சர் என்றால் மிகையாகாது. கேள்வி நேரத்தில் அவர் தந்த பதில்கள் விவாதத்தில் குறுக்கிட்டுத் தந்த விளக்கங்கள் அவரை நல்லதொரு 'பார்லிமெண்டேரியனாக' படம் பிடித்துக் காட்டின. எந்த ஒரு கேள்விக்கும், மாட்டிக் கொள்ளாமல் எதிரியை எதிர்க் கேள்வி போட்டு திணற வைக்கும் திறமை அரசியல் வாதிக்கு அவசியமானதே அல்லவா? அந்தத் திறமை நிரம்பப் பெற்ற காரணத்தால் முதலமைச்சர் மற்றவர்களுக்கெல்லாம் சேர்த்துக்கூட ஈடு கொடுத்து விட்டார்.

திருச்சியில் 1967-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அண்ணா தி. மு. க. தொண்டன்எனப்படுபவனின் இலக்கணம் எத்தகையதாயிருக்க வேண்டுமென்பதை வர்ணித்தார். அது கீழ் வருமாறு:

''அடக்க உணர்ச்சியுடன் தி. மு. க. ஊழியர்கள் தங்கள் பணிகளைச் செய்ய வேண்டும். தி.மு.க. ஆட்சிக்கு வந்து விட்டதால் நாம் இனி எது வேண்டுமானாலும் செய்யலாம் என்று எந்தத் தி.மு.க. உறுப்பினராவது நினைத்தால் அவரை நான்துரோகி என்று கருதுவேன். கதிர் முற்றிய நெற்பயிர் தலை சாய்ந்து இருப்பது போல தி.மு.க. ஊழியர்கள் சிரம் தாழ்ந்துநடக்கவேண்டும்.''

மூதறிஞர் ராஜாஜிஉணவு உற்பத்தி பெருக்குவதில் அண்ணா கையாண்ட வழியைப் பாராட்டிடும் வகையில் கீழ்க்கண்டவாறு கூறியிருப்பது மறக்கற்பாலதன்று:

''உழவர்களுக்கும் நில உடைமைக் காரர்களுக்கும் இடையே சௌஜன்ய, சமாதான உறவை வளர்ப்பதன் மூலம் உற்பத்தியை பெருக்க முடியும்; அல்லது இந்த இருதரப்பினரையும் ஒருவருக்கொருவர் மோத விட்டு வோட்டுக்களை அதிகம் பெற முயற்சிக்க முடியும். ஆட்சி பீடத்தில் உள்ள எந்த ஒரு அரசியல் கட்சியும் கையாளக்கூடிய வழிகள் இவை. ஆனால் ஸ்ரீ அண்ணாத்துரை, காங்கிரஸ் கட்சி போலின்றி நல்லதொரு வழியைப் பின்பற்றுவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். உழவர்களும் நில உடைமைக் காரர்களும் பரஸ்பரம் ஒத்துழைக்க வேண்டுமென்று அவர் வற்புறுத்தி வருகிறார். இரு தரப்பினரிடையே பூசலை உண்டாக்க அவர் முயற்சிக்கவில்லை. பரஸ்பரம் நல்லெண்ணமும் உதவி செய்யும் உணர்ச்சியும் நிலை பெற வேண்டுமென அவர் விழைகிறார்.

(மித்திரன்—3-8-67)

ராஜாஜி போன்றவர்களால் பாராட்டப்பட்ட மகோன்னத புருஷனை — கோடானு கோடி தமிழர்களின் உள்ளத்து ஒளியை — ஆற்றல் மிக்க பேரறிவாளனை நினைக்குந் தோறும் மாசில் தலைவன் இன்று நம்மிடையே பவனி வரவில்லையே, கால நீரோட்டச் சுழியினிலே ஆழ்ந்து விட்டாரே என்று வையகமெங்கிலும்வாழ்கின்றதமிழர் நெஞ்சமெலாம் கதறத்தான் செய்கிறது; ஆனால் என் செய்ய?

ஏட்டினிலே தேன்வடித்து மக்கட்கெல்லாம் வழங்கினார்; நாட்டின் மானத்தைக் காத்தார்.

புகழ்மலையின் உச்சியிலே போயமர்ந்தார்; சொன்ன படி படியளந்து காட்டினார்

பகையுணர்ச்சி அரசியலில், உறவை நட்டுப் பாசத்தைப் பயிரிட்டார்; மண்ணிலே மறைந்தார்.

ஆயிரம் ஆண்டு அன்னைத் தமிழ் தவமிருந்து பெற்ற கற்பனை ஊற்றின் அறிஞரேறு தோன்றிய தாயகத்தில் நாமும் தோன்றியவர்களாயுள்ளோமென்ற எண்ணத்தின் துணை கொண்டு விழி நீரைத் துடைத்தெடுத்துப் பெருமை கொள்வோமாக.



## பெரிய சாமியும்! சின்னச் சாமியும்!

வடநாட்டிலுள்ள அரித்துவாரத்திற்குச் சென்ற பெரியாரோடு அண்ணாவும் சென்றிருந்தார்.

வெண்தாடி பளபளக்க, மஞ்சள் நிறச் சால்வை யொன்றைப் போர்த்திக் கொண்டு மாலை நேரத்தில் கங்கை நதி தீரத்தில் உலாவச் செல்வார் பெரியார். போர்வை இல்லாததாலும், குளிர் தாளாததாலும் கைகளை இறுகக் கட்டிக்கொண்டு அவர் பின்னே செல்வார் அண்ணா.

இந்தக் காட்சியைக் கண்ட வடக்கத்திய பக்தர்கள், பெரியாரைப் பெரிய சாமி என்று கருதி அவர் காலில் விழுந்து வணங்குவார்கள். பெரிய சாமியாரின் சக்தியில் சின்ன சாமியாருக்கும் கொஞ்சம் இருக்காதா என்று அண்ணாவின் காலிலும் விழுந்து வணங்கினார்களாம் அங்கே பலர்!

❖ ❖ ❖

## யாருக்கு ஊசி?

அண்ணா அவர்களின் நெருங்கிய நண்பர்களில் ஒருவரை எலி கடித்து விட்டது.

விஷயமறிந்த அண்ணா ''அப்படியானால் உயிருக்கே ஆபத்தாச்சே! ஊசிபோட்டாகணுமே?'' என்றார்புன்னகையோடு.

''அதெல்லாம் வேண்டியதில்லை, எலி கடித்து நான்ஒன்றும் நிச்சயமாய் செத்துவிடமாட்டேன்'' என்றார் அந்த நண்பர்.

''உம்மைப் பற்றியா நான் சொன்னேன்? அந்த எலியைப் பற்றியல்லவாசொன்னேன்!'' என்று அண்ணா சொன்னாரோ இல்லையோ, வலி மறந்து அந்த நண்பர். கூட விழுந்து விழுந்து சிரித்து விட்டார்.

TIDCO

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (வ.து.)
உற்பத்தி செய்யும் உயர்ந்த ரக சிமெண்ட்

மிகச் சிறந்த மூலப் பொருள்களையும் நவீன தொழில்
நுட்பத் திறனையும் கொண்டு உற்பத்தி செய்யப் பெறும்

அரசு போர்ட்லண்ட் சிமெண்ட்

ஐ.எஸ.ஐ. நிரணயித்துள்ள தரத்தைக் காட்டிலும் சிறப்பானது

வலிவும் வனப்பும்
வாய்ந்தது
எளிதில் கிடைப்பது,
சிக்கனமானது.
முழு திருப்தியும்
உங்களுக்கு
அளிக்கவல்லது.

TIDCO

தமழநாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (வ.து.)
(தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானது)
150-A. 3-வது மாடி. எல்.எல்.ஏ. கட்டிடம், த.பெ.எண் : 5205, மவுண்ட் ரோடு, சென்னை-2
தொழிற்சாலை; தமிழ்நாடு சிமெண்ட்ஸ். ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

AC-8



கட்டிடங்களுக்கு
வலிமை, பாதுகாப்பு, ஸ்திரம்,
அளிப்பது.

கே.சி.பி. அலலது துர்கா சிமெண்ட்

KCP CEMENT — தி கே.சி.பி. லிட்.

DURGA CEMENT — தி ஆந்திரா சிமெண்ட் கம்பெனி லிட்.



# தொங்கும் தண்ணீர்!

கடைதிறப்பாம் சுவைதிறப்பு நடையும், கங்கை
கண்டபடை நடப்புப்போல் நடையும், பாட்டின்
இடையிடையே எழுகின்ற நடையும், தென்றல்
ஏந்திவரும் இளநடையும், அண்ணு காட்டி
அடைநிறைந்த தேன்துளியால் சொற்கள் தந்தார்!
அங்கங்கே ஆதார அடிகள் தந்தார்!
தடைநடையே அவர்நடையில் இல்லை! தொங்கும்
தண்ணீராம் அருவியிலே தடங்கள் உண்டோ?

புலவர் - கரந்தை கணேசன்

# அறிவும் பண்பும் அமைந்த தலைவர்

## ஔவை டி. கே. சண்முகம் எம்.எல்.சி.

எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் அதிலே ஒரு புதுமையும் மறுமலர்ச்சியும் கண்டவர் பேரறிஞர் அண்ணு அவர்கள். நாடகத்துறையை எல்லாத் துறைக்கும் வழிகாட்டும் ஒரு தாய்த்துறையாக மதித்தவர் அவர். நாடகத்துறையை நாம் இன்னும் தேவைப்படுமளவுக்குப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதே அண்ணு அவர்கள் அடிக்கடி சொல்லும் குறை. அவருடைய கலை இலக்கியச் சொற்பொழிவுகளைத் தொடர்ந்து கேட்டு வந்தவர்கள் இந்த உண்மையை அறிவார்கள்.

அறிவும், பண்பும் இணைந்து நிற்பவர்களால்தான் இவ்வுலகில் மகத்தான சாதனைகளைச் செய்யமுடியும். அறிவாளிகள் நம்மிடையே பலர் இருக்கிருர்கள். அவர்கள் பண்பாளர்களாக விளங்குவதில்லை. அவ்வாறே பண்பாளர்களிலே பலர் நம்மிடையே இருக்கிருர்கள். அவர்,கள் அறிவுடையவர்களாக விளங்குவதில்லை. அறிவு ஆற்றல் உயர்ந்த கலைத்திறன் இவற்ரேடு சிறந்த பண்பாட்டுத் திறனும் பெற்று விளங்கியவர் அண்ணு அவர்கள். அதனுல்தான் அவர்கள் கோடிக்கணக்கான மக்கள் உள்ளங்களிலே இடம் பெற முடிந்தது. மகாகவி பாரதி சொல்லுகிருர்:

''பெருங்கொலைவழியாம் போர்வழி இகழ்ந்தாய்,
அதனிலும் திறன் பெரிதுடைத்தாம்
அருங் கலைவாணர் மெய்த்தொண்டர் தங்கள்
அறவழி என்றும் அறிந்தாய்''

இது மகாத்மா காந்தியடிகளின் ஒத்துழையாமைப் போராட்டத்தைப் பாராட்டியபோது பாரதி எழுதிய பாடல். காந்தியடிகள் கண்ட இந்தக் கலைவழிப் போராட்டத்தின் வலிமையை உணர்ந்து அதனை அப்படியே செயற்படுத்திக் காட்டியவர் பேரறிஞர் அண்ணுஅவர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் கலையினுல் வளர்ந்த கழகம் என்றே குறிப்பிட வேண்டும். அக்கழகம் நிலைத்து நிற்பதற்கும், நீடித்துப் பணியாற்றுவதற்கும், பேரறிஞர் அண்ணு அவர்களின் கலைவழியினையே பின்பற்ற வேண்டும் என்பதே என் வேண்டுகோள். கலைஞர் அவர்களைத் தலைமையாகக் கொண்ட ஆட்சி இந்தநற்பணியினைச் செய்யும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

நீண்ட கட்டுரை எழுத இயலாத நிலையில் பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருக்கிறேன். மன்னித்தருள்க, என் உளமார்ந்த பாராட்டுக்கள்.

# பேரனுக்காக அண்ணு கட்டிய வீடு!

''தாத்தா எனக்கொரு வீடு கட்டிக் கொடு தாத்தா!''

''வீடு தானே! இரு இப்போதே கட்டித் தருகிறேன்,''—என்று கூறிவிட்டு, தாத்தா கலர்பென்சிலால் பேப்பரில் வீடு, தோட்டம், மரம்செடி, ஆகியவைகளை உண்டாக்கித் தருகிருர். பேரன் கேட்கிருன்—''என்ன தாத்தா இது தாணு வீடு''? ''ஆமாண்டா கண்ணு! என்னுல் பேப்பரில் தான் வீடு கட்டித் தர முடியும்—நிஜ வீடு வேண்டுமானுல் உன் அப்பா அம்மாவைக் கட்டித் தரச் சொல்!''

பொன் மலரிடம் இப்படிக் கூறிய தாத்தா வேறுயாருமல்ல—நம் இதயத்தில் கொலுவிருக்கும் அறிஞர் அண்ணு அவர்கள்தான்.

அண்ணு கைப்பட எழுதிய ஓவியம்தான். இது.



# திரு. ஆருரான் ஷுகர்ஸ் லிமிடெட்.,

வடபாதி மங்கலம்

தஞ்சை மாவட்டம் - தமிழ் நாடு

உயர்தர வெண்படிக சர்க்கரை

(White Crystal Sugar)

தயாரிப்பவர்கள்:-

பதிவுக் காரியாலயம் :-

55-ஏ-1 பீட்டர்ஸ்ரோடு, சென்னை-6.

தந்தி: "FINE SUGAR"
சென்னை

தொலைபேசி: 85273

# வட ஆற்காடுமாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை லிட்.,

வடபுதுப்பட்டு [அஞ்சல்]

(வழி) ஜோலார்பேட்டை, ஆர். எம். எஸ்.,

தொலைபேசி: 264 / 269 (ஆம்பூர்)

தந்தி: "SUGARS" (ஆம்பூர்)

## நற் செய்தி

ஆம்பூர் "மாட்டுத் தீவனம்" விரைவில் உற்பத்தி தொடங்கும்.

கால்நடைகளுக்கு இதுஓர் வரப்பிரசாதம்!

ஃ பால்தரும் பசுக்களுக்கு
ஃஃ உழைக்கும் எருதுகளுக்கு
ஃஃஃ கன்று இனங்களுக்கு
மிக மிகப் பலன்தரும் தீவனம்!
இது விஞ்ஞான முறையில் தயாரிப்பது
மிக்க சத்துள்ளது!
மலிவான விலை!

அதிக பால் உற்பத்திக்கு ஆம்பூர் மாட்டுத்தீவனம்.
தரமிக்க வெள்ளைச் சர்க்கரை உற்பத்தியாளர்கள்.
ஆம்பூர் சர்க்கரை இல்லந்தோறும் விரும்பிக் கேட்கிறார்கள்!

பி. சி. சிரியாக், ஐ. ஏ. எஸ்.,
பொது மேலாளர்.

தோப்பூர் திருவேங்கடம் எம். ஏ.,
தலைவர்



# அண்ணாவும் சமயமும்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

இன்றைய மனித சமுதாயம் நிறை நலம் பெற்று வாழ்ந்து வருவதாகக் கூற முடியாது. எண்ணத் தொலையாத குற்றங்கள் குறைகள்! அழுது முடியாத அவலங்கள்! தூக்கிச் சுமக்க முடியாத தொல்லைகள்! அப்படியிருந்தும் சமுதாயம் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறது! காரணம், உயிர் வாழ்க்கையிலுள்ள ஈடுபாடு தான். ஒப்பற்ற பகுத்தறிவு படைத்த சமுதாயத்தில் ஏன் இந்த அவல நிலை? இந்தக் குற்றம் குறைகளுக்குப் பொறுப்பு யார்? என்று வினா எழுப்புவோர் இன்று பலரில்லை; சிலரேயாம்! பலர், அவலம் இயற்கையென்றும் — அழுவது தொழில் என்றும் முடிவு கட்டி விட்டனர். ஆனால், அறிஞருலகம் இந்தக் குற்றங் குறைகளுக்குக் காரணத்தைக் கண்டுகாட்டுகிறது.

''சமுதாயத்தில் காணப்படும் குறைகளை மேலெழுந்தவாரியாக ஆராய்ந்தால், அவை அரசியல் குற்றங்கள் எனக் காட்சி தரும். மேலும் ஆழமாக ஆராய்ந்தால் அரசியல் அல்ல. சமூக அமைப்பே காரணம் என்று தோன்றும். மேலும் நுணுகி ஆராயின் சமூக அமைப்பு காரணமல்ல, சமயங்களே காரணம் என்பது புலப்படும்.'' என்றொரு அனுபவ மொழி உண்டு. ஆம்! அரசியலும், ஆட்சியியலும் தோன்றுவதற்கு முன்பு, தோன்றியது சமய இயல். சமய இயல் தோன்றிய காலத்தில் ஒழுக்கத்தை அரண் செய்து காக்க— நீதியை நிலை நிறுத்தத் தோன்றியது. ஆனால், காலப் போக்கில் கறை படிந்த மனிதர்களால் சமயமும் கறை படுத்தப் பெற்றது

மக்கள் குலத்தில் அறுகு போல் வேரோடி ஆல் போல் தழைத்து இருந்த சமயத்திற்கு எதிர்ப்புகள் தோன்றின. அந்த எதிர்ப்பு, இயக்கங்கள் வடிவம் பெற்றன.

அமரர் அறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தில் அத்தகைய ஒரு பேரியக்கத்தின் தானைத் தலைவராக விளங்கியவர். அறிஞர் அண்ணா, சமய நெறிக்கு முற்றிலும் மாறுபட்டவர்— முரணானவர் என்று கருதுவதற்கிடமில்லை. அவரேஒரு தடவை, காரைக்குடி இந்து மதாபிமான சங்கத்தின் பொன் விழாவில் பேசும் பொழுது, ''இன்று நம் முன்னே உள்ள கேள்வி சமயம் வேண்டுமா? வேண்டாமா? என்பதல்ல. சமயம் எப்படி இருக்க வேண்டும்? அது இன்று எப்படி இருக்கிறது? என்பதுதான் கேள்வி. ஆதலால், சமய அறிஞர்கள் சமயம் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இருக்கும்படி செய்ய முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும்,'' என்று கூறினார். ஆதலால், மனித குலத்தினிடையே அன்பினை பெருக்கி உறவினை வளர்த்து இன்ப நெறியில் வழி நடத்தும் முறையான — தொன்மையான சமயநெறியையே அறிஞர் அண்ணா அவர்கள் விரும்பினார்கள் என்பது வெளிப்படை.

''நாத்திகம் என்ற தத்துவம் இயல்பிலேயே இல்லை. அதை ஆத்திக உலகமே உருவாக்கியது'' என்பது அறிஞர் அண்ணாவின் கருத்து. அறிஞர் அண்ணா தன்னுடைய கவினுறு படைப்பாகிய ''குமாஸ்தாவின் பெண்'' என்ற நூலில் செல்வச் செழுப்பில் சீமானாகிய சோமுவுக்கும் ஏழையாகிய இராகவனுக்கும் நிகழும் உரையாடலில் சித்தரித்துப் படைத்துக் காட்டுகிறார். இதோ படித்துப் பாருங்கள்.

இராகவன்: உன்னை இலட்சாதிபதியாக வைத்திருப்பது அவன் செயல். என்னைப் பிட்சாதிபதியாகவைத்திருப்பதும் அவன் செயல். மிக நல்லவன்!

சோமு: இராகவா! நீ நாத்திகம் பேசுகிறாய்! நாக்குக் கூசவில்லையா?

எங்கே நாத்திகம் தலை காட்டுகிறது என்பதனைச் சுவைப்படச் சித்தரித்துக் காட்டுகிறார் அறிஞர் அண்ணா.

மலைக்கும் மடுவுக்குமிடையே வேற்றுமை, இஃது இயற்கை நியதி; தேவையும் கூட. நெருப்பு சுடுகிறது, தண்ணீர் குளிர்கிறது. இந்த வேற்றுமை இயற்கை நியதி; இன்றியமையாததுங்கூட. காய் புளிக்கிறது; கனி இனிக்கிறது. இந்த வேற்றுமை இயற்கை நியதி; இன்றியமையாததுங்கூட. ஆனால், மாட மாளிகைகள், மண்ணைத் தழுவும் குடிசைகள்! இந்த வேற்றுமை இயற்கையா? தேவையா? இறையின் படைப்பா? என்ற வினாவைத் துன்ப உணர்ச்சி கொப்பளிக்கும் தமிழில் அண்ணா கேட்கிறார்.

அண்ணா படைப்புகளில் 'புராண மதங்கள்' என்பது ஒன்று. அதில் நம்மையெல்லாம் சிரிக்க வைத்துச் சிந்தனை செய்யத் தூண்டுகிறார் அறிஞர் அண்ணா.

வளமான கற்பனை; வாழும் கற்பனையும் கூட. ஒரு நாள், அன்னை பார்வதியும் அப்பர் சிவனும் உரையாடிக் கொண்டிருக்கிறார்கள். பார்வதி பல வினாக்களை அடுக்கிக் கேட்டாள். ஆயினும், பரமசிவன் விடை சொல்லி முடித்தார். பார்வதியாருக்குக் கேள்வி வறண்டு விட்டது. பரமசிவத்துக்கோ பேச்சு நிற்கவில்லை. மேலும் பரமசிவன் பார்வதியை . நோக்கிக் கூறுகிறார். அந்த உரையில் எவ்வளவு ஏக்கம்? பெருமூச்சு!

''பார்வதி! என்னைக் கல்லாக்கிச் செம்பாக்கினர் கயவர்கள். எத்தனை எத்தனையோ நலன்களைத் தந்த என்னைக் கல்லாக்கிச் செம்பாக்கிக் கருவறையில் வைத்துப் பூட்டி விட்டனர். இது தகுமா?'' என்று பரமசிவம் கேட்கிறார்!

ஆம்! மனித உள்ளங்களிலே ஒன்றுகி உறவு கொண்டு களிப்பித்துக் களிக்க விரும்பிய இறைவனுக்கு நம்மவர்கள் உள்ளங்களையா தந்திருக்கிறார்கள்? இன்று, சமய நெறியின் காவலர்களாக—பக்தர்களாகக் காட்டிக்கொள்கிறவர்கள் பெரும்பாலும் பணக்காரர்கள். அல்லது சமூகத்தில் ஒரு வகையான ஆதிக்கப் பிடிப்புள்ளவர்கள். இவர்களிடம்இருப்பது பக்தியல்ல. பக்தியிருப்பதாகச் சொல்லுவது தாம் பெற்றிருக்கிற 'பவிசு'களைப் பாது காப்பதற்கேயாம்!

இதனை, அறிஞர் அண்ணாவின் படைப்பில் வரும் இராகவன், காந்தாவுக்கு எழுதும் முறையில் அறிஞர் அண்ணா எழுதுகிறார்;

''காந்தா, இதைக்கேள்! பணம் கிடைத்து விட்ட பிறகு அதைப் போலப் பக்தராக இருப்பதுஎளிது'' என்று எழுதியுள்ளார்.

அறிஞர் அண்ணா அவர்கள், மனித சமூகம் சாதிச் சழக்குகள் — சண்டையின்றி உறவு கலந்து கூடி வாழ எண்ணினார். மனித சமூகத்தில் வளம் — வறுமை என்ற வேறுபாடுகள் நீங்கி, எல்லோரும் எல்லாச் செல்வங்களும் பெற்று, இன்புற்று வாழ எண்ணினார். இந்தக் கொள்கைக்கு அரணாக இருக்கக் கூடிய பண்பட்ட சமயநெறிக் கோட்பாடுகளை ஏற்றுப் போற்றினார். அவர், நாட்டு மக்களின் மன்றங்களில் அடிக்கடி கூறிய முழக்கொலி, ''ஒன்றே குலம்; ஒருவனே தேவன்'' என்பது.

ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற பொது நெறியை அவர் உளமார விரும்பினார். அந்த ஒப்பற்ற நெறிக்காக அவர் எழுதினார்; பேசினார்; வாதாடினார். ஆதலால், அண்ணாவின் சமயம் கறைகள் படாத தொன்மைக் காலத்துச் சமயம். அந்நெறியையே அவர் தம் அருமைத் தம்பியர்கள்; மூத்த தம்பியான கலைஞர் தலைமையில் செயற்படுத்தி வருகின்றனர்.

★



## யுகச் சிற்பி

மறைந்தும் மறையாத அன்புமறையே—எங்கள்
மனமெனும் ஆலயத்தில் தங்கும் இறையே....
நிறைமதி மிகுதிறமை நெஞ்ச உரமும்—கொண்டு
நீணிலத்தை வென்ற எங்கள் துரையே
அண்ணா....(மறைந்தும்...)

வளர்புகழ் இலக்கியங்கள் படைத்தளித்தாய்—எங்கள்
வரலாற் றைஎமக்கே எடுத்துரைத்தாய்
களர்நில மானஎங்கள் வாழ்வினையே—பசுமை
கழனிஎன் றாக்கிவைத்த யுகச் சிற்பியே
இறையே....(மறைந்தும்...)

மதிவிளக் கேற்றிவைக்கும் கருத்தோடு—கேட்போர்
மதுவுண்ட வண்டாக்கும் சொல்வேந்தன்
புதுநடை வகுத்தளித்த எழுத்தாளன்—என்றும்
பொதுநல மென்றுழைக்கும் செயல்வீரன்
மண்ணில்....(மறைந்தும்...)

செந்தமிழ்க் குலம்விளங்க இங்குவந்தவன்—அறிவில்
செகம்வளைத் தேஉயரும் கொள்கை தந்தவன்
சந்ததி வாழ்வதற்கே தன்னைத்தந்தவன்—புதிய
சரித்திர நாயகனே எங்கள் மன்னவன்
நீ....(மறைந்தும்...)

:: மணிமொழி ::

# சரவணபவ கூட்டுறவு சிறப்பு அங்காடி,

## கடலூர் - 1.

அன்ருடம் உடுத்த அனைத்து ஜவுளிகள்.
ஆரோக்கியம் தர அதிரச இனிப்புகள்.
இன்பமாய் அணிய எழில்மிகு ஆடைகள்.
ஈடில்லாத அழகு சாதனங்கள்.
உணவுப் பொருள்கள், உள பல மளிகை.
ஊக்கம்தர ஏற்ற பானங்கள்.
எளிதில் கிடைக்கும் எவர்சில்வர் வகைகள்.
ஏதும் பேரம் இல்லாத விற்பனை.
ஐயம் இன்றி அனைத்தும் வாங்கலாம்.
ஒருதரம் வாங்கினுல் மறுதடம் வருவீர்.
ஓயாது எரிய மின் சாதனங்கள்.
ஔடதம் அனைத்தும் மலிவாய் கிடைக்கும்.
இன்றே வருவீர்! பெறுவீர் அனைத்தும்!!

சிறப்பங்காடியின் விற்பனை நேரம்: காலை 9 மணி முதல் 1 மணி வரை.
மாலை 4 மணி முதல் 8 மணி வரை.

செவ்வாய்தோறும் விடுமுறை. [மாதத்தின் முதல் செவ்வாய் தவிர]

**டி.டி. முத்துக்குமாரசாமிநாயுடு,**
தலைவர்

**வி. ஜெயராமன் பி.ஏ.**
துணைப் பதிவாளர் (பொது மேலாளர்.)

---

நிறுவனம்: 1927 தொலைபேசி எண்: 61068

# சென்னை கூட்டுறவு பால் வழங்கு ஒன்றியம்,

## அயன்புரம்: -:- சென்னை - 23.

தலைவர்: திரு. வி. முனுசாமி, (முன்னுள் மேயர்)

### சுத்தமான பால்

மாநக மக்களின் அன்ருட தேவையைப் பூர்த்திசெய்ய, நாங்கள் அதிக அளவில் பால்விற்பனை செய்ய முற்பட்டுள்ளோம். எமது வாடிக்கைதாரர்களும், கூட்டுறவு ஆதரவாளர்களும் எப்போதும்போல் ஆதரவு தந்து கூட்டுறவு இயக்கத்தை ஊக்குவிக்க வேண்டுகிருேம்.

### கிளை அலுவலகங்கள்:

1. நெ. 33, உஸ்மான்ரோடு, தியாகராயநகர்.
2. நெ. 5, முத்தளநாராயணன் தெரு, மைலாப்பூர்.
3. நெ. 91, பெரியதெரு, திருவல்லிக்கேணி.

**வி. பார்வதி நாதன்**
நிர்வாக அதிகாரி.

**ஆர். சிவராமன்**
செயலாளர்.
ஓய்வுபெற்ற கூட்டுறவு துணைப் பதிவாளர்.

# அண்ணுவின் மூத்த மருமகள் தந்த முக்கியச் செய்திகள்!



பேரன் மலருடன் அண்ணு அமர்ந்திருக்க அருகி லிருப்பவர்கள் அண்ணுவின் புதல்வர் பரிமளம் மூத்த மருமகள் சரோஜா ஆகியோர்.

★

எங்கள் மாமா அவர்களைப் பற்றிய நினைவுகள் எழாத நாட்களே இருக்க முடியாது! அவர்களைப் பற்றி எண்ணும்போதும்....அவர்கள் பேசியதை நினைக்கும் போதும் என் நெஞ்சம் படும் வேதனை சொல்லில் அடங்காது!

மாமா அவர்கள், எப்போதும் என்னை அதிகமாகக் கேலி செய்வார்கள். சாப்பிடும் நேரத்தில்தான் மாமா எப்போதும் மனம்விட்டுப் பேசுவார்கள்.

அன்றும் அப்படித்தான்!

நாங்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கவனித்த மாமா அவர்கள், ''எதைப் பற்றியம்மா பேசிக்கொண் டிருந்தீர்கள்?'' என்று கேட்டார்கள்.

''மகளிர் மன்றம் மிகவும் சீர்திருத்த முறையில் அமைய வேண்டும் என்று பேசிக் கொண்டிருந்தோம்''— என்று மாமி பதில் சொன்னார்கள்.

மகளிர் மன்றம் பற்றி நாங்கள் நாலைந்து பேர் பேசிக் கொண்டிருந்தோம். ஆனல் டாபிக் வேறு.

மாமி பதில் சொன்னதும் நான் அவசரப்பட்டு, ''அந்த டாபிக் இல்லை; மன்றத்தை நல்ல முறையில் வளர்ப்பது குறித்துப் பேசிக் கொண்டிருந்தோம்'' என்று கூறினேன்.

நான் இப்படிச் சொன்னதைக் கேட்ட மாமா அவர் ஒன்றும் பேசாமல் சிரித்துக்கொண்டே இருந்தார் ர். எனக்கு ஒன்றும் புரியவில்லை.

பிறகு மாமா அவர்கள் என் கணவரை (பரிமளம்) அழைத்து. ''பரி! சரோஜா வர வர புத்திசாலியாகிக் கொண்டு வருகிறது. டபிள் 'பி.ஏ.'தான்,'' என்று கூறினார்கள். பின்னர் அவர்களே 'பி.ஏ.' என்றால் Below Average என்று விளக்கினார்கள்.

''சரோஜா! சும்மா சொல்லக்கூடாது! நாளுக்கு நாள் நீ டல்லாகிக் கொண்டு வருகிறாய்'' என்று அடிக் கடி கேலி செய்வார்கள்.

அதுபோல ஒரு சிறு சம்பவம்!

ஒருநாள் எனது மகன் மலர், தன் தாத்தாவின் மடியில் உட்கார்ந்து கொண்டு, 'ஆடலுடன் பாடலை கேட்டு' என்று வரும் பங்கா டான்ஸ் பாடலை ரேடியோ கிராமில் போடும்படி அடம் பிடித்தான். அந்தபாடலைப் போடுவதற்கு மாமா மிகவும் முயற்சி செய்து பார்த் தார்கள். பாடவில்லை!

பிறகு என்னைக் கூப்பிட்டு, ''ஏம்மா, மலர் ரேடியோகிராம் போடு என்கிறான். ரேடியோ போட் டேன் பாடவில்லை. ரேடியோவுடன் ரேடியோகிராம் பாடுமா? இந்த இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?'' என்று கேட்டார்கள்.

நான் அசந்து விட்டேன். ஒருகணம் எனக்கு ஒன் றுமே புரியவில்லை. உலகம் போற்றும் அறிஞருக்கு இதுவா தெரியாது? என்றுதான்!

உண்மையிலேயே, அந்தத் தேவையற்ற பிரச்னையை மாமா அவர்கள் தெரிந்து வைத்திருக்கவில்லை. எவ்வ ளவோ விஷயங்களைத் தெரிந்து வைத்திருந்த அவர்கள் அந்தச் சிறு விளக்கத்தைத் தெரிந்து கொள்ளாமலிருந்த தும், அதைப்பற்றி என்னிடம் அவர்கள் விளக்கம் கேட்டதும், அவர்களது பெரிய மனதிற்கும், குழந்தை உள்ளத்திற்கும் ஓர் எடுத்துக்காட்டு!

இறுதியாக இதயத்தைப் பிழியும் ஒரு நிகழ்ச்சி!

1969—ம் ஆண்டு—ஜனவரி மாதம் 23—ம் தேதி— இரவு 9 மணி!

அடையாறு மருத்துவமனையில் மாமா, மாமி, மாமாவின் நண்பர் திரு. சி. வி. ராஜகோபால், என் கணவர் (பரிமளம்), நான், என் மகன் மலர் ஆகியோர் இருந்தோம்.

மாமா அவர்கள் முதலில் சி. வி. ஆரைச் சுட்டிக் காட்டி, ''ஏனம்மா சரோஜா! இவன் இன்று நம் மோடே இருக்கிறான்? விருந்துக்கு யாரும் கூப்பிட வில்லையோ?'' என்று கூறிக் கேலி செய்தார்கள்.

பிறகு சற்றுப் பொறுத்து என் கணவரை நோக்கி, ''பரி! நிறைய கலர் பென்சில் கொண்டுவா, நிறையப் படம் போட்டு என் பேரனுக்குக் கொடுக்கவேண்டும்'' என்று மாமா கூறினார்கள்.

உடனே மாமி, நிறைய கலர் பென்சில்களையும், நோட்டையும் கொண்டுவந்து தந்தார்கள். மாமா நிறையப் படம் போட்டார்கள்.

நாங்கள் பக்கத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந் தோம். மரங்கள், செடிகள், மனிதர்கள் இப்படிப் பல விதமான படங்களைப் போட்டார்கள். இறுதியாக அழ கான ஒரு மாடி வீட்டின் படத்தை வரைந்தார்கள்.

படம் போட்டு முடிந்ததும், ''ஏய்... ஜில்லிக் கண்ணு இங்கே வாம்மா....'' (என் மகன் மலரை மாமா இப்படித்தான் அழைப்பார்கள்) என்று கூப் பிட்டார்கள்.

என் மகன் மலர் ஓடிவந்தான். அவனை அன்புடன் முத்தமிட்டு அணைத்துக்கொண்டே, தான் வரைந்த மாடி வீட்டின் படத்தைக் காட்டி, ''பார்த்தியா ஜில்லி, இந்த வீட்டை? வீடு நன்றாக இருக்கிறதா? என்னால் நோட்டில்தான் வீடுகட்டித் தரமுடியும் கண்ணு! உண் மையான வீட்டை அம்மாவைக் கட்டித் தரச் சொல் லும்மா...'' என்று சொன்னார்கள்.

வேடிக்கையாகத்தான் மாமா அப்படிச் சொன்னார் கள் என்று எண்ணினோம். ஒரு உண்மையை அப்படி உணர்த்தினர் என்று இப்போது உணர்கிறோம்.

ஆபரேஷனுக்கு முதல் நாள்!

மலர் தூங்கிவிட்டான்! அமைச்சர்கள் மாமாவுடன் பேசிவிட்டுச் செல்வதற்கு இரவு 10 மணியாகிவிட்டது. பின்னர் நாங்கள் மருத்துவமனைக்குச் சென்றோம்.

எங்களைக் கண்டவுடன், ''மலர் எங்கே?'' என்று தான் மாமா முதலில் கேட்டார்கள்.

''தூங்கிவிட்டான். வீட்டில் விட்டு வந்திருக்கிறேன்' என்றேன்!

''அவனை எப்படியம்மா தனியே விட்டு வந்தாய்? நான் என் பேரனை மார்பில் போட்டல்லவா வளர்த் தேன்?'' என்று கூறி, மலரை நான் தனியே வீட்டில் விட்டு வந்தது தப்பு என்றும், உடனே வீட்டிற்குப் போகும்படியும் கூறினார்கள்!

இதுதான் நான் மாமா அவர்களுடன் பேசிய கடைசிப் பேச்சு! அதற்குப் பின் அந்தப் பேற்றை எல்லோரையும்போல் நானும் இழந்துவிட்டேன்!

மாமா அவர்களுடன் நான் பேசிய பழகிய நாட்கள் நினைவலைகளாக என் நெஞ்சக் கடலில் வந்து வந்து மோதுகின்றன! மறக்கக்கூடிய நாட்களா அவைகள்? ●



## உரிமை தந்தால் உதவி வேண்டாம்!

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் எந்தப் பொருளையும் எந்த வெளி நாட்டிற்கும் விற் பது-தேவையான பொருளை தருவித்துக் கொள்வது போன்ற உரி மைகளையெல்லாம் மத் திய அரசு எங்களுக்கு விட்டு விடுமானல்-அதற் கான உரிமைகளைத் தரு மானல் எதற்கும் நாங் கள் மத்திய அரசை எதிர்பார்க்க மாட்டோம்

வெங்காயம் முதற் கொண்டு கைத் தறித் துணிகள் வரை எல்லாப் பொருள்களை யும் ஏற்றுமதி செய் யும் அதிகாரம் மத் திய அரசின் கையில் தான் இருக்கிறது. எல் லாவற்றிலும் மத்திய அரசாங்கம்தான் குறுக் கிடுகிறது சில பிரச்னை களில் விட்டு விடுவ தும், சங்கடமான பிரச் னைகளில் தலையிடுவதும் நியாயமல்ல!

உன்னால் உதவி செய் ய முடியவில்லையென் ருல் வெளி நாடுகளிட மிருந்து வாங்குகிற உரி மையை எங்களிடம் கொடுத்து விடு. முடிந் தால் நாங்கள் வாங் கிக் கொள்கிறோம். அப் பொழுது முடியாமல் உன்னிடத்தில் ஓரணு விற்காக வந்தாலும், 'ஏன் வந்தாய்?' என்று திருப்பிக் கேள்! அது முறை; நியாயமுங்கூட. அதைப் பேசாமல் எதையோ கேட்ப தில் அர்த்தமில்லை!

நீ தானே சொன் ஞய்..இந்தியா ஓரே நாடு! எல்லோ ரும் ஓர் இனம்; பிரிந்து போகாதே! என்று! அதை மறந்து விட்டு, அணைத்துக் கொண்டிருக்கும் போதே ஜேபியில் கை போடுகிருயே, இது தகுமா?

டில்லியிடம் நாம் கேட்பதற்கு நமக்கு முழு உரிமை இருக்கி றது. அவர்கள் செய் தாலும் செய்யாவிட்டா லும் மக்களிடதான் கூறு வேன். அவர்கள் என்ன சொல்கிறார்களோ, அதன் படி நான் செய் வேன்.

ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்
ஒருமையுளராகி உலகியல் நடத்தல் வேண்டும்.
- வள்ளலார்.

விளம்பர உதவி:

தி இந்தோ ஸ்விஸ் சிந்தடிக் ஜெம்
மானுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்,
மெயின்ரோடு, மேட்டுப்பாளையம்.
கோயமுத்தூர் ஜில்லா.

சென்னை மாநில தொழிற் கூட்டுறவு
வங்கி லிமிடெட்., நெ. IND 594
The madras State Industrial Co-operative Bank Limited No. IND 594
3-144, மவுண்ட் ரோடு, ஆயிரம் விளக்கு, சென்னை-6.
போன்: 88414.
தலைவர்: எஸ். ராஜரத்னம், M. A., A. I. I. B.
அசலுக்கும் வட்டிக்கும் தமிழ்நாடு அரசு நிபந்தனையின்றி உத்திரவாதமளித்துள்ளது
பிக்சட் டெபாசிட்டுகளை
நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்
வட்டி விகிதங்கள் வருடம் ஒன்றுக்கு
ஆறேகால் சதவிகிதம் முதல் ஏழரை சதவிகிதம் வரை வேறுபடுகின்றன.
விவரங்களுக்கு ஏஜண்டுக்கு விண்ணப்பிக்கவும்
ஏ. ஜெ. சீனிவாசஸ் எம்.ஏ., எச்.டி.சி.,
ஏஜண்ட்

# அவர்கள் பார்வையில் அண்ணா

—சந்தனத் தேவன்—



**1953**–ம் ஆண்டின் முதுமைக் கட்டம். தி. மு. க. வின் கட்சி ஏடான 'நம் நாடு' நாளிதழில் சுற்றுப் பயணக் குறிப்பொன்று வருகிறது. அண்ணாவுக்கு, ஞாயிறு காலை திருச்சி டவுன் ஹால் சிறப்புக் கூட்டம்; மறுநாள் மாலை ஆறு மணி அளவில் திருப்பத்தூரில் கழகப் பொதுக் கூட்டம் — இதுதான் கட்டம் கட்டிப் போட்ட அந்தச் செய்தியின் சாரம்.

கழக நடவடிக்கைகளையும் அண்ணாவின் சூருவளிச் சுற்றுப் பயண நிகழ்ச்சிகளையும் விழிப்புடன் கவனித்துவரும் தஞ்சை, திருச்சி மாவட்ட கழகத் தோழர்களிடையே ஒரு கேள்வி பிறக்கிறது. முதல் நாள் காலை—அடுத்த நாள் மாலை — இடைப்பட்ட நேரத்தில் அண்ணாவை "சும்மா" இருக்க விடுவதாவது; அவரும்அதை விரும்ப மாட்டாரே! நாம் முயன்றால் நிகழ்ச்சிக்கு ஒப்புதல் கிடைக்காமலா போகும் — இப்படி ஆளுக்கு ஆள் — ஊருக்கு ஊர் நப்பாசை.

அந்தப் பேறு ஒரேயொரு ஊருக்குத்தான் கிடைத்தது. திங்களன்று காலையிலேயே அண்ணா புதுக் கோட்டைக்கு வந்து விட வேண்டும்; காலைச் சிற்றுண்டி பகலுணவு இரண்டுமே, சிங்கப்பூர் வணிகரும், அண்ணாவின் நண்பரும், முன்னாள் அமைச்சர் வி. இராமய்யா அவர்களின் அண்ணனுமான திரு. சின்னையா சேர்வையின் வீட்டில் ஏற்பாடு. பொது நிகழ்ச்சி எதுவுமில்லை.

ராமச்சந்திர புரம் –கிராமத்திலும் சேராமல் பட்டினத்திலும் சேராமல், அமைதியான சூழ்நிலையில் உள்ள புதுக் கோட்டையின் ஒரு பகுதிக்குப் பெயர் இது. அண்ணா அங்குதான், சிறு மாடி வீட்டில், சந்தடி இன்றி ஓய்வு எடுக்க விரும்பினார்.

அண்ணா தங்கியிருக்கும் செய்தி எப்படியோ நகருக்குள் பரவி விட்டது. கழகத் தோழர்கள், மாணவர்கள் மொய்க்கத் தொடங்கினர். பூவாளூர் அ.பொன்னம்பலனாருக்கு பெருத்த சோதனை. மாடியின் நுழைவாயிலில் நின்று கொண்டு யாரைத் தடுப்பது—யாரை விடுவது? ஒரே நேரத்தில் ஐந்தாறு பேர்களை அனுமதித்து அவர்கள் சந்தடி எதுவுமின்றி அண்ணாவைத் தூரத்தில் நின்று பார்த்து விட்டு திரும்ப வேண்டும். இதுதான் அவர் படையெடுத்து நின்ற தோழர்களுக்கு இட்ட கட்டளை.

மாடியின் தாழ்வாரத்தில் தொய்வான கயிற்றுக் கட்டில்; விரிப்புக்கும் அதற்கும் தொடர்பு விட்டுப் போய், பக்கவாட்டில்தொங்குகிறது, படுத்திருக்கும்அண்ணாவின் கைகளிலே பழமையான பெரிய ஆங்கிலப் புத்தகம். மக்கிப் போன தாள்கள், அதன் வயதைக் கூறும். எங்கே உதிர்ந்து விடப் போகிறதோ என்ற பயத்தில், பக்கத்தைப்புரட்டுவதிலே தனி லாவகம்; சுவையான கட்டங்கள்வரும் போதெல்லாம், தன் கால் மாட்டில் உட்கார்ந்திருக்கும் திரு. மதியழகன் அவர்களிடம் படித்துக் காட்டுகிறார். அறிவுக்குத் தீனி எந்தச் சமயத்திலும் வரலாமென்ற துடிப்பில் திரு. மதியழகனும் எப்போதும் தயார் நிலை. கட்டிலின் பின்புறத்தே நால்வர். திராவிடப் பண்ணை முத்துக் கிருஷ்ணன், அன்பில் தர்மலிங்கம், பொன்மலை பராங்குசம், மற்றுமொரு நண்பர் — தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுகின்றனர்.

படித்துக் கொண்டிருந்த அண்ணா புத்தகத்தை திடீரென்று மூடிவிட்டு, 'என்ன மதி, பொன்னம்பலனாரை ஒரு இடத்துக்கு அனுப்ப வேண்டுமே!"

"எங்கேண்ணா!"

"போன ஆண்டு என்று நினைப்பு; இங்கே வந்திருந்தபோது புத்தகங்கள் ஏதேனும் பழைய புத்தகக் கடையிலே வாங்கி வரும்படி பூவாளூராரிடம்இரண்டு ரூபாய்கள் கொடுத்தனுப்பினேன். ஒரு கட்டுப் புத்தகங்களை அள்ளி வந்தார். அதில் இரண்டு அருமையான — கிடைக்காத புத்தகங்கள் இருந்தன. இந்த முறையும் அவரை அனுப்பிப் பார்க்க வேண்டும்."

"நான் போய் வரட்டுமா, அண்ணா?"

"நீ போக வேண்டாம்; நீ போனால் படித்துப் பார்ப்பாய், புரட்டிப் பார்ப்பாய்; அவன் விலையை ஏற்றி விடுவான். பூவாளூரார் போனால்தான் எடை போட்டு வாங்கி வருவார்," உடல் குலுங்கக் குலுங்கச் சிரிக்கிறார் மதி.

அந்த வேளையில், பொன்னம்பலனாரும் மாடிக்கு வருகிறார். கூட, நான்கு ஐந்து மாணவர்கள். "அண்ணா! இவர்களெல்லாம் கல்லூரி மாணவர்கள். தாங்கள் ஒரு மணி நேரம் இவர்களது கல்லூரியில் பேச வேண்டுமாம். நானும் எவ்வளவோ நம் புரோகிராமைச் சொல்லிப் பார்த்தேன். பிடிவாதமாக இருக்கிறார்கள்," பொன்னம்பலனார் சொல்லி நிறுத்தினார். அண்ணா புத்தகத்தை மூடி, மதியின் கையில் தந்துவிட்டு, வந்திருக்கும் மாணவர்களை ஏற இறங்கப் பார்க்கிறார்.

பிறகு மதியைப் பார்க்கிறார். அவரது தலை 'சம்மதம்' தரச்சொல்லி சமிக்ஞை செய்கிறது. "எந்தத் தலைப்பில் பேச வேண்டும்!"

"தாங்கள் எதைப்பற்றிப் பேசினாலும் சம்மதமே!"

"என் ஒப்புதல் இருக்கட்டும்; பிரின்சிபாலைக் கலந்தீர்களா?"

அவரேதான் தலைமை வகிக்க இசைவு தந்துள்ளார். தலைப்பை மட்டும் தாங்கள் சொன்னால் போதும்."

"தலைப்பா! பேசுவதற்கு முன் அவரே சொல்லட்டுமே!"

ஒரு மணி நேரத்திற்குள் புதுக் கோட்டை அரசினர் கல்லூரியில் உற்சாகம் கரைபுரண்டு ஓடுகிறது. நகரில் உள்ளபெரிய மனிதர்கள், அதிகாரிகள், பேராசிரியர்கள் அனைவரும் முன் வரிசையில், இடம் கிடைக்காத மாணவர்களும் பொது மக்களும் குதிங்காலை உயர்த்திக் கொண்டு பேச்சுக் கூடத்தைச் சுற்றி நிற்கின்றனர்.

தலைமை வகித்த ஆக்டிங் பிரின்ஸ்பால் திரு. பஞ்சாபகேச சாஸ்திரிகள், அண்ணாவின் பேச்சுக்கு தான் தலைமை ஏற்றதே ஒரு புதிர் என்றும், எனவே அந்த தலைப்பிலேயே (Paradox) அண்ணா பேசுவார் என்று அறிவித்ததுதான் பாக்கி; சிங்கம் போல அண்ணா எழுந்து எழுபது நிமிடங்கள் ஆற்றொழுக்கான அற்புதமான ஆங்கிலத்தில் எண்ணக் கலவைகளை வித விதமாகத் தந்து கூட்டத்தினரை மெய்மறக்கச் செய்தார்.

நெருவிலிருந்து தூங்கெயில் எறிந்த தொடிதோட் செம்பியன் வரை, அவர் கூட்டத்தினரின் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தினார். நேரம் போனதே தெரியாதபடி அற்புதமான கான மழை. விநாடிக்கு விநாடி சிரிப்பு; கிண்டல்; சிந்தனைக்கு நல்விருந்து.

பேச்சு முடிந்தது. முன்னாள் புதுக்கோட்டை திவான் ஜனாப் கலிபுல்லா சாகெப் அவர்கள், "பக்கத்தில் அமர்ந்திருந்தவரிடம் (No—notesnever faltered கையிலே சிறு குறிப்பும் இல்லை. தேடினாலும் ஒரு குற்றம்கிடைக்குமா?" — என்று வியந்து பாராட்டினார். நீதிபதி ஏ. எஸ். பி. அய்யரோ மேடை மேல் ஏறி அண்ணாவின் கரம் பற்றி கைகுலுக்கி விட்டு, "மிஸ்டர் அண்ணாதுரை! இரண்டே இரண்டு காரியங்களுக்காகத்தான் என்னால் சேர்ந்தாற்போல ஒரு மணி நேரம் இருக்கையில் இருக்க முடியும். ஒன்று நான் தீர்ப்பு எழுதும் போது — இரண்டாவது— எம். எஸ். அவர்களின் இன்னிசை கேட்கும் போது; மூன்றாவதாக என்னை வசிகரித்து அடிமைப் படுத்தி விட்டது தங்களின் ஆழங்காண முடியாத சொற்பொழிவு" என்றார்.

இதையெல்லாம் கேட்டதும் புதுப் பெண்ணைப் போல தலையைக் குனிந்து கொண்டு அண்ணா அவர்கள் நின்றது, இன்றும் என்றுமே என் நினைவில் பசுமை!



## கருப்புச் சட்டையும் கடமை உணர்வும்!

"திராவிட கழகத்தார் எப்போதும் கருப்புச் சட்டையே அணிய வேண்டும்" என்று பெரியார் அறிவித்தபோது, "வழக்காடும் நேரத்திலே வழக்கறிஞர் கறுப்புக் கோட்டு அணிவது போல—அலுவல் நேரத்திலே மட்டும் போலீசார் காக்கி உடை அணிவது போல—போராட்ட காலத்திலே மட்டும் கறுப்புச் சட்டை போட்டால் போதாதா?" என்றார், அண்ணா.

இதைப் பெரும் பிரச்னையாக்கிடத் துடித்தார்கள் சிலர். இதே நேரத்தில் கருஞ் சட்டைப் படை சட்டத்துக்குப் புறம்பான அமைப்பு என்று அறிவித்தது அப்போதைய காங்கிரஸ் அரசு.

இந்த முடிவினைக் கண்டிக்க மெமோரியல் ஹாலில் கூட்டமொன்றைக் கூட்டினார் பெரியார். குறையை எடுத்துச் சொன்னாலும் குருவை மிஞ்சாத சிஷ்யன் நான் என்பதை உணர்த்துவதைப்போலக் கறுப்புச் சட்டையோடு அதில் வந்து கலந்து கொண்டார் அண்ணா. அதுவும் யாருடைய கருப்புச் சட்டை தெரியுமோ? நாவலரின் சட்டை!

## செங்கற்பட்டு மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் லிமிடெட்,

எண். ஜி. 1113.

தலைமையலுவலகம்:- 150, பிராட்வே, சென்னை-1.

தொலைபேசி:- 23614 மற்றும் 29890.

**தலைவர்: திரு. கொளத்தூர் கோதண்டம், எம். எல். ஏ.,**

**கிளை அலுவலகங்கள்:-**

காஞ்சிபுரம், செங்கற்பட்டு, திருத்தணி, திருவள்ளூர், ஆலந்தூர், மதுராந்தகம், தண்டையார்பேட்டை, பொன்னேரி, திருபெரும்புதூர்.

இச்சங்கம் அரசாங்க ஏஜெண்டாக இராசாயன உரவகைகளை மொத்தமாகவும், சில்லரையாகவும் விநியோகிக்கிறது. அரிசி, சர்க்கரை, மளிகை, பருப்பு வகைகளும், காஞ்சிபுரத்தில் உள்ள இச்சங்கத்தின் சொந்த ஆலையில் தயார் செய்த கடலெண்ணை, பிண்ணாக்கு ஆகியவைகளும், மற்றும் நெல், வாழை, கரும்பு, வேர்க்கடலை முதலிய பயிர்களுக்குத் தகுந்த கலப்பு உர வகைகளும் விநியோகம் செய்யப்படுகின்றன. இச்சங்கம் ஆரம்பித்து 25 வருடங்கள் முடிந்து 6–10–67–ல் வ[illegible] விழா கொண்டாடியது. மற்றும் சென்னை நகர பொதுமக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய 152, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை–7–ல் ஒரு சிறிய கூட்டுறவு சிறப்பங்காடியைத் திறந்து அது 1–8–70 முதல் நடைபெற்று வருகிறது.



Grams: "ANGUVILAS"
Regd. Numbers
12700 & 149348

Phone: 71
Estd: 1925

ஸ்தாபகர்

## அங்குவிலாஸ் எம். வி. முத்தையா பிள்ளை

திண்டுக்கல்.

# அங்கு விலாஸ்

எம். வி. முத்தையா பிள்ளை [பர்ம்]

வாசனைப் புகையிலை

தாம்பூலத்துடன் சுவைப்பதற்கு தின்பண்டம் போன்றது.

ANGU VILAS Scented Tobacco stands foremost in India. If a little fo this Scented Tobacco is chewed with Betal leaves, nut and Chunnam and spit out, it will go on refreshing your mind & Body.

# ANGU VILAS

M. V. MUTHIAH PILLAI

(Firm)

Scented Tobacco & Cigar Factory, DINDIGUL. (South India.)



# அறிஞர் அண்ணாவைப் பற்றிய ஆய்வு முறைகள்

பேராசிரியர் டாக்டர்
வே. சண்முகசுந்தரம்

அறிஞர் அண்ணா அவர்களை வாழ் நாள் முழுவதிலும் அரசியல் துறையில் நெருங்கிச் சந்தித்து பழகிய பலர் உண்டு. அப்படி அண்ணாவுடன் பழகியவர்களுடன் தொடர்புடையவர்களும் சிலர் உண்டு. இவ்விரு வகையினரும் அண்ணாவின் கருத்துக்களை வெகு ஆணித்தரமாகக்கூற முடியுமானாலும், ஆராய்ச்சிமுறைப்படி நோக்கின் வேறு சிலரும் அவரைப் பற்றிக் கூற முடியும். அறிவியல் கண் கொண்டு ''இந்திய பொருளாதார வளர்ச்சிக்கு அண்ணாவின் தொண்டு'' ''அரசியல் முன்னேற்றத்திற்கு அவர் இட்ட வித்துக்கள்'', ''சமுதாய மறுமலர்ச்சிக்கு அவரது சேவை'' என்ற முறையில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல எழுத முடியும். இச்சிறு கட்டுரை மூலம் தமிழ் நாட்டு மக்கள் தங்கள் சிறந்த தலைவர்கள், தமிழ் நாட்டுக்கும் வெளி நாடுகளிலுள்ள தமிழர் சந்ததிகளுக்கும் அறிமுகப்படுத்தும் வகையிலும் எத்தகைய முறைகளைப் பயன் படுத்தலாம் என்று எடுத்துரைக்க விழைகிறேன்.

ஆராய்ச்சி என்பது பழங்கால நிகழ்ச்சிகளைப் பற்றியும், பல நூற்றாண்டுகளுக்கு முன்பு மறைந்தவர்களைப் பற்றியும்தான் எழுதுவது என்ற முறை மாற்றப்பட்டு, நிகழ் காலத்தையும், நம்மிடையே வாழும் பெரும் தலைவர்களைப் பற்றியும் ஆய்தல் அவசியம் என்று கருதப்படுகிறது. பழங்கால, நவீன கால, நிகழ் கால (Ancient modefnand Current History) சரிதம் எழுதுகின்ற முறைப்பாடு தமிழ் நாட்டில் இன்னும் வேரூன்றவில்லை. இதற்கு பொறுப்பாளிகள் சமூக சீர்திருத்தவாதிகளோ அரசியல் தலைவர்களோ அல்ல. அப்பெரியவர்கள், வாழ் நாள் முழுவதும் தங்கள் கருத்துக்கு உவந்த கடமை உணர்ச்சிக்கு ஏற்ப மக்கள்தேவைக்குப் பொருத்தமான வகையில் இடையறாது உழைக்கின்றனர்.

தலைவர்களின் வாழ்க்கை ஒரு நீர்வீழ்ச்சிக்கு ஒப்பானது. அதைப் பயன்படுத்தும் நிகழ் காலத்தவரும், எதிர் காலச் சந்ததியினரும், அவர்கட்கேற்றமுறையில், அந்நீர்வீழ்ச்சியின் வேகத்தை மின் சக்தியாகவும், நீர்ப் பெருக்கத்தை வளமான சோலைகளை உருவாக்கும் நீர்த் தேக்கங்களாகவும் பயன்படுத்த வேண்டும். இம்முறையில்தான் நிகழ்கால முறைகள் வகுக்கப்பட்டு வருகின்றன.

ஆராய்ச்சிக் கால அளவைகள் மூன்று நிலைப்பட்டதாயினும் அதற்கு வேண்டிய முதல், இடை, கடை வகைகள் பொதுப்படையானவைகள். முதல் வகையைச் சார்ந்தவை அண்ணாவின் பிறப்பு, வளர்ப்பு, அரசியல் வாழ்வு, மறைவு இவைகளைச் சார்ந்த கால அளவைகள். மேலும் அவர் எழுதியகடிதங்கள், ஆற்றிய சொற்பொழிவுகளின் மூலப் பிரதிகள், குறிப்புகள், படித்த புத்தகங்களின் கோடிட்ட பகுதிகள், எழுத்து வடிவத்தில் கிடைக்கும் மூலப் பிரதிகள், இவையின்றி அவருடன் பழகியவர்களிடம் மனம் விட்டுக் கூறிய, ஆனால் பொது மக்களுக்குப் பரவலாகத் தெரியாத கருத்துக்கள், இவைகள் அனைத்தையும் நிகழ் காலத்தவர் எதிர்கால சந்ததிக்காக சேகரிக்க முடியும். அவ்விதத்தில் இந்தியாவின் பல பகுதிகளில் இருந்த தலைவர்களைப் பற்றி சுதந்திரப் போராட்டத்திற்கு முன் வரை ஆய்வுக் குறிப்புக்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

சென்ற இருபது ஆண்டுகளில் பல முக்கிய மாறுதல்களுக்கான தலைவர்களைப் பற்றியும் அவ்வாறே ஆய்தல் வேண்டும். நிகழ்கால சரித்திரத்தை எழுதுவதில் உள்ள குறைபாடு யாதெனின், மக்களுடையவிருப்பு வெறுப்பு இருக்கும்போது நியாயமான முடிவுகளும், உண்மைகளும் திரித்துக் கூறப்பட்ட கருத்துக்கள், அயல் நாட்டார், நுனிப்புல் மேய்வோர் எழுதிய மற்றேனையோர் எழுதிய கட்டுரைகளும் தான் இப்போது கிடைக்கும் உரைகளுமாம்.

அறிஞர் அண்ணாவையும் அவரது கழகத்தையும் பொறுத்தவரையில் ஆராய்ச்சிக்கு வேண்டிய ஆதாரங்கள் நிறைய உள்ளன. எழுத்து வடிவில் கட்டுரைகளும் பல புத்தகங்களும் வெளிவந்து கொண்டே இருக்கின்றன. இருப்பினும் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் உள்ள ஒரு சில பல்கலைக் கழகங்களில் மட்டும்தான் அவரைப் பற்றி சிறந்த நூல்கள் ஆங்கிலத்தில் வெளி வந்துள்ளன.

உலக அரசியல் கண் கொண்டு இந்திய மாறுதல்களைப் பொதுப்படையாகக் காணும்போது அவ்வாராய்ச்சிகள் பயனுடையனவாகத்தோன்றுகின்றன. இருப்பினும் ஒரு ஆங்கிலேயன் இங்கிலாந்து நாட்டைப் பற்றி இந்தியனுக்கு சொல்லும் முறை ஒன்றாக இருக்க, ஒரு இந்தியன் இங்கிலாந்தைப் பற்றி இந்தியனுக்கு எழுதும் முறை மேன்மையுடன் மாறுபட்டுத்தான் இருக்கும். இதை அறிந்தவர்கள், வெளி நாட்டினர்கள் எழுதுகின்ற நூல்களைவிட சொந்த நாட்டினரே எழுதுவது பொருத்தமானது என்று உணர்வர்.

அண்ணா இறந்தநாளன்று உலகத்தின் பல பகுதிகளிலிருந்து தமிழ் நாட்டையும் இந்தியாவையும் பொறுத்த மட்டில் எல்லாத் தலைவர்களிடமிருந்தும் அவர் பிரிவு ''பேரிழப்பாகவும்,'' ''மாவீரன் மறைவாகவும்'', ''மக்கள் தலைவர் பிரிவாகவும்''எனக் கருதி அனுதாபச் செய்திகள் வந்து குவிந்தன. அன்று ஷேக்ஸ்பியர் எழுதிய என்றும் மறையா இலக்கியத்தில் ரோமாபுரி மக்களுக்கு மார்க் ஆண்டனி நிகழ்த்திய சொற்பொழிவைப் போன்று, கலைஞர் கருணாநிதி அவர்கள் தமிழ் மக்கள் உள்ளத்தைத் தொடும் சோகமிக்க இரங்கற்பா மூலம் காற்றுலவும் இடமெல்லாம் துயரைப் பகிர்ந்து கொண்டார்கள்.



வெகுநாட்களுக்கு முன்பு எதிர்பாராத இடத்திலிருந்து கிடைக்கும் புகழ்ச்சியாகக் கல்கியின் இலக்கியப் புகழாரம் பெற்ற அண்ணா அவர்களின், பொருளியல், அரசியல் கருத்துக்கள் வேரூன்றிய சமுதாயம், அவர் பூஞ்சோலை என மன மகிழ்ந்திருந்த மக்கள் குழாம், எண்ணற்ற கூட்டங்களில் அவர் பேசிய கருத்துக்கள், அவைகளின் முக்கிய விளைவுகள், இவற்றையெல்லாம் வகுத்துத் தர அறிஞர்களை பொது மக்கள் எதிர்பார்ப்பது இயற்கை. அதற்கீடாகப் பணிபுரிவது கற்றோர் கடமை.

அறிஞர் அண்ணா அவர்கள் பச்சையப்பன் கல்லூரியில் பொருளியல் துறையில் எம்.ஏ. பட்டம் பெற்றார் என்றும், அவருக்கு அரசியல் பொருளியல் கற்பித்தவர்கள், ஆல்பிரட்மார்ஷல், பிகு, கீன்ஸ்போன்ற அறிஞர்களிடம் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பயின்ற பேராசிரியர் இரத்தினசாமியும், ஹெரால்டு லாஸ்கி அவர்களுடைய சிறப்புமாணவனாகவும், லார்டு ராபின்ஸ் அவர்களுடைய வகுப்புத் தோழனாகவும் இருந்த இலண்டன் பல்கலைக் கழகத்தில் பயின்ற பேராசிரியர் இராஜேஸ்வரன் அவர்களும். மேலும் அந்த மிகப் பழைய இந்தியக் கல்லூரியில் பயின்ற இவர் அங்குள்ள சிறந்த நூலக அலுவலர் பலரும் அவர்களுள் முக்கியமாக திரு. செங்கல்வராயன் அவர்களும் வியக்கத்தக்க முறையில் தகுதியான எல்லாப் புத்தகங்களையும் விரும்பி முழு கவனத்துடன் படித்தவராவர்.

ஆராய்ச்சி முறைகளைப் பயன்படுத்தி ஆர்வம் மிக்கவர்கள், அண்ணாவைப்பற்றி அறிந்தவர்கள், அவர் எழுதிய ஆதாரங்கள் அனைத்தையும் பயன்படுத்திசிறந்த நூல் ஒன்றையும் தமிழருக்கும் இந்தியருக்கும் மற்றேனைய நாட்டினருக்கும் அளிப்பது ஆய்வாளரின் தலையாய கடன்.

அறிவியல் துறையில்மின் சாரத்தையோ அல்லது ரசாயனத்தைப் பற்றியோ ஆராய்ச்சி நடத்தும்போது மனித சமுதாயத்துக்கு என்றும் எல்லா நாடுகளுக்கும் பயனுள்ள கருத்துக்களை யாராவது எங்கிருந்தாவது கண்டு பிடித்து விடலாம். ஆனால், சமூகவியலைப் பொறுத்த வரையில்மொழி பழக்க வழக்கங்கள், அண்மையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள், மக்களின் மனோ பக்குவம் இவைகளை அறிந்தவர்கள்தான், ஆராய்ச்சியில் ஈடுபட்டு நற்பயனைக் காண முடியும்.

இந்தியாவின் சுதந்திரத்தைக் கொண்டாட வேண்டும் என்று பேரார்வம் கொண்ட அண்ணா அவர்கள், சுதந்திரம் பெற்ற இந்தியாவின் சரித்திரத்தில் பெரும் மாறுதலை உண்டாக்கியவர் மட்டுமின்றி, சரித்திரத்தை எழுதியவரும் ஆவார். ஆகவே அவரைப் பற்றி ஆய்வு செய்ய, இலக்கியம், சரித்திரம், பொருளியல், அரசியல் என் பல துறையிலும் திறன் பட்டோர் முயற்சிப்பது முறையாகும், வேண்டற்பாலதும் ஆகும். ஃ

## நமது கடமை!

அண்ணாதுரை தமிழ் மக்களின் வாழ்வுக்காகத் தன் வாழ்வைப் பாழ்படுத்திக் கொண்டவர் என்று கூறலாம். இதற்காக நண்பர் அண்ணாதுரை அவர்களுக்குத் தமிழ் மக்கள் நன்றி செலுத்த வேண்டும். அதைவிட அதிகமாக அவரை வளர்த்து ஊக்குவித்து நாட்டின் பொது வாழ்வுக்குத் தந்துதவிய அவருடைய தொத்தாவுக்கு (சிற்றன்னை இராசாமணி அம்மையாருக்கு) நன்றியும் வணக்கமும் செலுத்தத் தமிழ் மக்கள் என்றும் கடமைப்பட்டவர்களாவர்.

—கி. ஆ. பெ. விசுவநாதம்



VOLTAS

# DISCERNING SPINNERS INSIST ON

## Lakshmi-Graf

**FLEXIBLE AND HIGH PRODUCTION METALLIC CARD CLOTHING**

Manufactured in collaboration with the world-renowned firm of Graf, Switzerland.

*Manufacturers:*
**LAKSHMI CARD CLOTHING MFG. CO. PVT. LTD.,**
Palladam, Coimbatore Dist.

*Sole Selling Agents:*
**VOLTAS LIMITED**
Textile Machinery Division
Bombay • Calcutta • Madras
New Delhi • Bangalore • Cochin
Ahmedabad • Secunderabad
Kanpur • Coimbatore



## காஞ்சிக்குச் சென்றால் எனக்குத் தெம்பு வந்து விடுகிறது என்று ஒருமுறை என்னிடம் கூறினார் அண்ணா! ‘காஞ்சி’ மீது அத்தனை பாசம் அவருக்கு-காஞ்சி அந்த நன்றியை மறவாமல் என்றும் அவர் வழியில் நடந்து காட்ட வேண்டும்.

அறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு அவருடைய இரண்டாவது பிறந்த நாள் வருகிறது. இது அவருடைய 62வது பிறந்த நாளாகவும் வருகிறது.

60 வயது பூர்த்தியாவதற்கு உள்ளாகவே மறைந்துவிட்ட அண்ணா அவர்கள் ஆட்சிபீடத்தில் அமர்ந்து இரண்டு ஆண்டுகள்கூட பணியாற்ற முடியவில்லை எனினும் குறுகிய காலத்திலேயே தமிழ்மக்களுக்கு அவர்கள் சிறந்த வழி காட்டியிருக்கிறார்கள்.

தொண்டாற்றவும் ஜனநாயகம் நல்ல முறையில் வளரவும் வழிகாட்டிடக் கூடியதாக இருக்கும்.

இதைத்தான் அறிஞர் அண்ணா அவர்கள் நாகரிக அரசியல் என்று கூறுவார்கள். இதுதான் உண்மையான அரசியல் ஆகும்.

தமிழ்நாட்டு ஆட்சிபீடப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட அறிஞர் அவர்களுக்கு முன் அனுபவம் இல்லைதான். ஆனால் அவர்களுடைய நுட்ப அறிவும், அனுபவமும், பொதுவாகவே அவரிடம் இருந்த மனிதத் தன்மையும் — நிர்வாகச் சிக்கல்களையும், நுட்பங்களையும்நன்றாகப் புரிந்து கவனத்தை மிக அதிகமாகக் கவர்ந்தது தம் ஆட்சியில் தவறுதலோ, அநீதியோ, நடைபெறக்கூடாது என்று அவருக்கிருந்த கவலை. இது எந்த ஆட்சியாளர்களுக்கும் இருக்க வேண்டிய சிறந்த பண்பாடு. இந்த வகையில் அறிஞர் அண்ணா அவர்கள் தம் கழகத்துக்கு மட்டுமின்றி பொதுவாக எல்லா அரசியல்வாதிகளுக்கும் நல்வழி காட்டியிருக்கிறார்.

நான் அண்ணா அவர்களுடைய ஆற்றலைப் பற்றிக் கேள்விப் பட்டிருந்தாலும் முதன் முதலில் நான் அவரைச் சந்தித்தது—20 ஆண்டுகளுக்கு முன்னர்தான்.

சென்னை ஒய்.எம்.சி.பட்டிமன்றத்தில் ஒரு கூட்டம்

றிருந்தபோது பல பிரச்சினைகளைப் பற்றிய விவாதத்தில் கலந்துகொண்டு ஆட்சியின் போக்கைப் பலமாகத் தாக்கிப் பேசுவார் எனினும் அப்பொழுது நடைபெறும் விவாதங்கள் சுமுகமாகவே இருக்கும். ஒரு விசேடப் பற்றோடு—“நாங்கள் இருவரும் ஒரேமாவட்டத்தைச் சார்ந்தவர்கள்” என்று குறிப்பிடுவார். அவர் என்னிடம் தனியாக சில பிரச்சினைகள் பற்றி சுமுகமாகப் பேசும்போது இருகட்சிகளுக்கும் இடையே ஆழ்ந்த கருத்து வேற்றுமை இருப்பதாகவே புலப்படாது. ஆனால் அப்போதும் அண்ணாஅவர்கள் தம் கட்சியின் கொள்கைகளிலோபோக்கிலோ சிறிதும் விட்டுக்கொடுத்ததில்லை.

இ

அதற்கு அவர் காஞ்புரத்திற்குப் போய் வந்தால் ஒரு தெம்பு வந்து விடுகிறது. என்று கூறினார். அந்தக் காஞ்சி அண்ணா அவர்களுக்கு தன்னிடத்திலே இருந்த பாசத்தை உணர்ந்து அண்ணா காட்டிய வழியில் நடந்து கொள்ள வேண்டும்.

பொதுத் தேர்தலில்காங்கிரஸ் கட்சியை வீழ்த்தி, தம் கழகமே ஆட்சிப் பீடத்தில் அமரக்கூடிய வெற்றி பெற்று, ஆட்சி நடத்திய 22 மாதங்களில் தம்முடைய கழகக் கொள்கைக் கேற்றவகையில் திட்டங்களை மேற்கொண்ட போதிலும், கழகத்துக்கு வெளியிலேயும் பொதுமக்கள் அவரை “மிகஉயர்ந்த மனிதர்” என்று பாராட்டத் தவறவில்லை. மாற்றுக் கட்சியைச் சேர்ந்த அரசியல்




அவர் அரசியல்வாதியாக மட்டும் இருந்தபோது தம் கொள்கையிலும், லட்சியத்திலும், போக்கிலும் மிகுந்த பிடிப்புக் கொண்டவராக இருந்தார். ஆனால் அப்பொழுதே அவருடைய பெருந்தன்மை என மனதைக் கவர்ந்ததுண்டு.

அவரும் நானும் ஒரே மேடையில் பேச வேண்டிய சந்தர்ப்பங்களில் எனக்குச் சங்கடம் விளைவிக்கக்கூடிய நிலையில் எப்போதும் அவர் கருத்தைத் தெரிவித்ததில்லை. இது அரசியல்வாதிகளுக்கு அவர் காட்டிய சிறந்த வழியாகும்.

ஜனநாயகத்தில் ஒரு கட்சிக்கும்மேல் மாற்றுக் கட்சிகள் இருக்கத்தான் வேண்டும். ஒரே கட்சி மட்டும் இருந்தால் அது ஜனநாயகம் ஆகாது. ஆனால் கட்சிகளுக்குள் எவ்வளவு ஆழ்ந்த கருத்து வேற்றுமையும், அதன் காரணமாக மோதல்களும் ஏற்படுகின்ற போதிலும் வேறு வேறு கட்சிகளைச் சார்ந்த அரசியல்வாதிகள் ஒரே மேடையில் கருத்து ஒற்றுமையோடு பேசவும், அளவளாவவும் சந்தர்ப்பங்கள், வாய்ப்புகள் ஏற்படுவதுதான் ஜனநாயகத்திற்கு உகந்தது. இதுவே குறிப்பிட்ட கட்சிகள் சீராகத்

கொண்டு சரியான தீர்வு காண அவர் தவறியதில்லை.

அவருக்குக் கட்சிப் பற்று அதிகமாக இருந்தபோதிலும் அரசியல்வாதிகளுக்கு வேண்டிய விட்டுக் கொடுக்கும் தன்மையும் இருந்தது. தமபிகளுக்கு அண்ணா அவர்களிடமிருந்த ஆழ்ந்த நம்பிக்கையும், மதிப்பும் காரணமாக—அவர்கள் இந்த விட்டுக் கொடுக்கும் தன்மையை எப்போதும் தவறுதலாக எடுத்துக் கொண்டதில்லை.

பலதுறைகளில் பகை ஏற்படுவது இயற்கை—அது மனிதனுக்குள்ள பலகீனம். பகைவனுக்கு அருள்வாய் என்று பாரதியார் பாடினார். பழிவாங்குவதென்பது தவிர்க்க வேண்டிய ஒன்று. அறிஞர் அவர்கள்

பிறருக்குத் தீங்கிழைப்பதற்கு மிகவும் தயங்குவார்கள். தலைசிறந்த ஒரு அரசியல் வாதிக்கு இளகிய மனது இருப்பது அபூர்வம் தான். ஆனால் இதைநாம் அண்ணா அவர்களிடத்தில்கண்டோம.

அண்ணா அவர்களுடைய போக்கிலே என்னுடைய

நான் தலைமை வகிக்கவும், அண்ணா அவர்கள் பேசவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நான் ஒய்.எம்.சி. கட்டிடத்திற்குள் நுழைந்தபோது அந்தக் கட்டடம் கொள்ளாத மாணவர்கள், இளைஞர்கள் கூட்டம் அண்ணா அவர்களின் பேச்சைக் கேட்கக் குழுமி இருந்ததைக் கண்டேன். அவர்கள் தெரிவிக்கும் கருத்துக்களைப்பற்றி நான் எவ்வாறு விமர்சனம் செய்ய வேண்டியதிருக்கும் என்பது பற்றி எனக்குக் கவலை ஏற்பட்டது. ஆனால் அவர்கள் பேசிய பிறகு அவர்கள் தெரிவித்த கருத்துக்களை முற்றிலும் ஏற்றுக் கொண்டு பாராட்டக்கூடிய நிலையில்தான் நான் இருந்தேன். அதுவே எனக்கு

மிகுந்த மகிழ்ச்சியளித்தது. அதற்குப் பின்னாலும் பொது மேடைகளில் நாங்கள் சந்தித்தபோதெல்லாம் ஒருமித்தக் கருத்தைத் தெரிவிக்கக் கூடியவர்களாகவே இருந்தோம்.

சட்டமன்றத்தில் அவர் எதிர்க்கட்சி வரிசையில் வீற்

அமெரிக்காவில் சிகிச்சை பெற்றுத் திரும்பிய பிறகு, அண்ணா அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தேன். அவர் எவ்வளவு பலகீனமாக இருந்தார் என்பதைக் கண்டு, நான் கவலையுற்றேன். அந்தப் பலகீனத்தைப் பொருட்படுத்தாது பல அலுவல்களில் கலந்து கொண்டார். உடல் வலி மீண்டும் ஏற்பட்டதையும் பொருட்படுத்தவில்லை — சென்னையில் ஒரு அலுவலில் கலந்து கொண்டு, காஞ்சிபுரத்திற்குத் தம் இல்லத்திற்குச் சென்று வந்து, நான் அரசாங்க மருத்துவ மனையில் சிகிச்சை பெறுவதைக் கேட்டு, என்னைப் பார்ப்பதற்கு அன்று மாலை தம் சகாக்களுடன் வந்

தார். நான் அவருடைய உடல் நிலை பற்றிக் கவலை தெரிவித்து — “காஞ்சிபுரத்திற்குப்போய் வந்தது மட்டுமல்லாமல் இந்ததொல்லையோடு என்னைப் பார்ப்பதற்கு மருத்துவமனைக்குவேறு வந்திருக்கின்றீர்களே?” என்றுவருந்தினேன்.

வாதிகளும் இதனை மறுக்கவில்லை.

அவர்கள் திடீரென்று மறைந்தபோது தமிழ்நாடு முழுவதும் துக்கத்தில்ஆழ்ந்ததற்கும் இதுவே முக்கிய காரணம்.

அரசியல்வாதிகளில் நல்லவர்கள் என்று பெயர் பெறுவது சுலபமல்ல. ஆனால் அந்தப்பாராட்டுதலை அறிஞர் அவர்கள் பெற்றார்கள்.

அவர் நோய்வாய்ப்பட்டு இருந்த காலத்திலும் கஷ்டங்களைச் சகித்துக்கொண்டு தம்மால் இயன்ற அளவுக்கு மக்களுக்குப் பணியாற்ற வேண்டும், அவர்கள் குறைகளைப் போக்க வேண்டும் என்பதில் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவருடைய 62—வது பிறந்த நாளைக் கொண்டாடுகின்ற யாவரும்அண்ணா காட்டிய நல்வழியை உணர்ந்து கொண்டு அதன்படி நடந்து கொள்ள முயற்சிப்பதே அண்ணாவரும் அவருக்குச் செலுத்தும் அஞ்சலியாகும்.

**முன்னாள் முதல்வர் எம். பக்தவத்சலம்**

# சக்தி சுகர்ஸ் லிமிடெட்.,

## உயர்தர வெண்படிக சர்க்கரை தயாரிப்பாளர்கள்

எங்களிடம் சிறந்த உத்தரவாதமுள்ள
'சக்தி' வீரிய ஒட்டு வித்துக்களும்
விற்பனைக்குக் கிடைக்கும்.

CSH—1 சோளம்
HB—1
HB—3 கம்பு
HB—4
GANGA—5
Hi-STARCH—மக்காச்சோளம்
JAYA
BASUMATHI —நெல்
SUJATHA—பருத்தி

**சக்தி சுகர்ஸ் லிமிடெட்,**
**தலைமை அலுவலகம்,**

விவரங்களுக்கு:

தலைமை அலுவலகம்,
72, சென்குப்தா வீதி,
த. பெ. நெ. 960,
கோயமுத்தூர்-9.

தந்தி: 'சுகர்கிங்'
போன்: 25551.
டெலக்ஸ்: $042 - 333$.



மறைந்த அறிஞர் அண்ணா அவர்களின் 62-வது பிறந்தநாள் விழா கொண்டாடுவதில் தமிழக மக்களுடன் நாங்களும் பங்கு கொள்கிறோம்.

அக்டோபர் 9-ம் தேதி முதல்
கோவை, நீலகிரி ஜில்லாக்களுக்கு

## கலைஞரின் முதல் வண்ணப்படைப்பு

மக்கள் திலகம் M.G.R., ஜெயலலிதா நடிக்கும்

மேகலாவின்

# எங்கள் தங்கம்

வண்ணச் சித்திரம்

எமது அடுத்த வெளியீடு:
கோவை, நீலகிரி, சேலம், தர்மபுரி ஜில்லாக்களுக்கு

மக்கள் திலகம் M.G.R. (இரட்டை வேடம்) ஜெயலலிதா நடிக்கும்

# நீரும் நெருப்பும்

வண்ணச் சித்திரம்

Phone: 313 Tel: "EPESEE"

ஈரோடு பிக்சர்ஸ் சர்க்யூட், ஈரோடு-2.

கிளை: கோவை—சேலம்.




அண்ணனுக்கு, 62-ம் ஆண்டு பிறந்த நாள்விழா. அண்ணனை எண்ணி, அவர் படத்தின் அடி தொழுது எழுந்து நின்று எழுதுகிறேன்.

அண்ணனே, தாங்கள், எங்களைத் தவிக்க விட்டுச் சென்று விட்டீர்கள்.

நாங்கள், என்ன குற்றம் செய்தோம்? தங்களிடம் அளவிலா பாசத்தைகுவித்து வைத்தோம் — அது தவிர வேறு யாதும் செய்தறியோம்.

தங்களை நினைவு கூர்கிறோம் என்றால், மறந்து விட்டால் அல்லவா, அது பொருந்தும்? அது தவறு. தங்களை மறக்கும் மன வலிவு எங்களுக்கு ஏது?

அண்ணா, விருகம்பாக்கம் மாநாட்டை மனக்கண்முன்னால் கொண்டு வருகிறேன். அண்ணா நகரில் நடை பெற்ற மாநாட்டையும் நினைக்கின்றேன்.

இதற்கிடையில், எத்தனை அரசியல் மாற்றங்கள் — சூழ்ச்சிகள் — எதிர்பாரா சம்பவங்கள் — அப்பப்பா, அவைகளைச்சொல்லி முடிக்க முடியாது!

ஆனால் அண்ணா, தாங்கள் தம்பிகளுக்காக தங்கள் மூச்சு விடும் நேரத்தில் கூட ஆக்கித் தந்த கூட்டு நட்பு, குறைந்து வருகிறது, அண்ணா! எட்டு கட்சிகளின் கூட்டு என்றல்லவா எடுத்துக் காட்டினீர்கள்! இன்று, அதில் ஒன்றொன்றாய்நம்மை விட்டு விலகும் நிலை உருவாகி வருகிறது. ஆனால், அதற்குக் காரணம் நாம் அல்ல, அண்ணா! காரணமற்ற அரசியல் பொறாமை, அரசியல் எரிச்சல்! இதற்கு நாம் என்ன செய்யமுடியும்?

''நண்பர்கள், பகைவர்களாகிறார்கள்; பகைவர்கள் நண்பர்களாகிறார்கள்.''

ஆம், அண்ணா! நீங்கள் சொல்வது போல், அரசியலில், இது இயற்கை என்றாலும், இது தேவையற்றது தானே!

நம்மோடு உறவாகஇருந்த 'இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சி' திடீரென, நிலப்பறிப்பு வேலையில் ஈடுபட்டு, வேகமாக நம்மைக் குறைகூறி நிற்கிறார்கள்.

'இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி'யினரோ விவசாயிகள் பிரச்சினை போன்று, விவகாரத்திற்கு என ஒரு பிரச்னையைக் கிளப்பி, அவர்கள் மாறுபட்டு நிற்கிறார்கள்.

'சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சி'யினர் இடைத் தேர்தல் விவகாரத்தை, இலட்சிய விவகாரமாக்கி, விரோதப்பட்டுப் பேசி வருகிறார்கள்.

'சுதந்திரக் கட்சி'யினரோ தங்களுடனிருந்த பார்வர்டு பிளாக உறுப்பினர்களைவிட்டுப் பிரிந்து இப்போது, இணைந்திருப்பதில் 'ஏறுமாறு' பேசுகிறார்கள்.

ஆனால், புதிய நண்பர்கள் இந்த மாநிலத்தில் மட்டுமல்ல, எல்லா மாநிலங்களிலும் ஏற்பட்டு வருகிறார்கள்.

மத்தியிலுள்ள 'இந்திரா காங்கிரசு கட்சி'யினரோ மத்தியிலே நம் ஆதரவு கோரி நிற்கின்றனர். ஆனால் நம் கோரிக்கைகளுக்குசெவி சாய்ப்பதிலே காலதாமதம் செய்தபடியுள்ளனர். இங்கும் நம்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் சிண்டிகேட் காங்கிரசு கொண்டு வந்த பொழுது, நமக்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை.

இப்படி, அடுத்தபொதுத் தேர்தல் நெருங்கும் நேரத்தில் புதிய நிலை உருவாகிக் கொண்டு வருகிறது.

நம்முடன் ஒட்டியிருந்தவர்களுக்கே, கழகம் தனிப் பலம் பெற்று, தனித்து, ஆட்சி பொறுப்பை ஏற்று நடத்துவது கண்டு, சகித்துக் கொள்ள இயலவில்லை. தணியாதபொறாமைத் தீயில் பொசுங்கிச் சாகிறார்கள். இதுதான் அடிப்படைக் காரணம் என்றாலும், வெவ்வேறு காரணங்களை விதவிதமாக சோடித்துச் சொல்லித் திரிகிறார்கள்.

வடக்கிலே வளர்ந்து நிற்கும் 'ஜனசங்கம்' இங்கேயும் அடிவைக்கத் துடிக்கிறது. அடி வைத்தும் பார்க்கிறது.

ஆனால், தமிழரசுக் கழகம், பழைய உறவை மேலும் வலுவாக்கிக்கொண்டுள்ளது. முஸ்லிம் லீகோ, எப்பொழுதும் போல், தனது இதய பூர்வமான தோழமையை வளர்த்துக்கொண்டு வருகிறது.

இப்படி தமிழக அரசியலில் புதிய உறவு நிலை உருவாகிடும் வகையில், பேச்சும், எழுத்தும் பல்வேறு அரசியல் கட்சிகளிடையே ஏற்பட்டு வருகின்றன.

'சிண்டிகேட் காங்கிரசு', இந்த நிலையைப் பயன்படுத்தி, தனது பழைய நிலையைப் பிடித்துவிடலாம் என்று கனவு காண்கிறது. காமராசர் மனப்பால் குடித்துவிட்டு, மற்றவர்களுக்கும், அதனையேஊற்றி ஊற்றிக் கொடுத்து மகிழ்கிறார். கிடைத்த துரும்பை வைத்துக் கொண்டு கரை சேர்ந்துவிட அவர் துடிக்கிறார்.

இப்படி அரசியல் சக்கரம் சுற்றுகிறது, அண்ணா. நண்பர்கள் பகைவர்களாகவும்; பகைவர்கள் நண்பர்களாகவும் மாறித் தோன்றுகிறார்கள். இதில் கழகத்திற்கு எந்தவித இழுக்கும், பழியும், வீழ்ச்சியும், தாழ்ச்சியும் வராமலிருக்கும் வரம் தாங்கள்தான் தர வேண்டும்.

அண்ணா! அவ்வரந்தான் கலைஞரின் கரத்தை வலுவாக்கும்!

நீங்கள் பெற்றெடுத்த குழந்தை — இந்தக் கழகம் — கழக அரசு. அவைகளுக்கு, என்றும் தோன்றாத துணையாக இருந்து காத்திட வேண்டும்—ஆம்! அண்ணா, அந்த வரத்தை தாங்கள் தந்திட வேண்டும்!

★








## அண்ணாவின் 'ஸ்கெச்'

அறிஞர் அண்ணா அவர்கள் பத்திரிகைக்காக ஓவியரிடம் படம் வரையச் சொல்லும் போது — படம் எப்படி அமையவேண்டும் என்பதற்கு மாதிரியாக அவர்களே ஸ்கெச் போட்டுத் தருவார்களாம் அப்படி அண்ணா அவர்களால் வரையப்பட்ட சித்திரங்கள் தான் இவைகள்.










WITH THE BEST COMPLIMENTS
From
**W. S. INSULATORS OF INDIA LIMITED**

Manufacturers of:
High Tension Porcelain Insuslators
and Lightning Arresters upto 220 KV
and Bushings upto 132 KV
in
Technical Collaboration with
M/S. WEST INGHOUSE ELECTRIC INTERNATIONAL CO.,
U. S. A.

★

**Regd. office:**
Dhun Building,
175/1, Mount Road,
MADRAS—2.

Phone: Office: 83876
Works: 801811/4

**Works:**
PORUR,
St. Thomas Mount,
MADRAS—16.

Gram: POWRFLO
Telex: 041-281
POWRFLO

# ஓர் முதல் தரமான சந்தர்ப்பம்

உங்கள்

## சிறு தொழிலை

தொடங்க

**டி ஐ ஐ ஸி**
இதயபூர்வமான
நிதியுதவி

விவரங்களுக்கு உடனே அணுகவும்:

**தமிழ்நாடு இண்டஸ்டிரியல்
இன்வெஸ்ட்மெண்ட் கார்பொரேஷன்
லிமிடெட்.,**

எல். எல். ஏ. பில்டிங்ஸ்,
150-A. மவுண்ட்ரோடு, மதராஸ்-2.



# அண்ணாவின் கடைசி நாட்கள் பற்றி அடையாறு மருத்துவமனை டாக்டர் சொல்வதென்ன?

அடையாறில் தமிழக அரசு பேருந்து நிலையத்திற்கு அருகே உள்ள தெருவில் ஒரு பர்லாங் தூரத்திற்கு நீண்டு நிமிர்ந்திருக்கும் அந்த மருத்துவமனையை நோக்குகின்றபோது இதயம் விம்முகிறது—விழிகள் நனைகின்றன. சென்னையில் மற்ற மருத்துவ மனைகளுக்கு இல்லாத வரலாற்றுச் சிறப்பை நம் அண்ணாவை 13 நாட்கள் வைத்துக் கொண்டிருந்ததன் மூலம் அந்த மருத்துவமனை பெற்று விட்டது.

1969 பிப்ரவரி முதல் தேதியிலிருந்து மூன்றும் தேதி முடிய அந்த மருத்துவமனை வாயிலில் வெள்ளம் • போல் மக்கள் அலை மோதிக் கொண்டிருந்தனர். வெள்ளத்தை விழிகளிலே தேக்கிக் கொண்டு. அந்தப் புற்று நோய் மருத்துவ மனை வாயிலில் லட்சக் கணக்கில் யாரைக் காண்பதற்காக இரவு பகல் பாராது காத்துக் கிடந்தனர்?

உள்ளே நோய் வாய்ப்பட்டுக் கிடப்பது பெற்றெடுத்த தாயா?

பேணி வளர்த்த தந்தையா?

உடன் பிறந்த ரத்தமா? உயிருக்கு ஒப்பான மனைவியா?

உறவில் ஜனித்த மழலையா?

இவ்வாறு உறவினர்கள் சுகவீனப்பட்டிருந்தால்கூட ஒருவர் அல்லது இருவர் அல்லது ஒருகுடும்பம்தானே. ஓடோடி காண வரும்! ஆனால் லட்சக் கணக்கான மக்கள் விழிகளில் வேதனையைத் தேக்கி பகலிலும் பனியிலும் பசி நோக்காது, கண் துஞ்சாது காத்துக் கிடந்தார்களே அது யாருக்காக? தன் அருமைப் பிள்ளைக்குக் கொள்ளை நோய் வந்தபோது கூட துடிக்காத உள்ளம் அன்று துடிதுடித்து நின்றதே அது யாருக்காக?

ஈன்றெடுத்த தந்தைக்கும் மேலான தந்தை—மார்மீது தவழ விட்டு ரத்தத்தைப் பாலாக்கிப் புகட்டிய தாய்க்கும் மேலான தாயுள்ளம்—உடன் பிறவாத சகோதரன்—ஆனால் ஒருயிரில் லட்சோப லட்சம் ஆத்மாக்களைஇணைத்துக் கொண்டுள்ள அண்ணா எனும் பெயர் கொண்ட அண்ணன் அல்லவோ அந்த மருத்துவ மனையில் நோய் வாய்ப்பட்டுக் கிடக்கிறார்?

இந்தச் சமுதாயத்திற்கு ஏற்பட்ட நோயை அவர் எத்தனை வகையான வைத்தியங்களின் மூலம் தீர்த்திருக்கிறார் அறுவைச் சிகிச்சையில்லாமல்! ஆனால் அவருக்கு அறுவைச் சிகிச்சை நடந்தது அந்த மருத்துவ மனையில்!

மூட நம்பிக்கையெனும் கொடுமையான நோயை அவர் மேடைப் பேச்சு என்னும் ஒரே ஒரு மூலி கையால் ஓட ஓட விரட்டினார்—ஆனால் அவருக்கு ஏறபட்ட நோயைத்தீர்க்க ஒரு மருந்தா? இரு மருந்தா? மும்மருந்தா? எல்லை கடந்து வந்த மருந்தாலும் இயலாது போயிற்றே!

மருந்துகளால் இயலா விட்டாலும்—மனத்தால் அவரைக் காப்பாற்றித் தருவதற்கு மருத்துவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி இருக்கிறதே—பட்ட பாடிருக்கிறதே அது மறக்க முடியாத ஒன்று! நன்றிக் கடமைப்பட்ட செயல்.

அவர்கள் என்ன செய்தார்கள்—அண்ணனைக் காப்பாற்றித் தந்து கோடிக் கணக்கான இதயங்களின் பாராட்டுதல்களைப் பெறுவதற்கு அவர்கள் எப்படியெல்லாம் செயல்பட்டார்கள் என்பதை அவர்களிடமே கேட்டுப் பார்க்கலாம் என்று அடையாறு மருத்துவமனைக்குச் சென்றோம்.

அடையாறு மருத்துவ மனை உயர்ந்த மாடிக் கட்டடங்களைக் கொண்டதல்ல-ஆனால் உயர்ந்த உள்ளங்களைக் கொண்டது. சாந்தம், சாமான்யர்களிடத்திலும் அன்பு செலுத்தும் தாயுள்ளம், அலட்சியமற்ற மனோ பாவம், கூர்மையான கவனிப்பு, நோயறிந்து செயல்படும் தன்மை இவைகளால் அடையாறு புற்று நோய் மருத்துவமனை சிறந்து விளங்குகிறது.

தங்களிடம் ஒப்புவிக்கப் படும் எந்த உயிரையும் காப்பாற்றுவதற்கு அவர்கள் உயிரைத் தந்து பாடு படுகிறார்கள். அத்தகு மருத்துவர்களில் ஒருவரானடாக்டர் வி. சாந்தா அவர்களை மருத்துவமனையில் நேரில் கண்டு அண்ணா அவர்கள் சிகிச்சைக்காகஅனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து இறுதி வரை அளிக்கப்பட்ட சிகிச்சைகள், மற்ற செய்திகள் பற்றிக் கேட்டபோது அவர் மிக உருக்கமாகப் பதில் அளித்தார்.

[டாக்டர், சாந்தா அடையாறு மருத்துவ மனையில் அண்ணா அவர்களுக்கு மருத்துவம் பார்த்தடாக்டர்களில் ஒருவர் — குறிப்பிடத்தக்கவர்—தொடக்கத்தில் அவர் அண்ணா அவர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் தொண்டை அடைக்கக் கூறினார்: "கொடுத்து வைக்காதவர்கள் தமிழகத்து மக்கள் மட்டுமல்ல—நாங்களும் கொடுத்து வைக்காதவர்கள்தான். அண்ணா அவர்களைக் காப்பாற்றுவதற்கு நாங்கள் அனைவரும் எவ்வளவோ பாடுபட்டோம். அந்த பாக்கியம் எங்களுக்குக் கொடுத்து வைக்கவில்லை," என்று நா தழுதழுக்கச் சொன்னார்.

"அண்ணா இங்கு அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து உள்ள செய்திகளைக் கோவையாகச் சொன்னால் நாங்கள் தொகுப்பதற்கு உதவியாக இருக்கும்!" என்று நான் கேட்டதும் டாக்டர் சாந்தா கூறினார்.

"ஜனவரி மாதம் 20ந் தேதி அன்று அண்ணா அவர்கள் இங்கே அனுமதிக்கப்பட்டார்கள். ஞாயிற்றுக்கிழமை என்று நினைக்கிறேன் அன்று ஹெல்த் மினிஸ்ட்டர் அவர்கள்—அண்ணா சிகிச்சைக்காக உங்கள் மருத்துவ மனைக்கு வருகிறார் என்று தொலைபேசியில் கூறினார்கள். நாங்கள் அண்ணா அவர்களுக்காக எல்லா வசதிகளையும் செய்து வைத்தோம். அண்ணா அவர்கள் சிகிச்சைக்கு வந்த நேரத்திலிருந்து எங்களிடம் பெரும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவே கருதினோம்.

"எத்தனையோ ஏழைகள், நடுத்தர மக்கள் இங்கு வருகிறார்கள். அவர்களுக்குச் சிகிச்சை செய்து குணப்படுத்தி அனுப்புகிறோம். அப்போதெல்லாம் எங்களுக்கு இப்படி ஒரு கவலை ஏற்பட்டது கிடையாது. அண்ணா ஓர் மக்கள் தலைவர் என்பதால்எங்களுக்குள் ஒரு அச்சமும் மிகுந்த பொறுப்பும் ஏற்பட்டது.

"அவர் ஆஸ்பத்திரிக்கு வருகின்ற போது எதையும் விழுங்குவதற்கு மிகுந்த சிரமப்பட்ட நிலையில் வந்தார்! அவருடைய உடலிலும் முகத்திலும் சோர்வு தென்பட்டதே தவிர, அவர் மனம் தளர்ந்த மாதிரி இல்லை. நண்பர்களுடன் மற்ற அமைச்சர்களுடன்கலகலப்பாக உரையாடிக் கொண்டிருந்தார். இங்கு வந்த நேரத்தில் கூட தன் தனிச் செயலாளரிடம் அந்த வேதனையிலும் செகரட்டேரியட் ஃபைல்கள் பற்றி விசாரித்தார். ஐயோ அது எப்படித்தான் அவரால் முடிந்ததோ தெரியவில்லை," என்று மிகப் பெரும் வியப்புக் குறி காட்டினார்டாக்டர் சாந்தா.

நான் திங்கட்கிழமையன்று பம்பாயில் நடைபெறும் மீட்டிங் ஒன்றிற்காகச் செல்ல வேண்டியிருந்தது. அதற்கான ஏற்பாடுகளும் முடிவடைந்திருந்தன. ஆனால் அன்று அண்ணா அவர்களுக்கு முதல் பரிசோதனை என்பதால் என்னுடைய பம்பாய் பயணத்தை ரத்து செய்யும்படி கூறினார் எங்கள் டைரக்டர் கிருஷ்ணமூர்த்தி. அதன்படி பம்பாய் பயணத்தை ரத்து செய்தேன்.

## சுயராஜ்யமும்-காந்தியாரும்!

'சுயராஜ்யம்' பெற்றளித்துவிட்டால் போதுமென்று காந்தியார் கருதவுமில்லை — கூறவுமில்லை. நாடும், மக்களும் எப்படி இருந்திட வேண்டுமென்று அவர் கூறாமலுமில்லை.

'சுயராஜ்யம்'—ஓர் லட்சியத்திற்கு வாய்ப்பு என்றே அவர் கருதினார். "ஒரு நாட்டுக் கதையிலே பொன்னேடு அது! ஆனால் கடைசி ஏடு அல்ல"! என்பதை வலியுறுத்தினார்.

நாடும் மக்களும் எந்த நிலை பெறவேண்டுமோ, அதற்கு அடிமைத்தனம் தடையாக இருக்கிறது. ஆகவே அதை எந்த விலை கொடுத்தேனும் அகற்றியாக வேண்டும் என்றே அவர் கூறினார்.



## மறக்கவில்லை!

'இப்போது ஏன் எழுச்சிநாள்! நாட்டிலே வேறு பிரச்னை இல்லையா?' என்று சிலர் கேட்கலாம்

நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் மக்கள் வயிற்றுப் பிரச்னையை மறந்துவிட்டு— உணவுப் பிரச்னையை விட்டுவிட்டு இதற்கு வந்துவிடவில்லை. ஓரளவு அதைச் சீர்திருத்திவிட்டு ஏழைகள் முகம் மலர்ந்தபிறகுதான் இதற்கு வந்திருக்கிறோம்.

—அண்ணா

அண்ணா அவர்களுக்கு டெஸ்ட் நடந்தது. டெஸ்ட்டில் அமெரிக்காவில் அறுவைச் சிகிச்சை செய்து ஒழுங்கு படுத்தப்பட்ட குடல் அருகில் மீண்டும் புற்று நோய் வளர ஆரம்பிப்பது தெரிய வந்தது. அந்த இடத்தில் கதிரியக்கச் சிகிச்சை செய்ய வேண்டியதிருக்கும் என்று அண்ணா அவர்களிடம் ஒப்புதல் கேட்டோம். அதற்கு அவர் தம் குடும்பத்தாரையும்—நண்பர்களையும் கலந்து விட்டுச் சொல்வதாகச் சொன்னார்.

குடும்பத்தாரையும்—நண்பர்களையும் கலந்தபின்னர் அமெரிக்க டாக்டர்கள் வந்தார்கள்—கதிரியக்க அறுவை செய்யப்பட்டது—நாங்களும் எவ்வளவோ முயன்றோம். ஆனால் அவருடைய துடிப்பும் தோல்வியடையும் வகையில்முடிவு துக்ககரமாக அமைந்து விட்டது. அண்ணா "இங்கு வந்து விட்டுப் போனது ஏதோ புயலடித்தது மாதிரி இருக்கிறது." என்று இரு கைகளையும் விரித்தபடி குழந்தையைப் பறிகொடுத்த தாயைப் போல் சோகச் சித்திரமானார் டாக்டர் சாந்தா.

அவர்களை சோகத் திசையிலிருந்து திருப்ப—'கதிரியக்கச் சிகிச்சை பயனளிக்காமல் போனதற்குக் காரணம் என்ன?' என்று கேள்வி தொடுத்த போது அவர்கள் அதற்கு உடனடியாகப் பதில் சொல்லவில்லை. நீண்ட பெருமூச்சுக்குப் பிறகு கூறினார்.

"இருபத்தி நான்கு மணி நேரமும் அவர் அருகில் இருந்துதான் நாங்கள் அவரை வரும் கவனமாகச் செயல்பட்டோம்... என்ன செய்வது? எங்களுக்குக் கொடுத்துவைக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இதைப் போல இங்கு வரும் பல நோயாளிகளுக்கு சிகிச்சை செய்கிறோம். ஒரு வருடம் இரண்டு வருடத்தில் பலர்கள் குணமாகி வீடு திரும்பியிருக்கிறார்கள். ஆனால் அண்ணாவின் முடிவு எங்களுடைய துரதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்" எனக் கூறிய டாக்டர், 'அண்ணா வந்துட்டுப் போனதிலிருந்து எங்கள் மருத்துவமனைக்கு பெரிய மரியாதை கிடைத்துள்ளது—தமிழக அரசாங்கம் மருத்துவ மனைக்கு வேண்டிய அத்தனை உதவிகளையும் தங்கு தடையின்றிச் செய்கிறது. அரசாங்கத்தின் இந்த உதவிகளுக்கு நாங்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்' என்றார்.

சிகிச்சைக்கு முன்பு அண்ணா கலகலப்பாக இருந்ததாகக் கூறினீர்களே அதுபோல கதிரியக்கச் சிகிச்சைக்குப் பின்னர் காணப்பட்டார்களா?

"இல்லை. சிகிச்சைக்குப் பின்னர் அவர்கள் யாருடனும் அதிகம் பேசவில்லை. கவர்னர், பெரியார், ராஜாஜி, செங்கல்வராயன் வந்தபோது ஓரிரு வார்த்தைகள் பேசினார். கவர்னருக்கு எழுந்து அமர்ந்து வணக்கம் செலுத்தினார். வந்தவர்கள் யாரும் அவருடன் அதிகம் பேச அனுமதிக்கவில்லை. எல்லாத் தலைவர்களையும் போல கவர்னர் அவர்கள் நாளைக்கு இரண்டு முறை மூன்று முறை தன் துணைவியாரோடு வருவார். கனிவோடு விசாரிப்பார். அண்ணாமீது கவர்னர் அத்தனை பற்று வைத்திருந்தார்.

"பத்துப் பன்னிரண்டு டாக்டர்கள் நாங்கள் எப்போதும் அண்ணாவின் அருகிலேயேஇருந்தோம். பெரும்பாலும் நாங்கள் தூங்கியதுகூட இல்லை. ரெஸ்ட் என்பது எங்களுக்கு நாற்காலியோடு சரி!

"நாங்கள் அவர் அருகிலேயே இருப்பதைப பார்த்த அண்ணா அவர்கள் "நீங்க எல்லாரும் ரெஸ்ட் எடுத்துக்குங்க—எவ்வளவு நேரம்தான் இப்படியே கவனிச்சுக்கிட்டிருப்பீங்க" என்று அன்போடு கூறுவார். அந்த வார்த்தையே எங்கள் அயர்வை நீக்கும் டானிக்குகளாக இருந்தன.



அண்ணா முதலமைச்சர் பதவி ஏற்று முதல் பட்ஜெட் உரை நிகழ்த்த சட்டமன்றத்திற்கு வருமுன் தனது அறையில் அமர்ந்து பட்ஜெட்டை சரி பார்க்கும் காட்சி.

"அண்ணா அவர்கள் மறைவதற்கு இரண்டு மூன்று தினங்களுக்குமுன்பு, நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி என்னால் எந்தக் காலத்திலும் மறக்க இயலாத பசுமையாகிவிட்டது.

"அண்ணா அவர்கள் சிகிச்சை பெற்ற அறையில் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் பார்வையாளர்கள் அமர்ந்து நேரத்தை எடுத்துக் கொள்கிறார்கள் என்பதற்காக—நாங்கள் அந்த நாற்காலிகளை எடுத்துவிட்டோம். ஒருநாள் எங்கள் டைரக்டர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அண்ணா அவர்களின் அறைக்குச் சென்றுதரையில் அமர்ந்திருக்கிறார். தலையில் கட்டுடன் மயக்க நிலையில் படுத்திருந்த அண்ணா அவர்கள் இதனைக் கவனித்து கட்டிலில் எழுந்து அமர்ந்து "நீங்கள் தரையில் உட்காரக் கூடாது" என்று வற்புறுத்தியதோடு அவருக்கு ஒரு நாற்காலி கொண்டு வந்து போடும்படி சைகையால் கூறியிருக்கிறார்.

அண்ணா அந்த நேரத்தில் எப்படி எழுந்து அமர்ந்தார் என்பதைஇன்றைக்கு நினைத்தாலும் எனக்கு வியப்பாக இருக்கிறது. அவர் பிறரிடத்தில் காட்டும் அளவு கடந்த மரியாதையும், அவருடைய பெரிய மனமும் எங்கள் டைரக்டர் கீழே அமருவதை காணச் சகியாமல் அண்ணாவினுடைய மனிதாபிமான உணர்வுதான் எழுந்து அமர்ந்து பேசியதாகக் கருதுகிறேனே தவிர அவர் எழுந்து அமர்ந்ததாக இன்றைக்கும் என்னால் நம்ப முடியவில்லை—காரணம் அந்த நேரத்தில் அண்ணா அத்தனை பலகீனமாக இருந்தார். மனம் திறந்து சொன்னால்—அவர் பேச்சும் மூச்சும் சக்தியற்றுக்கொண்டிருந்தநேரம்அது.

"இவ்வளவு பெரிய உள்ளத்தை—இப்படிப் பட்ட தலைவரை நான் பார்த்ததே இல்லை," என்று அந்த இமயத்தின் அடக்கத்தை, அண்ணா அவர்களின் உடலில் ஊறிப் போன பண்பாட்டை புதிதாகக் கண்ணுற்று மலைத்துப் போன டாக்டர் சாந்தா இச்சம்பவத்தை மெய் சிலிர்க்கக் கூறி விட்டு எங்கள் எதிரில் அவர் கண்கள் குளமாவதை மறைக்க முயன்று தோற்றார்.

"நீங்கள் அவர்கள் அருகிலேயே இருந்தீர்களே உங்களிடமோ, மற்றவர்களிடமோ அவர் ஏதேனும், பொது விவகாரங்கள், வேறு பிரச்சினைகள் பற்றிப் பேசியதுண்டா?"

"நான் முன்பு சொன்னது போல கதிரியக்கத்திற்குப் பிறகு அவர் யாரு



# அண்ணாவின் சக்தி-
# கவர்னர் ஸ்ரீபிரகாசாவின் கருத்து!

நான் அவரைச் (அண்ணாவை) சந்திக்க அடிக்கடி விரும்பினேன். ஆனால் துரதிருஷ்டவசமாக ஒரே ஒரு முறைதான் சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்றேன். அந்த நாளை பசுமையாக நினைவு கூர்கிறேன். ராஜாஜி மண்டபத்தில் அன்று ஒரு பொதுக்கூட்டம். அந்தக் கூட்டம் நடந்து நாட்கள் பல ஆனதால் எதற்காக அந்தக் கூட்டம் நடைபெற்றது என்பதை மறந்துவிட்டேன். அந்தக் கூட்ட மேடையில் முதலமைச்சர் காமராஜரும் என்னுடன் இருந்தார். ஆர்வமுடன் கூடியிருந்த மக்கள் அங்கே திரு. அண்ணாதுரையின் பேச்சைத் தவிர வேறு யாருடைய பேச்சையும் கேட்கத் தயாராக இல்லை. பேச்சாளர்கள் ஒருவர் பின் ஒருவராக மக்கள் மத்தியில் எழுந்த சப்தத்தால் பேசாது அமர்ந்தனர். காமராஜராலும், என்னாலும் பேச இயலவில்லை. நான் பிறகு திரு. அண்ணாதுரையிடம் அவரைப் பேசுமாறு வேண்டிக் கொண்டேன். [illegible] பேச்சைத் தவிர யாருடைய பேச்சையும் மக்கள் கவனிக்கத் தயாரா[illegible] இல்லை [illegible]ன்று சொன்னேன்.

டாக்டர் அண்ணாதுரை பேச எழு[illegible]தவுடன் அங்கே ஊசி விழுந்தால் கேட்குமளவுக்கு அமைதி நிலவியது. அவருடைய பேச்சு மிகுந்த மரியாதையோடும் கவனத்துடனும் கேட்கப்பட்டது.

—முன்னாள் தமிழக கவர்னர்

**ஸ்ரீ பிரகாசா**

(60ம் ஆண்டு அண்ணா மலரில் [illegible]ழுதியது).

டனும் அதிகமாகப் பேசவில்லை. பேச இயலாத நிலையும் ஏற்பட்டுக்கொண்டு வந்தது. ஒருநாள் வெளியில்கூட்டம் அதிகமாக இருந்தது. அவர்களின் பேச்சுச் சத்தம் அண்ணு அவர்களின் அமைதியைக் குலைத்துவிடக்கூடாது என்பதற்காக ஜன்னல் கதவுகளையெல்லாம் சாத்திவைத்திருந்தோம். தூங்கிக்கண்விழித்தஅண்ணு அவர்கள்—''ஏன் ஜன்னல்களைச் சாத்தியிருக்கிறீர்கள் திறந்து வையுங்கள்'' என்ருர். நாங்கள் எவ்வளவோ காரணங்கள் சொல்லியும் அவர் கேட்கவில்லை. கடைசியாக வெளியில் உள்ள கூட்டத்தைப் பற்றிச் சொன்ஞேம்.

''இதற்காகவா ஜன்னலைச் சாத்தி வைத்தீர்கள்? நான் எழுந்து ஒருவார்த்தை சொன்ஞல் போதும் கலைந்து விடுவார்கள் திறங்கள் ஜன்னலை,'' என்ருர். எங்களுக்கோ அவர் உடல் நிலை பற்றிய கவலை. ஜன்னல் திறக்கப்பட்டால் கூட்டம் அவரைப் பார்க்க முயற்சிக்கும். அண்ணுவுக்கோ சிறு அதிர்ச்சி கூட ஏற்படக் கூடாது. இந்த நிலையில் நாங்கள் எதைச் செய்வது. ஜன்னலைத் திறந்தால் காற்று அதிகமாக வரும் என்று சமாதானம் கூறிஞேம். அந்தப் பதில் அண்ணு அவர்களுக்குத்திருப்தியளிக்கவில்லை. ''அவர்கள் நல்லவர்கள். சொன்ஞல் கேட்டுக் கொள்வார்கள். நான் அவர்களைப் பார்க்க வேண்டும்'' என்று கூறி எங்கள் செயலுக்காக காத்திராமல் செக்கியூரிட்டியை அழைத்து கதவைத் திறக்கும்படி சொன்ஞர்—பிறகு கூட்டத்தில் அமைதி ஏற்படுத்திய பின்னர் ஜன்னல் திறக்கப்பட்டது.'' என்று டாக்டர் சாந்தா கூறியபோது அண்ணு அவர்கள் கடைசி நேரத்திலும் தம்பியருக்கு தன் இதயத்தில் எத்தனை பெரிய இடம் ஒதுக்கியிருந்தார் என்பது புலஞகிறது.

''நீங்கள் வெளியே செல்லும்போதுகூடியிருக்கும் கூட்டம் அண்ணு அவர்களின் உடல் நிலை பற்றி ஏதேனும் கேட்டதுண்டா?''

''நாங்கள் வெளியே போவதாவது—அண்ணு வந்த நாள் முதற்கொண்டு அவர் அருகில் தான் இருந்தோம். மருத்துவமனையை விட்டு வெளியில் செல்லவேயில்லை.

''ராஜாஜி அவர்கள் ஆஸ்பத்திரிக்கு வந்தபோது—கூடியிருந்த கூட்டத்தைப் பார்த்து விட்டு—இவ்வளவு கூட்டத்தை எப்படிக் கண்ட்ரோல்பண்ணப்போறீங்க'' ? என்ருர். பிறகு அவரே கூட்டத்தின் மத்தியில் சென்று அண்ணு நலமாக இருக்கிருர் கலைந்து செல்லுங்கள் என்று கூறிச் சென்ருர்.

அண்ணு இயற்கை எய்திய தினத்தன்று மாலை நம்பிக்கையூட்டும் நிலைமை இருந்ததால் செய்தியறிந்த கூட்டத்தினர் பெரும்பாலும் வீடு சென்று விட்டனர்.

பிப்ரவரி மூன்ரும் தேதி நள்ளிரவில் அண்ணு இயற்கையெய்திய நேரத்தில் அமைதியான சூழல்—செய்தி அமைச்சர்களிடம் தெரிவிக்கப்பட்ட போது அமைச்சர்கள் மயக்கமுற்று வீழ்ந்தனர். எங்களுக்கே அந்த மயக்கம் வந்தது. விவரிக்க இயலாத வேதனையோடு அவர் உடலை இல்லத்திற்கு அனுப்பி வைத்தோம்.

''அவர் மறைவுச் செய்தி உண்மைதாஞ என்று கேட்டு சுமார் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட போன் கால் வந்திருக்கும் அத்தனைக்கும் அயராமல் மன வேதனையோடு பதில் அளித்தோம்.

''எங்கள் மருத்துவமனையிலிருந்த அத்தனை நோயாளிகளும்—மொழி மாறுபட்டவர்களும்—அவரை அறிந்தேயிராதவர்களும் கூட அவர் குணச் சிறப்புக் கேட்டு கண்கலங்கினர்.

''எத்தனை ஆண்டுகள் ஆஞலும் அண்ணு மாதிரி ஒரு தலைவரை இனிப் பார்க்க முடியாது,'' என்று டாக்டர் சாந்தா அவர்கள் கூறி முடித்த போது ஆரம்பத்தில் எங்களைவாருங்கள் என்று புன்னகை தவழ அழைத்த அவர் முகத்தில் சோக ரேகை சூழ்ந்திருந்தது.

அவருடைய நேரத்தை நாங்கள் அதிகம் எடுத்துக் கொண்டதற்காக வருத்தம் தெரிவித்து அவரிடமிருந்து விடை பெறுகிருேம்.

ஃ

நான் மீண்டும் மருத்துவமனையை நிமிர்ந்து பார்க்கிறேன். என் கண்கள் பனிக்கின்றன இதயம் விம்மித் துடிக்கிறது.

என் அண்ணனே! உன் பெருமை பற்றி கட்சிக்கு அப்பாற்பட்டவர்கள் புதிதாகக் கூறும் போது உன் புகழ் விண்ணை முட்டுகிறது—உன் சரிதம் விரிவடைகிறது—எங்கள் இதயத்தில் நீங்கள் தெய்வத்தின் தெய்வமாகிறீர்கள்.

**- தினகரன்**



1948—ல் பகுத்தறிவுப் பிரச்சாரம் தீவிரமாக நடைபெற்ற போது — 'நீதிதேவன் மயக்கம்' நாடகத்தில் அறிஞர் அண்ணு அவர்கள் இராவணஞகத் தோன்றிய காட்சி

★

## அரசு இயந்திரம் அன்றும்-இன்றும்!

சேர, சோழ மன்னர்களும், பாண்டிய வேந்தர்களும் ஆண்ட காலத்திலேயும்,—வடநாட்டில் வேறு மன் மன்னர்களின் அரசுகள் இருந்த நிலைமையையும் பார்க்கும்போது அன்றைக்கே நம்முடைய நாட்டில் மிகச் சிறந்த முறையில் அரசு நிர்வாக இயந்திரம் செயல்பட்டு வந்தது தெரியும்!

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நல்ல அரசு இயந்திரம் நம் நாட்டில் இருந்திருக்கிறது.

ஆஞல், இடையில் இவற்றைச் சரிவரப் பயன்படுத்தத் தவறியதால் அரசு நிர்வாக இயந்திரத்தைத் துருப் பிடிக்க விட்டு விட்டோம். அப்படித் துருப் பிடிக்கப்பட்டுள்ள நிர்வாக இயந்திரம் சீர்திருத்தப் படவேண்டும்!

**—அண்ணு**



லட்சோப லட்சமெனத் திரண்டுள்ள இது கூட்டமல்ல—அண்ணுவின் இறுதி யாத்திரையில் விழிநீர் பெருக்கக் கலந்து கொண்ட ஓர் குடும்பம்!



# இவர்கள் பார்வையில் அண்ணா



**நீண்ட நாட்களாகப் பத்திரிகைத் துறையில் செய்தி நிருபர்களாகவும்-புகைப்பட நிபுணர்களாகவும்-ஓவியர்களாகவும் பணிபுரியும் பலர் அண்ணா அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்திருக்கிறார்கள். அவர்களில் பலர் கட்சி சார்பற்றவர்கள்-நடுநிலையாளர்கள்-அவர்கள் அண்ணாவை எந்தக் கண்ணோட்டத்தில் நோக்குகிறார்கள் என்பதும்-அவர்கள் அண்ணாவுடன் தொடர்பு கொண்ட காலத்தில் ஏற்பட்ட சம்பவங்களும் அவர்களே கூறிய பல முக்கிய நிகழ்ச்சிகளும் இப்பகுதியில் இடம் பெறுகிறது.**

## அந்தப் புன்முறுவலை இனி எப்போது படம் பிடிப்பேன்?

சென்னையிலிருந்து வெளிவந்த தமிழ்நாடு நாளிதழில் பணியாற்ற வந்தேன். முக்கியமான பொதுக் கூட்டங்களுக்கு அந்த இதழின் சார்பில் நிருபராக நான் செல்வதுண்டு. மேடைக்கு முன் நிருபர்கள் அமர்ந்திருப்போம். அண்ணாஅவர்கள் மேடைக்கு வந்ததும் பிளாஸ் ஒளி பளிச்சிட்டுக் கொண்டே இருக்கும். நான் ஓரளவு புகைப்படம் எடுப்பது பற்றி அறிந்திருந்ததால் ஆவலோடு கவனித்துக் கொண்டிருப்பேன். அண்ணா அவர்கள் மேடைக்குவருவது. பின் பேசிக் கொண்டிருப்பது இவைகளை மட்டும் ஓரிரு படம் பிடித்துக் கொண்டு போய் விடுவார்கள். அவரது ஒவ்வொரு அசைவுகளையும் படம் பிடித்தால் எப்படி இருக்குமென்று கற்பனை செய்து கொள்வேன்.

நான் பணியாற்றி வந்த நாளிதழ் நிறுத்தப்பட்டு விட்டது. அதன் பின் எனது நண்பர் திரு பாஸ்கர் அவர்கள் புகைப்படம் எடுப்பதில் தேர்ச்சி அளித்துப் புகைப்பட நிருபராவதற்கு வழியமைத்துத் தந்தார்கள்.

மலேசியாவிலிருந்து வெளிவரும் "தமிழ் மலர்" நாள் இதழில், அண்ணா அவர்களின் பிறந்த தினத்தில் வெளியிட படம் கேட்டிருந்தார்கள். அண்ணா அவர்கள் நுங்கம்பாக்கம் இல்லத்தில் இருப்பதை அறிந்து அங்கு சென்றேன். சட்டையணியாது அமர்ந்திருந்தஅண்ணா அவர்களிடம் நான் வந்த விபரத்தைச் சொன்னேன். "ஓ! எடுக்கலாமே. இப்படி உட்கார்" என்று சொல்லி விட்டு உள்ளே சென்றார். சிறிது நேரத்தில் சட்டை அணிந்து கொண்டு வந்து "எங்கே எடுக்கலாம்" என்றார்கள். அருகில் இருந்த நாற்காலியில் அமரச்செய்து எழுதுவது, படிப்பது போன்று பல கோணங்களில் அவசர அவசரமாகப் படம் எடுத்தேன். என் பரபரப்பை அறிந்த அண்ணா அவர்கள், "தம்பீ! நிதானமாக எடு. பதட்டப் படாதே" என்றார். பிலிம் தீரும்வரைபடம் எடுத்தேன். பிலிம் தீர்ந்ததை அறிந்த அண்ணா "போதுமா?" என்றார்கள் தனக்கே உரிய புன்னகையுடன்.



புகைப்பட நிபுணர் சுந்தரம்

ஒருமுறை அண்ணா-அண்ணி இருவரையும் அருகருகே நிற்க வைத்துப் படம் எடுக்க ஏற்பாடு செய்தேன். அண்ணி அவர்களைப் பார்த்து 'ஸ்மைல் ப்ளீஸ்' என்றேன். உடனே அண்ணா அவர்கள் "அவ பேரனைக்கேமிரா பக்கத்தில் கொண்டு வந்து காட்டு தம்பி!" அப்பத்தான் இவ சிரிப்பா" என்றார்கள். அதைக் கேட்டு அண்ணி சிரிக்க நான் படமெடுத்தேன்.

ஒரு அண்ணா பிறந்த நாளன்று அண்ணா அவர்கள் இல்லத்தில் படமெடுத்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது அங்கு தையற்கலை ஆசிரியர் திரு சுந்தரம் வந்தார்கள். என்னைக் கண்டதும் "எல்லோரையும் அண்ணாவுடன் படம் எடுக்கிறாயே உன்னை யாரும் எடுக்கவில்லையே நீ அண்ணா பக்கத்தில் நில் நான் படம் எடுக்கிறேன்" என்று சொல்லிவிட்டு காமிராவை வாங்கிக் கொண்டார். உடனேஅண்ணா அவர்கள் அவர் எடுப்பதால் "படம் வருமோ வராதோ பிலிமை டெவலப் செய்து காப்பியை கொண்டு வா" என்றார் அண்ணா. "நான் எடுத்தால் உங்களுக்கு எப்போதும் சந்தேகம் தான்" என்றார் சுந்தரம். "நீ எடுத்து எந்தப் படமும் வந்த மாதிரி எனக்கு நினைவில்லை . அதற்காகத்தான் இதை எப்படி இருக்கிறது என்று பார்க்க ஆசைப்பட்டு, கொண்டுவரச்சொன்னேன்" என்றார்கள் அண்ணா.

காஞ்சிபுரத்திலிருந்து திரு மா. கி. தசரதன் அவர்களின் காரில் சென்னை புறப்பட ஆயத்தமானார் அண்ணா. காருக்கு அருகில் அண்ணாவுடன் நின்று படம் எடுத்துக் கொள்ள ஆவல்கொண்டார் திரு மா. கி. த. அவர்கள். அண்ணா அவர்கள் காருக்குப் பக்கத்தில் நின்று கொண்டு "நீ படம் எடுப்பது சரி. ஆனால் "இது தான் கார்" என்று படத்தில் எழுதிக் கொடு" என்று பழைய மாடல் காரைப் பற்றி கிண்டலாகச் சொன்னார்கள்.

ஒருமுறை காஞ்சிபுரத்தில் அண்ணாவை படமெடுக்கச் சென்றேன். அண்ணாவின் சகோதரியார் ஒரு சலவைச் சட்டையை அண்ணாவிடம் கொடுத்தார். அதில் பட்டன்கள் சரியாக இல்லை. அந்தச் சட்டையைகொடுத்து விட்டு அருகில் மாட்டியிருந்த சட்டையைப் போட்டுக் கொண்டு பழைய சட்டை தான் போட்டோவுக்கு நன்றாக இருக்கும் என்றார்.

மலேசியாவிற்கு முதன் முறையாக சென்ற போது அவர் விமானத்திலிருந்து இறங்கும் போதே சிறப்பு மலர் வெளியிட அந்த நாட்டு நாளிதழில் முடிவு செய்து அண்ணா அவர்கள் வணக்கம் செலுத்துவது போல் முழு உருவப் படம் கேட்டிருந்தார்கள். வழக்கம் போல் அண்ணா பட்டன்களை மாற்றிப் போட்டுக் கொண்டு வந்தார். பட்டன்களை சரி செய்து கொள்ளச் சொன்னேன். "நான் பட்டன்கள் சரியாகவும், பூராவும் போட்டுக் கொண்டிருந்தால் அது செயற்கையாக இருக்கும். இயற்கையாக இருக்காது" என்றார் சிரித்துக் கொண்டே. உனக்குப் பத்திரிகையிலிருந்து சரியாகப்பணம் வருகிறதா? எத்தனை பேர் தமிழ் நாட்டிலிருந்து அந்தப் பத்திரிகைகளில் வேலை பார்க்கிறீர்கள்? என்று விசாரித்தார். தனது சட்டை சரியாக இருக்கிறதா என்பதை விட பிறருக்கு கிடைக்க வேண்டியது ஒழுங்காகக் கிடைக்கிறதா என்பதில்தான் அக்கரை அதிகம் காட்டுவார் அண்ணா.

"இம்மத்" பத்திரிகையின் ஆசிரியர் லால் அவர்கள் அண்ணாவை பேட்டி காண வந்திருந்தார். பேட்டி முடிந்ததும் அண்ணா அவர்கள், அருகில் இருந்த என்னை அந்த ஆசிரியருக்கு அறிமுகப்படுத்தி "என்னுடைய படங்கள் இவரிடம் நிறைய இருக்கிறது. வேண்டியதை வாங்கிக் கொள்ளுங்கள்" என்றார். அண்ணா மிகவும் உயர்ந்த இடத்தில் தான் இருந்தார். ஆனால் அவர் உள்ளம் கீழேயுள்ள சாமான்யர்களின் அருகில் தான் இருந்தது என்பதற்கு இது ஒரு உதாரணம்.

King of Tamilnad என்னும் தலைப்பில் அட்டையில் வெளியிட அண்ணாவின் படம் கேட்டார் திரு லால். அண்ணாவின் படம் ஒன்று அனுப்பியிருந்தேன். தலைப்பிற்குத் தகுந்தாற் போல் படமும் கம்பீரமாக இருப்பதாக பலர் நேரிலும், தபால் மூலமும்தெரியப்படுத்திஇருந்தார்கள்.

அண்ணாவை அவர்பிறந்த தினத்தன்று விடியற்காலையிலேயே போய் சந்தித்து விடுவேன். அண்ணா அவர்கள் முதல்வராகப் பொறுப் பேற்றுக் கொண்டதும்அந்த ஆண்டில் 59-வது பிறந்த தினம் வந்தது. அண்ணா அவர்களின் தாயாரை படமெடுத்து படத்தின் கீழ் "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் — தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டாய் தாய்" என்ற குறள் வரியை எழுதி அப்புகைப்படத்தை அண்ணா அவர்களுக்கு பிறந்த தினப் பரிசாக அளித்தேன். புன்முறுவலோடுஎன்னுடைய சிறிய அன்பளிப்பைப் பெற்



தான் எடுத்த அண்ணாவின் படத்தை அண்ணா அவர்களிடம் தந்து மகிழ்ச்சி தெரிவிக்கிறார் சுந்தரம்.

றுக் கொண்டு சிறிது நேரப் படத்தைப்பார்த்தார். பிறகு 'எப் பொழுது இந்தப் படத்தைஎடுத்தாய்' என்றார்.

''நேற்று இரவு காஞ்சி சென்று எடுத்து வந்து இரவே பிரிண்ட் செய்து கண்ணாடி போட்டு இப் பொழுதுகொண்டு வந்தேன்'' என்றேன். அருகில் இருந்த உதவியாளரை அழைத்து அவரிடம் படத்தைக் கொடுத்து தனது தனி அறையில் அந்தப் படத்தை வைக்கும்படி சொன்னார்கள்.

முந்திய ஆண்டுகளை விட அந்த ஆண்டு கூட்டம் மிக அதிகமாக வந்தது. மதியம் சாப்பாட்டு நேரத்தில் கூட் டம் சிறிது குறைந்ததும், அருகிலிருந்த என்னிடம், ''பார்க்காத முகத்தையெல் லாம்பார்க்கிறேன்.போடாத கரமெல்லாம் மாலை போடு கிறது,'' என்றார். எந்த நேரத்திலும் எதையும் உடன் அடையாளம் கண்டு கொள்ளுகிறவர் அண்ணா. புகழ்ச்சி என்ற திரையைக் கொண்டு, அண்ணாவின் அறிவுக் கண்ணை மறைத்து விட்டோம். தங்கள் உள் எண்ணத்தை அவர் அறிய மாட்டார்,'' என்று எவ ரும் நினைக்க முடியாது. என்பதை இதுபோன்ற பல நிகழ்ச்சிகள் எனக்கு உணர்த் தியிருக்கிறது.

'முரசொலி' வெளியிட்ட அண்ணா 60—வது பிறந்த தின மலருக்கு அண்ணா அவர் களைப் படம் பிடிக்கச் சென்ற நிகழ்ச்சியை சகோ தரர் தினகரன் அவர்கள் அண்ணா 60—வதுஆண்டு மல ரில் விரிவாகஎழுதியிருந்தார் கள். அண்ணா அவர்கள் தன் உடல் வலியையும் பொருட் படுத்தாது சுமார் இரண்டே முக்கால் மணி நேரம் எங்களோடு பட மெடுக்க ஒத்துழைத்தார்கள். முடிக்குமுன்பு, 'போதுமா?' என்றுபுமுறுவல் செய்தார். முகத்தில் சோர்வுகாணப்பட் டது. நான் கடைசியாக அண்ணா அவர்களை பிரத்தி யேகமாகபடம்எடுத்தது அது தான் கடைசி முறை.நான் முதலில் தனியாக அவரைப் படம் எடுக்கும்போது கழ கத்தின் தலைவர் அண்ணா. கடைசியாக தனியாக எடுக் கும்போது தமிழ் நாட்டின் முதல்வர் மாண்பு மிகு அண்ணா. படம் எடுத்து முடித்ததும், ''போதுமா?'' தனக்கே உரிய புன்னகை. இடைக் காலத்தில் அவர் புகழ் ஓங்கிற்று. அந்தஸ்து கூடிற்று. ஆனால் அவர் அப்படியே இருந்தார்.

அண்ணா அவர்கள்சிகிச்சைக் காக அமெரிக்கா செல் லும்போது படம் எடுத்துத் தரும்படி பலர் கேட்டும் நான் படம் எடுக்கச் செல்ல வில்லை. அவர் திரும்பி வந்ததும் படம் எடுப்பது என்ற உறுதியோடு இருந் தேன்.

அண்ணா அவர்கள் சிகிச் சைப் பெற்று வந்ததும் நிறையப் படங்கள் எடுத் தேன். ''தமிழ்நாடு''பெயர் மாற்ற விழாவில் அண்ணா பேசியதை இரண்டு மூன்று படங்கள் எடுத்து விட்டு, மற்ற புகைப்படக்காரர்கள் போய் விட்டார்கள். நான் அண்ணா பேச ஆரம்பித்த திலிருந்து முடிக்கும்வரை 40 படங்களுக்கு மேல் எடுத்தேன். அதனை 'ஆனந்த விகடன்' அழகாக வெளி யிட்டது.

அண்ணா அவர்கள் அமெ ரிக்காவிலிருந்து தமிழ்நாடு திரும்பியதும், வெளியூர் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு சென்னை வந்த பெரியார் அவர்கள் அண் ணாவை நேரில் காண விரும் பினார்கள். நான் நுங்கம் பாக்கம் சென்று அண்ணா இருப்பதை அறிந்து போன் செய்தேன். சிறிது நேரத் தில் பெரியார் அவர்கள் 'விடுதலை' ஆசிரியர் வீர மணி அவர்களோடுஅண்ணா இல்லத்திற்கு வந்து விட் டார். பெரியார் வந்திருப் பதை அறிந்ததும், மாடி யிலிருந்த அண்ணா அவர் கள் இரு ஆப்பிள் பழங் களுடன் கீழே வந்து சிரித்த படி பழங்களை பெரியார் கரங்களில் வைத்தார்.

பெரியார் அவர்கள் பழங் களை அருகிலிருந்தவர்களி டம் கொடுத்து விட்டு, அண்ணா அவர்களின் உடல் நலத்தை விசாரித்துக் கொண்டே தன் நடுங்கும் கரங்களால் அண்ணாவின் கன்னங்களை வருடினார். உடம்பைத் தடவிக் கொடுத்தபடி அண்ணா வின் கரங்களை வாஞ்சை யோடு பற்றிக் கொண் டார். பெரியார் அவர்களை தந்தையென்று, அண்ணா அழைப்பார்கள். தந்தையின் அன்பு, தாயின்பாசம் இரண் டையும் பெரியாரிடத்திலும், தாய் தந்தை இருவரின் பாசப் பிடியில் சிக்கியிருக் கும் மகனின் நிலையில் அண் ணாவையும் கண்டேன். இன் றும் அந்த நினைவு என் உள்ளத்தில் பசுமையாக இருக்கிறது.

அண்ணா அவர்களுக்குமறு முறை அறுவைச் சிகிச் சைக்கு முன்பு நுங்கம்பாக் கம் இல்லத்திற்குச் சென் றிருந்தேன். அண்ணா அவர் களோடு பேசிக் கொண்டி ருந்த ஒருவர் அண்ணாவின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டவர். ''நீங்கள் நிகழ்ச்சிகளில் அதிகம்கலந்து கொள்கிறீர்களே?'' என்று வருத்தத்தோடு குறிப்பிட் டார்.

அதற்கு அண்ணா அவர் கள் மிகச் சோர்வோடு, ''நான் என்ன செய்வது? பொப்பிலி ராஜா அவர்களி டம் ஒரு சமயம் நான் வேலை பார்த்திருக்கிறேன். இன்று நான் முதலமைச்ச ராகஇருக்கிறேன். பொப்பிலி ராஜா அவர்கள் வீடு தேடி வந்து விழா ஒன் றுக்கு அழைக்கிறார். நான் எப்படி மறுப்பேன்? கலை வாணர் அவர்கள் இந்த நாட்டிற்குப் பழமையை விரட்ட நகைச்சுவை மூலம் எவ்வளவோ செய்திருக்கி றார். என் மீது அவர் பூண்டிருந்த அன்பு எவ்வ ளவு? அவர் சிலை திறப்ப தற்கு நான் போகாமல் இருக்கலாமா?'' இந்தக் கேள்விக்கு அந்த நண்ப ரால் பதில் சொல்ல முடிய வில்லை. ''என்நன்றி கொன் றார்க்கும் உய்வுண்டாம் — உய்வில்லை, செய் நன்றி கொன்ற மகற்கு'' என்ற குறளுக்கு இலக்கணமாகத் தோன்றினார் அண்ணா.

என் புகைப்பட வாழ் வில் எந்த நிகழ்ச்சிக்குப்பட மெடுக்கச் சென்றாலும்குறை வில்லாமல் படங்கள்எடுத்து விட்டேன் என்ற திருப்தி யோடு வந்திருக்கிறேன். ஆனால் அண்ணா அவர்கள் மறைந்ததும், ராஜாஜி ஹாலில் வைக்கப் பட்டி ருந்த அவரது உடலுக்கு அருகில் நிற்கிறேன். காமி ராவைச் சரி செய்கிறேன். என்னோடும் என் புகைப்படக் கருவியோடும் என்றும் தவ றாது ஒத்துழைத்த கண் களும்கரங்களும்அப்போதுஒத் துழைக்க மறுத்து விட்டன.

அண்ணாவை என் காமி ராவில் பல கோணங்களில் கண்டிருக்கிறேன். நினைத்த விதங்களில் கண்டிருக்கி றேன். அதை அப்படியே என் காமிரா படமெடுத்து விடும். ஆனால் அன்று.... என் கண்களில் நீர்த்திரை! கரங்களில் நடுக்கம். பட மெடுத்து முடித்ததும், 'போதுமா' என்று கேட்டு புன்முறுவல் செய்வாரே அண்ணா. அந்தச் சொல் லும், அந்த முறுவலும் இனி இல்லை என்று தெரிந்து தான் என் காமிரா பட மெடுக்க மறுத்து விட் டதோ?

✿

# காந்தி - நேரு ஆகியோருக்கு இணையானவர் அண்ணா!

சுமார் இருபத்து மூன்று வருடங்களாக நான் புகைப் படமெடுத்து வருகிறேன். டெல்லி போன்ற இந்தியா வின் முக்கியமான அனைத்து நகரங்களிலும் பல்வேறு விழாக்களில் பல தலைவர் களை நான் புகைப்பட மெடுத்திருக்கிறேன்.

பண்டித ஜவகர்லால் நேரு அவர்களை, அவர் சாதாரணமாக இருக்கும் எந்த நிலையில் படம் எடுத் தாலும், படம் மிகவும் பிரமாதமாக — காண்பதற் குக் கவர்ச்சியாக அமை யும்.

புகைப்படம் எடுப்பதற் கென்றே 'போஸ்' கொடுத் தால் கூட படத்தில் அழ காக விழுவது சில நேரங் களில் முடியாது. ஆனால் நேரு அவர்களை எந்த நிலை யில், எந்த அவசரத்தில் படம் எடுத்தாலும் படம் பிரமாதமாக விழுந்துவிடும்!

அதேபோல்தான் அண்ணா அவர்களும். அண்ணா அவர் களை எந்த நிலையில்—எந் தச் சூழ்நிலையில் புகைப்பட மெடுத்தாலும் படம் அழ காக விழும்.

இந்தியாவிலேயே உள்ள தலைவர்களில் நேருவிடமும், அண்ணா அவர்களிடமும் தான் இந்த 'அமைப்பு' இருந்தது என்பது என் கருத்து.

அண்ணா அவர்களை நான் எத்தனையோ படங்கள்எடுத் திருக்கிறேன். அவற்றில் எனக்கு மிகவும் பிடித்த படங்கள் இரண்டு.

ஒன்று: அண்ணா அவர் கள் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதும் கவர்ன்மெண்ட் ஹவுசில் பேசியபோது எடுத்த படம்.

இன்னொன்று: அண்ணா அவர்கள் அமெரிக்காபோய் திரும்பி வந்தவுடன் எடுத்த படம்! ஆக, இந்த இரண்டு படங்களுமதான நான் எடுத்த அண்ணா படங் களில் மிகவும் எனக்குப் பிடித்த படங்கள்.

அண்ணா கடைசியாகக் கலந்து கொண்ட என்.எஸ். கே. சிலை திறப்பு விழாவை யும், நான் படம் எடுத்



'ஹிண்டு' நாளிதழின் புகைப்பட நிபுணர் 'சாரி'

தேன். அந்தப் படத்தில் அண்ணாவின் முகத்தில் பூரிப்பு இல்லை — வாடிப் போயிருந்தது! இதை அப் போது நான் உணர்ந் தேன். அந்தப் புகைப்படம் இந்து பத்திரிகையில் முதல் பக்கத்தில் வந்தது.

அடையாறு மருத்துவ மனையில் அண்ணா அனு மதிக்கப்பட்டதுமுதல் இர வும் பகலும் அங்கேயே இருந்து ஓடியாடிப் படம் எடுத்தேன். அந்தச் சமயத் தில் இந்து பத்திரிகையில் வெளி வந்த அத்தனை படங்களும் நான் எடுத்தது தான்.

ராஜாஜி மண்ட பத்தில் அண்ணாவின் புனித உடல் வைக் கப்பட்டிருந்த இடத் திலும் சரி, இறுதி ஊர்வலம் வந்த போதும் சரி, ஓடி யாடிப் படம் எடுத தேன்.

மாடிகளிலும், மரங்களிலும் ஏறி நின்று படம் எடுத் தேன். அப்படி எடுத்த படங்களைக் கழுவிப் பார்த்த போது எனக்கே ஆச் சரியமாக இருந்தது. இந்தப் படங்களை யெல்லாம் நாமா எடுத்தோம் என்று என்னையே கேட்டுக் கொண் டேன்!

அப்படியொரு சூழ்நிலை யில் அதே போல இனி என்னால் படம் பிடிக்க முடியாது! ஏதோ ஒரு உணர்ச்சியில்தான் நான் அந்தப் படங்களை அவ்வ ளவு பரபரப்புக்கிடையே படம் எடுத்திருக்கிறேன் என்பதை உணர்கிறேன்.

அண்ணாஅவர்கள்மறைந்த போது கூடிய கூட்டத் தைச் சென்னை நகரம் எப்படிச் சமாளித்தது என் பது இன்னும் எனக்குத் தெரியவில்லை!

அண்ணா அவர்கள் இந்தி யாவிலேயே மிகப் பெரிய அரசியல்வாதியாக விளங்கி னார். பண்டித நேருவைப் போல கட்சியையும், ஆட்சி யையும் திறம்பட நடத்தி னார். அவருடைய இழப்பு இந்தியாவிற்கு மிகப்பெரிய இழப்பு என்பதில் துளியும் சந்தேகமில்லை.

அண்ணல் காந்தியார் அரும்பாடு பட்டு இந்தியா வுக்குச் சுதந்திரம் வாங்கித் தந்துவிட்டு மறைந்தார்.

அதுபோல, அண்ணா அவர்களும் மிகவும் கஷ்டப் பட்டு தமிழ் நாட்டில் மக்களுக்கு நன்மை புரியும் கழக அரசை அமைத்து விட்டு மறைந்து விட்டார்.

★



அறிஞர் அண்ணா
பிறந்ததின
விழாவில் நாங்களும்
பங்கு கொள்கின்றோம் !

சுந்தரம்
இண்டஸ்ட்ரீஸ்
பிரைவேட் லிமிடெட்.,
37, மவுண்ட் ரோடு
சென்னை -6.

தீவிர
சாகுபடிககு
TANSI
விவசாயக் கருவிகள்



• தர மிக்கது
• உறுதியானது
• நீடித்து உழைக்கவலலது







விவரங்களுக்கு அணுகவும்
நிருவாக இயக்குனர்
தமிழ்நாடு
சிறுதொழில் நிறுவனம்
(ஒரு தமிழ் நாடு அரசின் நிறுவனம்)
35/2, உட்ஸ் ரோடு,
சென்னை-2



# சாமான்யர்களிடத்திலும் அன்பு காட்டிய மாமேதை அண்ணா!

நான் பேராசிரியர் மா. கி. தசரதன் அவர்களின் மூலமாக, அறிஞர் அண்ணா அவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப் பட்டேன். திராவிட நாடு இதழுக்கும் ஓவியராக அமர்த்தப் பட்டேன்.

முதன் முதலில் என்னை, அலுவலகத்தில் தங்க வைப்பதா, அல்லது வீட்டிலேயே இருக்க வைப்பதா என்ற கேள்வி பிறந்தது நிர்வாகி அவர்களுக்கு. காரணம், அண்ணாவின் அருகிலேயே ஓவியர் இருந்தால் தான் மிகவும் நல்லது என்று கருதியே வீட்டிலே தங்க எனக்கு ஏற்பாடு செய்யப்பட்டது!

அண்ணா தரை விரிப்பில் கீழேதான் உட்காருவார். ஆதலால் நீயும் கீழேதான் அமர்ந்து ஓவியம் தீட்ட வேண்டும் என்றனர் நிர்வாகத்தினர்.

ஐயா, எனக்கு டேபிள்-சேர், இருந்தால்தான் வேலை ஓடும் என்று உள்ளதைக் கூறி விட்டேன். வேறு வழியில்லாமல், சம்மந்தப் பட்ட ஈழத்து அடிகள் அண்ணாவின் அறைக்குள்ளே எனக்கு மேஜை, நாற்காலி கொடுத்து அமரச் செய்தார். அண்ணா அவர்கள் வந்ததும் மனதுக்குள் எனக்கொரு அச்சம். அண்ணா அவர்கள் கீழே தரைவிரிப்பில் உட்கார்ந்து எழுத ஆரம்பித்து விட்டார்.

அண்ணா கீழே அமர்ந்திருக்கிறாரே, நாம் நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறோமே என்று நானும் சாதனங்களை எடுத்துக் கொண்டு கீழே இறங்கிய போது — "எல்லாம் வசதியாக இருக்கிறதல்லவா? உனக்கு இந்தச் சவுகரியம் போதுமா? இல்லை இன்னும் சற்று வசதி செய்து தரச் சொல்லவா?" என்றாரே பார்க்கலாம். பிறகு என்னை அவர் கீழே உட்காரசம்மதிக்கவேயில்லை. "அதுதான் உன் வேலைக்கு சௌகரியம். சும்மா உட்கார்ந்து எழுது," என்றார். அந்தப் பெருந் தன்மையை இன்றைக்கு நினைத்தாலும் என் உடம்பு புல்லரிக்கிறது.

அண்ணா என் அறைக்குள் நுழையும்போதுஎழுந்து மரியாதை செய்ய நினைப்பேன். அமர்ந்து பணியை கவனி என்று கை ஜாடை காட்டுவார். மலருக்கான ஓவியங்கள் எப்படி அமைத்தால் நல்லாயிருக்கும் என்று அவரே நேரில் வந்து, ஆலோசனை கூறுவார். அபிப்பிராயங்களும் கேட்பார். சில நேரங்களில் அண்ணா வந்து நம்மிடம் யோசனை கேட்கின்றாரே என்று சங்கோஜப்படுவது உண்டு.

நான் சொல்லும் மிகச் சாதாரண எண்ணங்களைக் கூட அவர் பலர் மத்தியில் பாராட்டுவார். அந்தநினைவை என்னால் என்றைக்கும் மறக்க முடியவில்லை.. அவர் எழுதிய — கதை கட்டுரை கவிதைகளை நண்பர்களுக்கு மத்தியில் படித்துக் காட்டி, அதிலே திருத்தமும் செய்திடும்படி அனுமதிப்பார். பாரதிதாசன் — கவிஞர் சுரதாவின் கவிதைகளை சுவைத்துப் படிப்பார் அண்ணா!

நான் அநேக பத்திரிகைகளில் ஓவியராகப் பணி



ஓவியர் ஜெயா

யாற்றி யுள்ளேன். ஆனால் அண்ணாவைப் போன்றுஅன்புடன் பழகும் யாரையும் நான் கண்டதில்லை. தெய்வ குணங்களுக்கு ஈடானவர் என்பதைப் பழகப் பழக புரிந்து கொண்டேன்.

ஏனைய பத்திரிகை ஆசிரியர்கள் வெறுமனே, வாய் மூலம் 'ஐடியா' சொல்லி ஓவியரைத் திணற வைப்பார்கள். ஆனால் அண்ணா அதற்கு முற்றிலும் நேர் மாறானவர். பேனாவினால்விளக்கப் படங்களுடன் எழுத்தும்—ஓவியமும் வரைந்து காண்பித்து ஓவியருக்குப் புரியும் படியும் — தவறு நேராவண்ணமும் அருகிலிருந்து பார்த்துக் கொள்வார்.

ஓவியம் அவருக்குப் பிடித்து விட்டது என்றால், மவுனமாகவே இருந்து விடுவார். திருத்தம் ஏதாவது செய்வதாய் இருப்பின், மாற்ற முடியுமா? என்று அமைதியாக ஒரு கேள்வியைப் போடுவார். அவ்வளவுதான்.

அண்ணாவே ஓவியம் வரைந்து 'காஞ்சி' இதழில் வெளியிடுவார். அதுபோது 'பென்சில் ஸ்கெட்ச்' இல்லாமலேயே தூரிகையை அனாயாசமாக எடுத்து வண்ணத்தில் தோய்த்து வெகு நுணுக்கமாக ஓவியம் தீட்டும் லாவகத்தைக்காணும் போது எனக்கு ஆச்சரியமாக இருந்ததுண்டு — ஓவியர்கள் பாடம் கேட்கும் அளவுக்கு அண்ணா ஸ்கெட்ச் இல்லாமல் வரைகிறாரே என்று 'ஆர்ட்டிஸ்டிக் மைண்ட்' அண்ணாவுக்குத் தெளிவாக உண்டு என்பதை அனுபவ பூர்வமாக கண்டு மகிழ்ந்தேன்.

ஆங்கிலப் பத்திரிகை இன்னும் பிறமொழிப் பத்திரிகைகளிலிருந்து எனக்காக 'ஐடியா' சேகரித்து வைப்பதும், பக்கங்களுக்கு மத்தியில் அடையாளப் பேப்பர் வைத்து, அந்த ஓவியம் மாதிரி இருக்க வேண்டுமென்றும், அவரே சில படங்களை வெட்டி ஒட்டி 'டச்' பண்ணி பாதிக்கு மேல் என் வேலையைக் குறைத்து விடுவார்.

பரிமளம் — இளங்கோவன் திருமணத்திற்காக திராவிட நாடு கட்டிட, மாடியில் 'பேனர்கள்' வரைந்துக் கொண்டிருந்தேன். அப்போதும் அண்ணா அவர்கள் என்னுடன் இருந்து அதை முடிக்கும் வரைக்கும் ஆலோசனை கூறிக் கொண்டே இருந்தார்கள். வண்ணக் கலவைகள் இப்படி இருத்தல் வேண்டும் என்றும், சமயத்தில் அண்ணாவே அவருக்குத் தோன்றிய கற்பனையை, ஓவியம் ஆக்கியும் காண்பிக்கத் தவற மாட்டார். என்னைப்போன்ற சாமான்யர்கள் மத்தியில் அண்ணா அன்புடன் பழகினார். அந்த அன்புக்கு இன்னும் நான் ஏங்குகிறேன்.

"ஏற்றமிகு பெரியீர் ஏற்பீர் எம் வணக்கம்" என்பது ஓர் பேனர். எழுத்தை நான் எழுத, கூப்பிய கரங்களை அண்ணாவே ஓவியமாக வரைந்தார். நான் வரைந்த கைகள் அவ்வளவாக சரியில்லை என்று நானே திருப்தியில்லாது தவித்த நேரத்தில்—அண்ணா அவர்கள் தூரிகையைஎடுத்துக் கூப்பும் கரங்களை அருமையாக வரைந்து உதவி செய்ததோடு மட்டுமின்றி, கீழே நான் வரைந்தது போல 'ஜெயா' என்று என் பெயரைப் போட்டு என் கண்களில் நீர் தழும்பச் செய்துவிட்டார்.

சிறிது நாட்கள் நான் அண்ணாவின் இல்லத்திலேயே உணவு உண்டு வந்தேன். அதுபோது, ஆயிரம் பிரச்னைகளுக்கு மத்தியிலும் என்னை ஒரு பொருட்டாகக் கருதி, குடும்பப் பாசத்தோடு 'ஆர்ட்டிஸ்ட்' சாப்பிட்டாரா? என்று சமையல் காரரைக் கேட்டுத்தெரிந்து கொள்வார் அண்ணா. ஒரு நாள் நான் சாப்பிடாமல் இருப்பதறிந்து அவர் சொந்தச் செலவுக்கு வைத்திருந்த பத்து ரூபாய் நோட்டை அப்படியே எடுத்துக் கொடுத்து, போய் ஓட்டலில் சாப்பிட்டு விட்டு வா, அப்புறம் வேலையைத் தொடங்கலாம் என்று ஆதுரத்துடன் கூறினார்.

அண்ணாவை நேரில்பார்த்துச் செல்ல வேண்டும் என்று நூற்றுக் கணக்கான பேர்கள் காஞ்சிக்குப் படையெடுத்து வருவோருக்கெல்லாம், 'அண்ணாவுக்கு ஓய்வில்லை' என்றும், 'அண்ணா தூங்குகிறார்' என்றும் ஆறுதல் சொல்லி அனுப்பி வைப்பார்கள். வீட்டில்உள்ளவர்கள். நம்மைக் காண வந்த அன்புள்ளங் கொண்டவர்கள் வெறுமனே திரும்பக் கூடாதே என்ற நோக்கத்தோடு தடையையும் மீறி, அனைவரையும் அருகில் அழைத்துப் பேசி மகிழ்ந்து வந்தவர்கள்மனம் ஆறுதல் பெற்ற பின்பு அனுப்பிவைப்பார். ஒரு சமயம், காண வந்த கூட்டத்திலிருக்கும் சிறுவர்களைத் தட்டிக் கொடுத்து ஒவ்வொருவருடைய பெயர்களையும் கேட்டார். ஏழெட்டு சிறுவர்கள், 'அண்ணாதுரை— அண்ணாதுரை' என்றே சொன்னார்கள். கருணாநிதி, நெடுஞ்செழியன், என்று இரண்டு சிறுவர்கள் பெயரைச் சொன்னார்கள், கடைசியாக ஒரு பையனின் பெயரைக் கேட்டார். "காமராஜ்" என்று குறிப்பிட்டான். அப்போது அவனை அருகில் அழைத்து முதுகில் தட்டிக் கொடுத்து, சபாஷ் "காமராசரைப் போன்று நீயும் வா!" என்றார். அந்தப் பெருந் தன்மையில் கடுகளவாவது இன்று காமராசருக்கு இருக்கிறதா?

★

# கீழ்வெண்மணிச் சம்பவமும் அண்ணாவின் குழந்தை உள்ளமும்!

தினத்தந்தி புகைப்படக் காரர் விஜயகுமார் மிகக் குறைந்த கால அளவிலேயே அண்ணாவுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புப் பெற்றவர். இவருக்கிருந்த இந்தக் குறைந்த காலத்தில் அண்ணாவுடன் நெருக்கமாகத் தொடர்புகொள்ள இருந்த முக்கிய வாய்ப்பு—இவரே நிருபர் — இவரே புகைப் படக்காரர்.

"அண்ணா அவர்களை நான் ஆழமாகக் கூர்ந்து கவனித்து விமர்சிக்கும் அளவுக்கு, குறைந்த காலத் தொடர்பு கொண்டவன்என் பது மட்டுமல்ல—அந்த அறிவு மகாசமுத்திரனின் ஆழத்தை அறிந்து கொள்ளுமளவுக்கு ஆற்றலும் அற்றவன் என்பதும் ஒன்று." என்று மெத்த அடக்கத் தோடும் கூச்ச உணர்வோடும் கூறுகிறார் நண்பர் விஜயகுமார்.

"நான் அண்ணா அவர்களுடன் தொடர்பு கொண்டது மூன்று ஆண்டுகள் தான்.—இந்த மூன்று ஆண்டுகளில் அண்ணா என் உள்ளத்தைக் கவர்ந்ததுபோன்று வேறு எந்தத் தலைவரும் கவரவில்லை.

"பத்திரிகை நிருபன் என்பவன் ஒரு கட்சிக்கு ஆட்படாமல், பேச்சுச் சாதுர்யங்களுக்கு மயங்காமல், அரசியல் தலைவர்களின் ராஜ



'தினத்தந்தி' நிருபர் விஜயகுமார்

தந்திரங்களுக்கு இரையாகி விடாமல், உணர்ச்சி வயப்படாமல், நிதானத்தோடு செயல்பட வேண்டும்-பேதமற்ற கண்ணோட்டம் வேண்டும். இந்த நிலையிலிருந்து ஓரணுவும் பிசகாமல்தான் நான் அண்ணா அவர்களைக் கவனித்து வந்தேன். இப்படி எந்தவிதப் பந்த பாசத்திலும் பற்றுக் கொள்ளாமல் நேர்வழிக் கணக்கிலேயே அண்ணா அவர்கள் என் உள்ளத்தைக் கவர்ந்து விட்டார்கள்— நான் கட்சிக் காரனாக இருந்திருந்தால் அவர் மீது ஏற்பட்ட பற்று வெறியாக மாறியிருக்குமோ என்னவோ?"

விஜயகுமார் இப்படிக் கூறிவிட்டு விழியை அகலத் திறந்து கொண்டு சொன்னார்: "உண்மைதான்! அண்ணா அவர்களின் மனிதத் தன்மை பல நேரங்களில் என்னை அப்படி உலுக்கி எடுத்துவிட்டதுண்டு

"அவருடைய பெருந் தன்மைக்கும்—அரசியல் தலைவர்களுக்கு அப்பாற்பட்ட மனிதத் தன்மைக்கும் அண்ணா அவர்களிடம் நான் கண்ட ஒரு சம்பவம் போதும். கீழ்வெண்மணிக் கிராமத்தில் குடிசைக்குத் தீ வைக்கப்பட்டு ஒரே இடத்தில் பெண்களும், ஆண்களும், குழந்தைகளுமாக நாற்பதுக்கு மேற்பட்டோர் தீயில் வெந்து கருகிவிட்டனர். இந்தச் செய்தியை முதல்வர் என்ற முறையில் பத்திரிகை நிருபர்களிடம் கூறுகிறார் அண்ணா.

"ஒரு முதல்வருடைய வேலை என்ன? என்ன என்பதைவிட இதுவரை எப்படி நடைபெற்று வந்திருக்கிறது? நான் அறிந்தவரை கேள்விப்பட்டவரை — நாட்டில் என்ன கோரச் சம்பவங்கள் நடைபெற்றாலும் எந்தவிதச் சலனமும் இன்றி அறுவைச் சிகிச்சை செய்யும் டாக்டர்களைப் போன்று —நடைபெற்ற சம்பவங்

களைச் செய்தியாக மட்டும் கருதி பத்திரிகையாளர்களிடம் கூறப்பட்டிருக்கிறது.

ஆனால் அண்ணா அவர்கள் இதற்கு நேர்மாறாக இருந்தார்கள். வெண்மணிச் சம்பவத்தை அவர்கள் விளக்கியபோது அவர்கள் கண்களிலிருந்து கண்ணீர் கொட்டியது. கைக்குட்டையால் வாயைப் பொத்திக்கொண்டு நாற்பது பேர் கருகியிருக்கிறார்கள் என்று சொன்னபோது விம்மித் தேம்பிவிட்டார்கள். அதற்குமேல்அந்த நிகழ்ச்சியை அவர்களால் கூற முடியவில்லை. அருகில் கலங்கிய கண்களோடிருந்த கலைஞரிடம் மீதியைக் கூறும்படி சொல்லிவிட்டுப் போய் விட்டார். அவருடைய மனிதாபிமான உள்ளத்துக்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்'' என்று கேள்விக் குறிபோட்டு நிறுத்திய விஜயகுமார் மீண்டும் பல சம்பவங்களைக் கூறத் தொடங்கினார்.

''அண்ணா முதலமைச்சராக இருந்தபோது தாம்பரம்பொதுக்கூட்டம்ஒன்றில் பேசிமுடித்துமேடையிலிருந்து இறங்கப்போகும் சமயம், ஒரு குழந்தையைத் தூக்கிக் கொண்டு கணவனும் மனைவியுமாக வந்த இருவர் குழந்தையை அண்ணாவிடம் கொடுத்து பெயர் சூட்டச் சொல்வதற்காகத்தவியாய்த் தவிக்கின்றனர். போலீஸ் வளையம் அவர்களை அண்ணாவின் அருகில் நெருங்க முடியாமல் தடுத்துக் கொண்டிருந்தது. கழகத்தோழர் ஒருவர் ''அடுத்த கூட்டத்தில் பார்த்துக் கொள்ளலாம்!'' என்று கூறினார். இதைக் கவனித்த அண்ணா அவர்கள்—காவலர் ஒருவர் மூலம் அந்தத் தம்பதிகளை மேடைக்கு அழைத்து, குழந்தையை வாங்கி முத்தமிட்டுப் பெயர் சூட்டினார். அந்த அவசரத்திலும் ஒரு புகைப்படக்காரர் இப்படியே ஒரு படம் எடுத்துக் கொள்ளலாமா என்று கேட்டார்—காவலர்கள்— செயலாளர்கள் அனைவரும் பறந்துகொண்டிருக்கின்றனர் அண்ணா அவர்கள் மட்டும் நிதானமாக குழந்தையின் சட்டையைச் சரிசெய்து தலைமுடியை ஒதுக்கிவிட்டு அந்தத் தம்பதிகளோடு படமெடுத்துக் கொண்டார்.

''அண்ணா தங்கள் குழந்தையைத் தூக்கி வைத்துப் படமெடுத்துக் கொண்டதும் — அடேயப்பா அந்தத் தம்பதிகளின் முகத்தில் மகிழ்ச்சியைப் பார்க்கவேண்டுமே—அப்போது லாட்டரிச் சீட்டு இல்லை என்றாலும் பத்து லட்ச ரூபாய் சிறப்புப் பரிசு பெற்ற ஆனந்தம் அவர்களுக்கு. அண்ணா மறைந்தபோது லட்சக்கணக்கான இதயங்கள் அழுது புலம்பினவே அதற்கு அண்ணாவின் இதுபோன்ற நடவடிக்கைகள்தான் காரணம்.

''ஒருமுறை செங்கற்பட்டுக்கு அருகில் உள்ள கிராமத்தில் அண்ணா அவர்களின் கூட்டம்; நானும் சென்றிருந்தேன். கூட்டம் பத்தரைக்கு மேல் முடிந்தது. நான் திரும்புவதற்கு பஸ் வசதி இல்லை. பத்திரிகைக்குச் செய்தி கொடுத்தாக வேண்டும் — என்ன செய்வது என்று தவித்துக் கொண்டிருக்கையில் — ''உங்களை போலீஸ் ஜீப்பில் ஏறிக் கொள்ளச் சொல்லுகிறார் அண்ணா'' என்று ஒருவர் கூறினார். நான் நிம்மதியடைந்தேன். அண்ணாவின் காரும், போலீஸ் ஜீப்பும் தாம்பரத்தில் வந்து நின்றது. போலீஸ்காரர் ஒருவர் இறங்கி, ''நீங்கள் இங்கேயே இறங்கி மின்சார ரயிலில் ஆபீஸ் போய்விடுங்கள்—அண்ணா காஞ்சிபுரம் போகிறார், உங்களுக்காகத் தான் இந்த வழியாக வந்து செல்லும்படி கூறினார்,'' என்றார். அண்ணா அவர்களின் பெருந்தன்மையைக் கண்டு எனக்கு உடம்பு சில்லிட்டுவிட்டது.

''எனக்கு நெருக்கமாக அண்ணா அறிமுகமில்லை.இருந்தும் ஒரு நிருபருக்காக அங்கிருந்தே காஞ்சி செல்ல வேண்டியஅண்ணா தாம்பரம் வரை வந்து திரும்பக் காஞ்சிபுரம் சென்றதை இன்றைக்கும் என்னால் மறக்க முடியவில்லை.

''அண்ணா அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து நான் அடையாறு மருத்துவ மனையில் இருந்து அவ்வப்போது அண்ணா அவர்களின் உடல் நிலை பற்றி பத்திரிகைக்குச் செய்தி அனுப்பிக் கொண்டிருந்தேன்.

''ஒருநாள் மாலை ஆங்கிலப் பதிரிகை நிருபர் ஒருவர் அண்ணா மறைந்து விட்டார் எனத் தவறான தகவல் தந்தபோது பெரும்பரபரப்பு ஏற்பட்டது—தவறான செய்தியால் விளைவுகள் — எதுவும் நேரா வண்ணம் ஐந்து நிமிடங்களில் நிறுத்தி வைத்தார் அமைச்சர் மாதவன்.

''பத்திரிகை நிருபர்கள் அனைவரையும் அண்ணாஅவர்களின் அறைக்கு அழைத்துச் சென்று அண்ணா அவர்களைக் காட்டி ஏற்பட்ட அதிர்ச்சியைத்தீர்த்து வைத்தார் அமைச்சர் மாதவன்.

''அண்ணா அவர்கள் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட நேரத்தில் அவரைப் படம் எடுக்க எவ்வளவோ முயற்சித்தேன். முடியவில்லை. கடைசியாகஇரண்டு தினங்களுக்கு முன்பு பொய்யாகிப் போன செய்தி உண்மையாகவே நிகழ்ந்து விட்ட போது — ஆஸ்பத்திரியே சோகத்தில் மூழ்கியது — எனக்கோ வேதனை — குழப்பம் — ஆனால் பத்திரிகை நிருபன் நான் என் கடமையைச் செய்தாக வேண்டும்-பரபரப்புக் காட்டாமல் அந்தப் பணியில் ஈடுபட்டேன்.

''இப்போதாவது கடைசியாக அந்தத் திருமுகத்தை ஒரு படம் எடுத்து விட எண்ணி அதற்கான வாய்ப்பைத் தேடி அலைந்தேன். நான் எந்தப் பகுதியிலும் செல்ல அனுமதிக்கப்படவில்லை. எனக்கோ துடிப்பு அடங்கவில்லை. இந்த நேரம் பெரியார் அவர்கள் அண்ணா அண்ணா என்று அழுது கொண்டே வந்து சேர்ந்தார். பெரியாரை ஒரு சக்கர நாற்காலியில்வைத்து உள்ளே கொண்டு போனார்கள். அந்தச் சக்கர நாற்காலியை தள்ளியபடி நானும் அண்ணாவின் உடல் இருந்த அறைக்குள் சென்றேன்.



'தினத் தந்தி' நிருபர் விஜயகுமார் அடையாறு மருத்துவமனையில் இறுதியாக எடுத்த படம்.

அண்ணா அவர்களின் உடலை அப்போதுதான் ஸ்டெச்சரில் வைத்து வெளியே வேனுக்குக் கொண்டு வர முயற்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்த வேதனையிலும் என்னையறியாத வெறியில் அண்ணா அவர்களின் திரு உருவைக் கடைசியாகப் படம் எடுத்தேன்.

எத்தனையோ முறை நான் படம் எடுக்கும் போது என்னைப் பார்த்துச் சிரிக்கும் அண்ணா அவர்கள் அன்று மௌனமாக இருந்தார் — அந்த மௌனத்தின் நிரந்தரத்தை என் காமிரா கடைசியாக முடித்துக் கொண்டு விட்டது.

அண்ணா அறிஞர் மட்டுமல்ல — தலைவர் மட்டுமல்ல —உயர்ந்த மனிதாபிமானி — பெரிய உள்ளம் கொண்டவர். இதைத் தவிர வேறு எனக்குச் சொல்லத் தெரியவில்லை.

★

# கலைவாணர் சிலை திறப்பு விழாவில் அண்ணா காட்டிய அன்பு!



'மாலை முரசு' புகைப்படக்காரர் காதர்

அண்ணா கலந்து கொள்ளும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு படமெடுக்கும் வாய்ப்பினைப் பெற்றவர் 'மாலை முரசு' புகைப்படக்காரர் காதர். நீண்ட காலமாக மாலை முரசில் பணிபுரியும் இவர் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் விழாக்களுக்கும் சென்று படமெடுத்துள்ளார். இத்தனை ஆண்டு அனுபவத்தில் மற்ற தலைவர்களுக்கும் அண்ணா அவர்களுக்கும் உள்ள தனித் தன்மை—அவர் படமெடுத்த நேரங்களில் நடைபெற்ற நினைவில் நிற்கும்நிகழ்ச்சிகள் ஆகியவை பற்றிக் குறிப்பிட்டுக் கூறும்படி நாம் கேட்டபோது அவர் அளித்த பதில்கள் இவை.

''சட்ட எரிப்புப்போராட்டத்தின்போது அண்ணா அவர்களைமுன்கூட்டியேகைது செய்து விடுவார்கள் என அறிந்து அவரைக் கைது செய்யும்போது அந்த நிலையில் படம் எடுத்து வரும்படி அலுவலகத்தில் கூறினார்கள். அதற்காக காஞ்சிபுரத்தில் நான் புகைப்படக் கருவியைத் தயார் நிலையில் வைத்துக்கொண்டு ஒரு வாரம் காத்திருந்தேன். அண்ணா வீட்டை விட்டு எங்கு சென்றாலும் எங்கள் வேனின் பார்வைக்கு அவர்கள் தப்பி விட முடியாது. எப்படியும் படம் எடுத்து விடுவதுஎன்று அந்த அளவிற்கு நாங்கள் சுறுசுறுப்பாக இருந்தோம். அந்த ஒரு வாரத்தில் பெரும்பாலும் அண்ணாவீட்டிற்கு அருகில்உள்ளபெட்டிக் கடையில் கிடைக்கக் கூடிய பொருள்களை வாங்கி, வயிற்றை நிரப்பிக்கொண்டு விழிப்போடுகாத்திருந்தேன்.

நாங்கள் இவ்வளவு தீவிரமாகச் செயல் படுவதைப் பார்த்து அண்ணா அவர்கள் கூட, ''ஏன் வீணாகச் சிரமம் எடுத்துக் கொள்ளுகிறீர்கள் என்னை இங்கே கைது செய்ய மாட்டார்கள் — சென்னையில்தான் அரஸ்ட் பண்ணுவார்கள் நீங்கள் இங்கு காத்திருக்க வேண்டிய அவசியமில்லை'' என்று கூறினார்கள். நாங்கள் எங்கள் பணியில்வெற்றி பெறுவதற்காகக் காத்திருந்தோம்.

ஒவ்வொரு நாள் காலையும் நான் எழுந்தவுடன் அண்ணா இருக்கிறாரா என்ன செய்து கொண்டிருக்கிறார் என்று பார்த்து விட்டுத் தான் வெளியில் செல்லுவேன். ஒரு நாள் காலை பார்த்தேன். அண்ணா எழுதிக் கொண்டிருந்தார் — நான் சென்று பல் துலக்கி காப்பி அருந்திவிட்டு வந்தபோது அண்ணா அவர்களைக் காணவில்லை. வெளியில் ஒரு கார் நின்றது. ஏழெட்டு பேர் கூட்டமாக வேறு நின்றார்கள். எனக்கு ஒரே தவிப்பு. இத்தனை நாள் காத்திருந்து ஏமாந்து விட்டோமோஎன்று. உள்ளே எட்டிப் பார்த்தேன். அண்ணா அவர்கள் இல்லை. பிறகு விசாரித்தபோது அவர் கிணற்றடியில் குளித்துக் கொண்டிருக்கிறார் என்று செய்தி கிடைத்தது. வெளியூரிலிருந்து வந்தவர்கள் அவரைப் பார்ப்பதற்காகக் காத்திருந்தார்கள்!

அன்று மாலை அண்ணா வடாற்காடு மாவட்டத்திலுள்ள ஒரு கிராமத்திற்கு பொதுக் கூட்டத்திற்குச் சென்றார். நானும் அவர் கூடவே சென்றேன். அண்ணா கூட்டத்தில் பேசும்போதே குறிப்பிட்டார். ''நான் சட்டத்தை எரிக்கும்போது என்னைப் போலீசார் கைது செய்து எத்தனை மாதம் சிறையில் தள்ளுவார்களோ என்று நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் 'மாலை முரசு' புகைப்படக்காரரோ என்னைக் கைது செய்யும் அந்தக் காட்சியைப் படம் பிடித்து விடுவதற்காக ஒரு வார காலமாக நான் எங்கு போனாலும் சி.ஐ.டி. போல பின் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறார். என்னைக் கைது செய்ய வேண்டிய இடம் அரசாங்கத்துக்குத் தெரியும். இங்கெல்லாம் செய்ய மாட்டார்கள்,



சட்ட எரிப்புப் போராட்டத்தின்போது அமிஞ்சிக்கரைக்கு அருகில் போலீஸ் அதிகாரி அண்ணாவைக் கைது செய்தபோது காதர் எடுத்த படம்.

என்று கூறி விட்டேன். அப்படியும் அவர் விடுவதாக இல்லை. என்னை அரஸ்ட் பண்ணினால்தான் விடுவார் போலிருக்கிறது'' என்று கூறினார்.

பின்னர் அண்ணா அவர்கள் காஞ்சியிலிருந்து புறப்பட்டு சென்னை வரும்போது அமிஞ்சிக்கரைக்கு அருகே அவர் வந்த ஜீப் நிறுத்தப்பட்டது. போலீஸ் அதிகாரிகள் அவரைச் சூழ்ந்து நின்றார்கள். அந்த நேரம் நான் மின்னல் வேகத்தில் இறங்கி அருகில் சென்று படம் எடுப்பதற்காக ரோட்டைக் கடந்தபோது லாரி ஒன்று வேகமாக வந்ததையே நான் கவனிக்கவில்லை. திடீரென்று என் கையைப் பிடித்து அண்ணா இழுத்து நிறுத்தினார். இமைப் பொழுதில் அவர் அப்படிச் செய்திருக்கவில்லை என்றால் அந்த லாரியில் அடிபட்டு நான் இறந்திருப்பேன். அப்போது அண்ணா கேட்டார்: ''என்ன எதற்கும் துணிந்து விட்டாயா?'' அன்போடுகேட்ட அந்த வார்த்தை இன்னும் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

அவர் பத்திரிகைக்காரர்களின் நிலை அறிந்து எவ்வாறு ஒத்துழைத்தார் என்பதற்கும்—தாயிடம் எத்தனை பாசம் வைத்திருந்தார் என்பதற்கும் ஒரு சம்பவம்—அண்ணா பதவி ஏற்றதும் காஞ்சிபுரத்திற்குச் சென்று அன்னையின் காலில் வீழ்ந்து வணக்கம் செலுத்தினார். அந்தக் காட்சியை நான் படம் எடுத்தபோது என் காமிராவின் பிளாஷ் (மின்சார ஒளி) சரியாக வேலை செய்யவில்லை. அந்தக் காட்சி காமிராவில் பதியவில்லை. எனக்கு மன வருத்தம்—இரண்டு நிமிடங்கள் கழித்து என் நிலையை அண்ணா அவர்களிடம் பரிதாபமாகக் கூறி இன்னொரு முறை அது மாதிரி வணக்கம் செலுத்தும்படி கேட்டுக் கொண்டேன். அப்படிக்கேட்பதற்கு எனக்கு அச்சமாகத்தான் இருந்தது. என்றாலும் ஏதோ ஓர் ஆர்வத்தில் கேட்டு விட்டேன்.

என் நிலையை உணர்ந்த அண்ணா — மனம் கோணவில்லை. முகஞ்சுளிக்கவில்லை. மீண்டும் அன்னையின்காலில் வீழ்ந்து வணங்கினார். நான் அதைப் படம் பிடித்தேன் அப்போது அருகிலிருந்த அண்ணாவின் நண்பர் ஒருவர் ''இரண்டாவது முறையாகக் கும்பிட்டீர்களா?'' என்றுகேட்டார். ''அன்னையை வணங்குவதற்குகணக்கென்ன'' என்று புன்முறுவலுடன் கூறிய அண்ணா—பத்திரிகைக்காரருக்காக அவ்வாறு செய்தேன். இல்லையேல் அவர் மன வருத்தத்தோடு சென்றிருப்பார்'' என்றார். இவ்வாறு சின்ன விஷயத்தில் கூட அண்ணா அவர்கள் எல்லாரையும் திருப்தி படுத்தியதை நான் பலமுறை பார்த்திருக்கிறேன்.

''வேறு கட்சித் தலைவர்களாக இருந்திருந்தால் இரண்டாம் முறை அப்படிக் கேட்டுக் கொண்டதற்கு எரிந்து விழுந்திருப்பார்கள்'' என்று அனுபவத்தைக்கூறிய காதர் — அண்ணா அவர்களைக் கடைசியாகப் படம் எடுத்தது கலைவாணர் சிலைத் திறப்பு விழா நிகழ்ச்சியில்தானாம்.

கலைவாணர் சிலை திறப்பு விழா முடிந்து அண்ணா அவர்கள் காரில் ஏறப் புறப்பட்டபோது ஒருகிழவி அண்ணா அவர்களிடம் மனுக் கொடுக்க முயன்றார். அருகிலிருந்த போலீசார் அந்தக் கிழவியைத் தடுத்தார்கள் — அண்ணா அவர்கள் மிகவும் சோர்ந்திருந்தார்கள் — விழாவில் கூட அவர்களால் அதிகம் பேச முடியவில்லை. அருகிலிருந்த தலைவர்கள் அவரை விரைவாக அழைத்துச் செல்லத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையிலும் ஒரு ஏழை ஜீவனை போலீசார் தடுப்பதைக் கண்ட அண்ணா அவர்கள் அவரை விடும்படிகூடக் கூறவில்லை. தானே அந்த மூதாட்டியின் அருகில் வந்து அன்புடன் விசாரித்து மனுவை வாங்கிக் கொண்டு வணக்கம்செலுத்தி விடை பெற்றார்.

உடல் நிலை மோசமாகப் பாதிக்கப்பட்ட அந்தநேரத்திலும் அண்ணா, தான் ஏழைகளின் பிரதிநிதி என்பதை கடைசியாக நிரூபித்துக் காட்டினார்.

எனக்குள்ள அனுபவத்தில் அண்ணா அவர்களைப் போல் அடக்கத்தில்—எளிமையில் வேறொரு தலைவரை நான் கண்டதேயில்லை. இனிக் காண்பேன் என்ற நம்பிக்கையும் இல்லை. என்று சோர்வோடு கூறினார் காதர்.



## 'பட்ஜெட்டை' - படம் எடுத்தவர்!



அண்ணா கையில் தோல்பையை அணைத்தபடி நடந்துவரும் சிறப்புப் படம் வெளி வந்ததும் அந்தப் படம் அனைவர் மனத்தையும் கவர்ந்தது. உள்ளங்கள்தோறும் நிறைந்திருக்கும் அண்ணாவின் அந்தப் படம் இல்லங்கள் தோறும் இடம்பெற்றன.

அருமையாக அமைந்துள்ள அந்தப் படம் எங்கே கிடைக்கும்? அதை எடுத்தவர் யார்? என்ற கேள்வி எழுந்தபோது—அதனை எடுத்தவர் தமிழக அரசு புகைப்படப் பிரிவைச் சார்ந்த லட்சுமிபதி எனத் தெரிய வந்தது.

அண்ணாவைப் பலமுறை படமெடுத்தவர் என்ற முறையில் அவரைப் பார்த்து விவரம் கேட்டபோது—

சட்டமன்றத்தில் அண்ணா பட்ஜெட்டைத் தாக்கல் செய்யப் புறப்படும்போது ஒரு படம் எடுக்க விரும்பி அன்று காலை அண்ணாவின் அறைக்குவெளியே காத்திருந்தேன். அண்ணா உள்ளே பட்ஜெட்டைப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது என் கருத்தை அவரிடம் தெரிவித்தபோது இப்படியே எடுத்துக் கொள்ளுங்கள் போதும் என்றார். அந்த நிலையில் ஒருபடம் எடுத்து விட்டு பட்ஜெட் அடங்கிய பையோடு தாங்கள் அறையை விடு வெளியே வரும்போது படம் எடுத்தால் சிறப்பாக இருக்கும்' என்றேன். அண்ணா அதற்குச் சம்மதித்தார். படம் அருமையாக அமைந்துவிட்டது. நான் அண்ணா அவர்களை எத்தனையோ கோணங்களில் படம் எடுத்திருந்தாலும். பட்ஜெட் தாக்கல் செய்யும்போது எடுத்த படம்தான் எனக்குப்பிடித்தமான படம்,

அண்ணா மறைந்தபோது கடற்கரையில் அண்ணாவின் திருவுருவை சந்தனப் பெட்டியில் வைத்த காட்சியை நான்தான் படம் எடுத்தேன். அது என் நினைவில் நிற்கக்கூடிய முக்கியமான படம் என்று கூறிய லட்சுமிபதி, நான் அண்ணா அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெறாததால் அவரைப் பற்றிஎனக்கு அதிகம் சொல்லத் தெரியவில்லை என்றார்.



லட்சுமிபதி

எமது நல்வாழ்த்துக்கள்!

# யுனைடெட் இந்தியா ரோலர் பிளவர் மில்ஸ் பிரைவேட் லிமிடெட்.,

## "கோபுரம்" மார்க்கு மைதா மற்றும் சூஜி தயாரிப்பாளர்கள்

தொழில் நிலையம் மற்றும் விற்பனை நிலையம்,
நெ. 1-4, சூரிய நாராயண செட்டித் தெரு,
தண்டையார்பேட்டை, சென்னை-81.

தொலைபேசி: 52670, 52671, 52672. மற்றும் 52673 தந்தி: "MONARCH"

## நிலவள வங்கி என்றால் விவசாயக் கடன் உதவி எனப் பொருள்

### 40 ஆண்டுகளாக விவசாயிகளுக்கு கடன் வசதி அளித்து வந்திருக்கின்றன நில அடமான வங்கிகள்...

இவையே இன்று நிலவள வங்கிகளாக
மறுமலர்ச்சி அடைந்திருக்கின்றன —
அரசு ஆணைக்கு ஏற்ப

நம்நாடு விவசாயத்தில் தன்னிறைவு பெறுவதற்குப் பசுமைப் புரட்சியைப் பேணி, பல்வேறு திட்டங்களை நிலவள வங்கிகள் வகுத்துள்ளன. அவையாவன:

1. நிலங்களைப் பண்படுத்தல்;
2. புதிய கிணறுகளை வெட்டுதல், பழைய கிணறுகளை ஆழப்படுத்தி செப்பனிடுதல்;
3. மின்சார மோட்டார், ஆயில் இன்ஜின், பம்புசெட் அமைத்தல்;
4. புதிய டிராக்டர் வாங்க;
5. சொத்துக்களின் மதிப்பில் நேரடி நில அபிவிருத்திக்காக;
6. தென்னை, ரப்பர் வளர்ப்புக்காகவும், மேலும் அநேக திட்டங்களுக்காகவும் நீண்ட காலக் கடன்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டங்களைச் செயல்படுத்த நிதிநிறையதேவை.

எனவே...............

தங்கள் சேமிப்புகளைத் தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் கடன் பத்திரங்களில் (Debentures) முதலீடு செய்து நாட்டின் முன்னேற்றத்தில் பெரியதொரு பங்கு பெறுங்கள்.

விவரங்களுக்கு,

### தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி லிமிடெட்.,

32, லஸ் சர்ச் சாலை......மயிலாப்பூர்......சென்னை-4.



# அண்ணா எழுதிய உயில்!



தமிழகம் முழுவதும்விழாக் கோலம் கொள்ளக் கூடிய விதமான வளம் கொழித்திட வேண்டும் என்றுவிரும்புகிறேன். அதற்கான வழிகள் யாவை என்பது பற்றி ஆய்வாளர்களிடம் அறிவுரை கேட்டுப் பெறுகிறேன். திட்டம் பல தீட்டப்படுகின்றன. ஆனால் அவைகளை நிறைவேற்றத் தேவைப்படும் பணத்துக்கு இந்தியப் பேரரசிடம் அல்லவா முறையிட வேண்டியிருக்கிறது?

முறையிடுகிறேன் — கனிவும், பணிவும் குறையாமல் — வம்பு வல்லடிப் போக்கு துளியுமின்றி — ஆனால் கிடைக்கிறதா? நிரம்ப! காரணங்கள்! நியாயங்கள்! வாதங்கள்! எதற்கு? இவ்வளவுக்கு மேல் பணம் தருவதற்கில்லை என்பதற்கு! என் செய்வேன்?

அண்ணன் ஏன் எப்போதும் கவலைப்பட்டபடி இருக்கிறார் என்று சில தம்பிகள் கேட்கவே செய்கிறார்கள். நான் கவலைப்படாமல் எப்படி இருக்க முடியும்? ஆகவேதான் —

மாநிலங்கள் அதிக அளவில் அதிகாரங்களைப் பெறத்தக்க விதத்தில் இந்திய அரசியல் சட்டம் திருத்தியமைக்கப்பட வேண்டும்என்பது பற்றி வாய்ப்புக்கிடைக்கும் போதெல்லாம் எடுத்துக் கூறி வருகிறேன்.

இதற்கான நல்லாதரவு நாளுக்கு நாள் வளர்ந்தபடி இருக்கிறது என்பதிலே எனக்குத் தனியானதோர் மகிழ்ச்சி. நமது கழகம் மட்டுமின்றி வேறு பல அரசியல் கட்சிகளும் இப்போது இதனை வலியுறுத்த முன் வந்துள்ளன. அரசியல்கட்சிகளைச் சேராத அறிவாளர் பலரும் அதற்கு ஆதரவு காட்டுகின்றனர். நாம் அரசு நடத்தியதால்கிடைத்திருக்கின்ற நற்பலன்களிலே இதுவும் ஒன்று என்றே நான் கருதுகிறேன்.

—'காஞ்சி' பொங்கல் மலரில்

ஃ ஃ ஃ

வெறும் காகிதத்தில் மட்டும் கூட்டாட்சித் தத்துவமும் —நடைமுறையில் அதிகாரக் குவிப்பும் மென்மேலும் நடைபெறும் ஒரு அரசியல் சட்டத்தின் கீழுள்ள மாநில முதலமைச்சர் பதவியில் இருப்பதில் நான் மகிழ்ச்சியுற்றிருப்பேனா?

இந்த மத்திய — மாநில விஷயத்தில் எனது நண்பர் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாட்டைப் போல் மத்திய அரசை எரிச்சலூட்டவோ— டில்லியுடன் மோதிடத் தகராறுகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவோ நான் ஒரு போதும் அறைகூவல் விட்டு முன் வரவில்லை.

அவை யாருக்கும் நன்மை பயப்பதில்லை!

ஆயினும், உறுதி படைத்த உள்ளம் ஒரு குறிப்பிட்ட காலத்தில் இந்தப் பிரச்சினைக்கு முக்கியமாகத் தேவைப்படும் என்பதும் உண்மைதான்!

ஆனால் பொது மக்களுக்குக் கூட்டாட்சித் தத்துவத்தைப் பற்றிப் போதிப்பதன் மூலமே எண்ணும் இடத்தை நாம் அடைய முடியும்!

இந்தப் பிரச்சினையில், தம்பி — உனது தீவிரமான ஒத்துழைப்பும் — பங்கேற்பும் இருக்குமென்பதிலே எனக்கு நல்லதோர் நம்பிக்கைஉண்டு

தி. மு. கழகம் ஆட்சி பீடத்தில் இருப்பதன் மூலம், தற்போதுள்ள அரசியல் சட்டம் கொல்லைப்புற வழியாக இரட்டை ஆட்சியைப் புகுத்துகிறது என்பதைச் சிந்தனைத் திறன் மிக்க பொது மக்களின் கவனத்துக்குக் கொண்டு வருமானால் — அதுவே அரசியல் உலகிற்குக் கழகம் தரும் உன்னதப் பரிசாய் இலங்கும்.

—('ஹோம்ரூல்' ஏட்டில்)

ஃ ஃ ஃ

தமிழ் நாட்டுக்கு உரிய நிலை — உரிய வளர்ச்சி கிடைக்க வேண்டுமானால், எல்லா அதிகாரங்களும் இந்தியப் பேரரசிடம் குவித்து வைக்கப் பட்டிருக்கின்ற இந்திய அரசியல் முறை மாற்றப் பட வேண்டும்.

அந்தப் பெரிய காரியம்; நம்முடைய காலத்தில்ஐந்து ஆண்டிலே, பத்து ஆண்டிலே முடியுமா? அல்லது அதற்கும் தமிழர்கள் கடுமையாகப் போராட வேண்டி வருமா? — என்பது, டெல்லியில் இராஜ தந்திரம் எந்த அளவிற்கு நிறைந்திருக்கிறது என்பதைப் பொறுத்திருக்கிறது!

இந்தியப் பேரரசில் இன்னமும் இராஜ தந்திரத் துறையில் வல்லவர்கள்இருப்பதாகத்தான் நம்பிக்கொண்டிருக்கிறேன்.

சிற்சில சம்பவங்கள் — அதிலே கூட நமக்குச் சந்தேகம் வரும்படியான சம்பவங்களை ஏற்படுத்திக்கொடுக்கின்ற அளவில் இதைநல்ல இராஜ தந்திர முறையோடு — அந்த இராஜ தந்திரம் என்பதை 'டிப்ளமோசி' என்று எடுத்துக் கொள்ளலாமல், 'ஸ்டேட்ஸ் மென் ஷிப்' என்ற முறையிலே எடுத்துக் கொண்டு மாநிலங்களுக்குரிய அதிகாரங்களை வழங்குவதற்கு அவர்கள் முன்வர வேண்டுமென நான் வேண்டுகோள் விடுகின்றேன்.

இதைச் சொல்லுகின்ற காரணத்தினால்'இந்தியாவின் ஒருமைப் பாட்டுக்கு நான் விரோதி' என்று யாரும் தவறாகக் கருதத் தேவையில்லை.

நம் கையில் ஐந்து விரல்கள் இருக்கின்றன; கட்டை விரல் — மோதிர விரல் — சுண்டு விரல் என்று ஐந்து விரல்களும் தனித் தனியேதான்இயங்குகின்றன ஆனால் பொதுவான ஒரு வேலை என்று வரும்போது— ஐந்து விரல்களும் ஒன்று சேர்ந்து கொள்ளுகின்றன.

மத்திய அரசுக்கும் — மாநில அரசுகளுக்கும் இத்தகைய உறவுதான் இருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

—('தினத்தந்தி' வெள்ளி விழாவில்)

## வாழ்க நீங்கள்!



ஆற்றுக்கும் கடலுக்கும் புவிபிறந்த
அன்றைக்கே தொடர்புண்டு! பசியைப்போக்கும்
சோற்றுக்கும் வயல்சூழ்ந்த சோணாட்டுக்கும்
தொன்றுதொட்டுத் தொடர்புண்டு! வீரத்திற்கும்
ஏற்றமிகு தென்பாண்டி நாட்டி னுக்கும்
என்றென்றும் தொடர்புண்டு! பகைவர் முன்னே
தோற்காத காஞ்சிக்கும் அறிவி னுக்கும்
தொடர்புண்டு! அண்ணாநீ பிறந்த தாலே!

வனத்திற்கு மானுறவு! பெற்றெடுத்து
வளர்த்தமகன் தாய்க்குறவு! அன்பு செய்யும்
மனத்திற்கும் மனிதனுக்கும் உறவுவைத்த
மாமனிதர் யாரென்றால் அண்ணா நீதான்!
பணத்திற்கும் பவிசுக்கும் உறவு கொள்ளும்
பண்பற்ற மனிதர்கள் வாழும் நாட்டில்
குணத்திற்கே வாழ்ந்தவர் நீர்! உம்மைப் போலக்
கொள்கைகளைத் தந்தவர் யார் நாட்டுக்காக?

இந்தியப்பேர் நாட்டினுக்குள் பலபேச் சாளர்
இருந்தார்கள்! இருந்தாலும் அண்ணா உன்வாய்
சிந்துகின்ற பேச்சைத்தான் மக்களெல்லாம்
'டிக்கெட்டு'' வாங்கிவந்து விரும்பிக் கேட்டார்
விந்தைமிகும் சிங்கப்பூர் நாட்டின் முன்னாள்
விவேகமிகு — பிரதமர்தான் என்ன சொன்னார்?
'இந்தவிதம் நேருபிரான் பேச்சைக்கூட
எவருமில்லை காசுதந்து கேட்க' என்றார்!

ஏசுபிரான், நபியைப் போல் அவதரித்த
என்தலைவா! அரசியலில் பகைவ ரெல்லாம்
ஏசுபிரான் எனமாறி ஏசும் போது
ஏசுமொழி நெஞ்சில்வைத்து தாங்கிக் கொண்டீர்
ஆசுகவி காளமேகம் இன்றி ருந்தால்
அநேகக்கவி போட்டிருப்பான்! ஒளியை அள்ளி
வீசுநிலா ஒருநாளில் அழிந்திட் டாலும்
விரியுலகில் உன்கொள்கை அழியுங் கொல்லோ?

காந்திமகான் கருத்ததனை மறந்த தாலே
காந்தியினால் வளர்ந்தகட்சி அழியக் கண்டோம்
மாந்தர்யாம் உம்கருத்தை மறந்தோ மென்றால்
மாநிலத்தில் சிறந்தோராய் வாழ வோமோ?
தீந்தேனால் உடல்ரத்தம் தூய்மை யாகும்!
தி.மு.க. ஆட்சியினால் நாடு வாழும்!
மாந்தருக்குள் சிறந்தவரே! உம் கொள்கையை
மறக்காமல் கடைப்பிடிப்போம் வாழ்க நீங்கள்!

கவிஞர் முத்துலிங்கம்




அன்றாட வாழ்வோடு
இணைந்தது
சிமெண்ட்

தண்ணீர்த் தொட்டிகள்,
வடிகால்களுக்குத் தேவையான
குழாய்கள், நடைபாதைகள்,
காம்பவுண்டுச் சுவர்கள்,
எல்லாம் சிமெண்டால்
கட்டப்படுகின்றன.

உறுதிக்கும்
நீடித்த உழைப்பிற்கும்
உன்னதமானது

செட்டிநாடு
சிமெண்ட்

CHETTINAD BRAND

தயாரிப்பாளர்கள்
செட்டிநாடு சிமெண்ட் கார்ப்பொரேஷன் லிமிடெட்
IS: 269
6, அரண்மனைக்காரன் தெரு, சென்னை-1, போன்: 27256 தந்தி: "BESTCEMENT"
தொழிற்சாலை:
புலியூர் (கரூர்), திருச்சி ஜில்லா போன்: 144 தந்தி: 'CEMENT'

# ஏழைகள் அரசு
# எங்கள் கவிமுரசு!

∴ எங்கள் தமிழகத்தில் புத்தரசு
எண்ணற்ற சாதனை எமக்குப் பரிசு.

∴ 75 மைல்களுக்கு மேலுள்ள பேருந்து
வழித் தடங்கள் தேசியமயமாயின.

∴ ஆகாஷ்வாணி வானொலி ஆனது.

∴ அரசு ஊழியருக்குத் திருமணக் கடன் கிடைத்தது.

∴ சென்னை மாநிலம் 'தமிழ்நாடு' ஆனது

∴ சாதி ஒழிப்பு, கலப்பு மணப் பரிசாய் பூத்தது.

∴ சென்னைக்கு வீராணத்திலிருந்து காவிரி நீர் கொண்டு வர
24 கோடியில் திட்டம.

∴ சேரிகளில் எரியாத வீடுகள் 2500 ஏழையர் பெற்றனர்.

∴ மே நாள், வள்ளுவர் நபிகள் நாயகம் விழா விடுமுறை.

∴ மீனவர் குடும்பத்துக்கு விபத்து நிதி ஆயிரம் தரும் முறை.

∴ வறட்சி நிவாரணத்திற்கு 16 கோடி செலவிட்டது.

∴ வாதாடி டில்லியிடம் 11 கோடியே 25 லட்சம் பெற்றது.

∴ கிராமங்கள் தோறும் குடிநீர் வழங்க 10 கோடி.

∴ தியாகிகள் உதவிப் பணம் 67 பேரிலிருந்து
4000 பேருக்கு வழங்கிய சேதி.

# இது ஏழைகள் அரசு
# எங்கள் கவிமுரசு!

---

(தமிழக அரசாங்கச் செய்தித்துறை வெளியீடு)

## அற்புத அலுமினியம் உற்பத்தி உயர தீவிர திட்டம் தீட்டி அதை ஆவன செய்ய...

மதராஸ் அலுமினியம் கம்பெனி இப்பொழுது- ஈடுபட்டுள்ளது. தனது தற்போதைய உற்பத்தித் திறன் 12,500 மெட்ரிக் டன்களாகும். இதை- 25,000 டன்களென உயர்த்த ஏற்பாடு செய்து வருகிறது.

இத்தாலியை சேர்ந்த மாண்டி காடினி எடிஸன் நிறுவனத்தின் ஒத்துழைப்பால் இயங்கிவரும் இந்த கம்பெனி தனியார் துறையில் மிகப்பெரும் ஸ்தாபனமாக திகழ்ந்து வருகிறது. மேலும், சீக்கிரமே தகடுகள் தயாரிக்கும் உருட்டாலை முதலியன ஸ்தாபிக்கவும் உத்தேசித்துள்ளது. இக்கம்பெனி நமது நாட்டின் அந்நிய செலாவணியை பெருமளவு மிச்சப்படுத்துவதுடன் அதன் சீரமைப்புப் பணியிலும் பெரும்பங்கு கொண்டுள்ளது.

MALCO

**மதராஸ் அலுமினியம் கம்பெனி லிமிடெட்.,**
பதிவு காரியாலயம் : கோயம்புத்தூர்.

தொழிற்சாலை — மேட்டூர் அணை

